மண்ணுள் சரித்திரம்

ஆசிரியர் :

பேராசிரியர் S. சுந்தரராஜன், M. A; M. Litt;
சரித்திர, பொருளாதாரத் துறைத் தலைவர்,
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

[விலை ரூ. 2

மண்ணுள் சரித்திரம்

பொருளடக்கம்

முகவுரை.

மண்ணுள் சரித்திரம் என்று பெயரிடப்பெற்ற இந்நூல் தமிழ் மொழியில் ஒரு புது முயற்சியாகும். இதுகாறும் தொல் பொருள் இயல் ஆராய்ச்சித் துறையில் உலக முழுவதிலும் மண்ணை அகழ்ந்து ஆங்காங்குக் கண்டுபிடிக்கப்பெற்ற உண்மைகள் முழு நூலாகத் தமிழ் மொழியில் வந்ததில்லை. இவ்வாராய்ச்சித்துறை இன்று உலகில் எல்லா நாடுகளிலும், குறிப்பாக நமது இந்திய நாட்டிலும், மிக முன்னேற்றப் படிகளைக் கடந்து சென்றிருக்கிறது. இதனால் வெளியான உண்மைகள் பல. அவை வியப்பிற்கும் திகைப்பிற்கும் உரியன; ஒருகால் நம்ப முடியாதவை என்று கூடச் சிலரால் கருதக் கூடியவை. அத்தகைய பேருண்மைகள் பல வெளி யாகி நமது பண்டை நாகரிகத்தின் பெருமையை நாம் உணர்ந்து தலை நிமிர்ந்து நிற்குமாறு செய்துள்ளன. அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது நமது இன்றைய நாகரிகம் ஓரளவு பெருமை குன்றியதாயும் தோன்றக் கூடும். இத்தகைய செய்திகள் பல இந்நூலில் திரட்டித் தரப்பட் டிருக்கின்றன.

குறிப்பாக மேனாடுகளில் மத்தியதரைக் கடலைச் சார்ந்த பகுதிகளிலும், மத்திய அமெரிக்காவிலும், மத்திய கிழக்கு நாடுகளில் எகிப்து, மெசபத்தோமியா முதலிய இடங் களிலும், நம்நாட்டில் சிந்து சமவெளி, தட்சசீலம், நாளந்தா, மகதம், ஆந்திரம், தமிழ்நாடு இவற்றிலும் தொல்பொருள் துறை ஆராய்ச்சியின் பயனாக வெளியாகியுள்ள வியத்தகு செய்திகள் இதில் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. அன்றி யும் இந்தப் பல்வேறு பகுதிகளின் நாகரிகங்கள் எல்லாம் இந்தியாவிலிருந்தே பரவின என்பதையும், வரலாற்றுக் காலத்திற்கு முன்பு பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் பரவியிருந்த நாகரிகம் திராவிட அல்லது தமிழ் நாகரிகமே என்பதும், இந்நூலில் சான்றுகளுடன் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. பண்டைத் திராவிட மொழி அல்லது தமிழ் மொழியின் தொடர்பான மொழிகளும் சொற்களும், அம்மொழி யாளரின் பழக்க வழக்கங்களும் பண்பாடும், உலகெங்கிலும் மிகப் பழங்காலத்திலேயே படையெடுத்துச் சென்று விட்டன என்பது இக்காலத்தில் சில அறிஞர்களது கருத்து. இக்

கருத்தை வலியுறுத்தும் முறையில் தொல்பொருள் ஆராய்ச்சி உண்மைகள் அமைந்துள்ளன. இது நமக்கு அளவு கடந்த பெருமையும் மகிழ்ச்சியும் தருவதாகும்.

இந்நூலை நான் வெளியிடுவதற்கு எனக்கு ஊக்கமளித்து உறுதுணையாய் இருந்த நண்பர்கள் இருவரின் உதவியை நான் மறத்தற்கியலாது. முதலாவதாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தொல் பொருள் இயல் துறைத் தலைவர் ஸ்ரீ T. V. மகாலிங்கம், M. A., D. Litt., அவர்கள் நூல் முழுவதையும் கையெழுத்துப்படி உருவத்திலேயே பார்வையிட்டுப் பல அரிய கருத்துக்களை வழங்கித் திருத்தங்களையும் செய்தார். அதற்காக அவர்க்கு எனது உளமார்ந்த நன்றி. இரண்டாவதாக எனது நண்பர், மதுரைக் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் R. கிருஷ்ணமூர்த்தி, M. A., L. T., B. O. L., அவர்கள் இந்நூலைச் செவ்விய முறையில் அமைத்து, முழுவதும் பார்வையிட்டு, நடையை நன்கு செப்பனிட்டு, அரிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அளித்தார்; அன்றியும் அச்சுப் பிரதிகளையும் திருத்தி யுதவினார். அவர்க்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இந்நூல் கல்லூரி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்னும் நோக்கத்துடன் எழுதப் பெற்றது. நூலில் இடம் பெற்றுள்ள செய்திகள் பொது அறிவை வளர்ப்பதுடன், நமது பண்டைப் பெருமையை நாட்டவும் உதவுபவை யாதலால், இது யாவரும் விரும்பிப் படிக்க ஏற்றதாக உள்ளது என்பதில் ஐயமில்லை. நூலின் நடையும், மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒருசிறந்த உரை நடைக்கு எடுத்துக்காட்டாகவும், உரை நடைப் பயிற்சிக்கு உறுதுணையாகவும் அமைந்துள்ளது என்பது எளிதில் புலப்படும். ஆதலின் இதன் இச்சிறப்புக்களைக் கருதி அறிஞர்கள் இதனைப் படித்துப் பயனடைந்து எனது முயற்சியை ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன். இதனால் அவர்களது நன்றிக்கும் நான் உரியவனாவேன்.

இங்ஙனம்,

ஆசிரியர்,

S. சுந்தரராஜன்.

அமெரிக்கன் கல்லூரி,
மதுரை
15—5—57.

மண்ணுள் சரித்திரம்

1. தோற்றுவாய்

மக்களினத்தின் பழஞ் சரித்திரத்தில் பெரும்பகுதி மண்ணுள் மறைந்து கிடக்கின்றது என்று கூறின், அது சிலருக்கு வியப்பாக இருக்கலாம், அல்லது விளங்காமலும் இருக்கலாம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பல துறைகளிலும் முன்னேறியிருந்த பல்வேறு மக்கள் தொகுதிகளின் நாகரிகச் சின்னங்கள், உலக முழுவதிலும் பல விடங்களில் மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கின்றன என்பது இப்பொழுது வரலாறு அறிந்த உண்மையாகும். சரித்திர காலம் என்று குறிக்கப்படும் காலத்திற்கு முன்பு மக்களும் நாகரிகமும் இல்லாமல் இருந்துவிடவில்லை. சரித்திர காலம் என்பது மக்களால் அவர்களது வரலாறு ஏட்டில் எழுதிவைக்கப்பட்ட காலம். அதற்கு முன்பு அஃது எழுதி வைக்கப்படவில்லையாயினும், மக்கள் பல இடங்களில் உயர்ந்த நாகரிக நிலையில் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதற்குச் சான்றுகள் அல்லது பழஞ் சின்னங்கள் பூமிக்கடியில் புதைந்து கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை அண்மைக்காலத்தில் அகழ்ந்தெடுத்து, அழிந்துபோன நாகரீகத்தின் உண்மையை அறிஞர்கள் கண்டு கூறியிருக்கிறார்கள்.

தொல்பொருள்களின் சிறப்பு :

பொதுவாகவரலாற்றுக்கு அடிப்படையாக இக்காலத்தில் இவ்வாறு மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கும் பொருள்களும் முக்கியச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன. ஏன்? ஏட்டில் எழுதப்பட்டதைவிட இவை மிக முக்கியமான, மறுக்கவும் அசைக்கவும் முடியாத சான்றுகளாக இருக்கின்றன. ஒரு வகையில் ஏட்டுக் குறிப்பைவிடப் புதைபொருள் சான்றே அதிக உண்மையானது என்னலாம். ஏனெனில் ஏட்டில் எழுதுவோர் உள்ளது உள்ளபடியே, அல்லது நடந்தது நடந்தபடியே எழுதியிருப்பார்கள் என்று கூறமுடியாது' சில செய்திகளை அவர்கள் திரித்தும், மறைத்தும், கூட்டியும், குறைத்தும் எழுதியிருக்கக்கூடும். இஃது அறியாமையினால், அல்லது வேண்டுமென்றே கூட, விருப்பு வெறுப்புகளினால் ஏற்பட்டதாக இருக்கலாம். ஆனால் புதை பொருள் சான்று இவ்வாறன்றி உண்மையான வரலாற்றையே கூறும்.

பண்டை நாகரிக நாடுகள் :

உலகில் இந்தியா, சுமேரியா, பாபிலோனியா, அசிரியா, எகிப்து, கிரீஸ், அமெரிக்கா முதலிய நாடுகளில் இத்தகைய புதைபொருள் அடிப்படையில் ஆராய்ந்ததன் பயனாய், ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே அங்குப் பழம் பெரும் நாகரீகங்கள் நிலைத்திருந்தன என்பது தெளிவாகியிருக்கிறது. அந்நாடுகளின் சரித்திரத்தைச் செப்பனிட்டு அமைப்பதற்குப் புதைபொருள் ஆராய்ச்சி அல்லது தொல்பொருள் இயல் (Archaeology) என்பது மிகவும் பயன்பட்டுள்ளது. அதனால் அந்நாடுகளின் பெருமை உலக முழுவதும் பரவியுள்ளது. அதற்கு முன்பெல்லாம்

கிரீஸ், ரோம் ஆகிய இரண்டு நாடுகள் தான் மிகப் பழைய நாகரிகங்கள் உடையனவாக மேனாட்டவர்களால் கருதப் பட்டன. ஆனால் அவற்றின் நாகரிகங்கள் 3000 ஆண்டு களுக்கு இப்பாற்பட்டவையே. இந்தியா, சுமேரியா, எகிப்து முதலிய நாடுகளின் நாகரிகமோ 5000 ஆண்டு முதல் 7000 ஆண்டு வரை பண்டைமை யானவை. அவை மறைந்து மண்ணுக்கடியில் போய்விட்டன. இந்நாடு களில் சில விடங்களில் மண்ணை யகழ்ந்து பார்த்தபோது முற்கூறிய மிகப்பழங் காலத்திற்கறிகுறியான பல வியத் தகு பொருள்கள் கிடைத்தன.

தொல்பொருள் ஆராய்ச்சி:

முதன்முதலில் இத்தகைய தொல்பொருள் ஆராய்ச்சி மேனாடுகளில் தான் தொடங்கப் பெற்றது. கிரீஸ், மெக்ஸிகோ, பெரு, குவாடிமாலா முதலிய இடங்களிலும், மத்திய கிழக்கு நாடுகள் எனப்படும் சிறிய ஆசியா, எகிப்து, பாலஸ்தீனம், ஈராக் முதலிய நாடுகளிலும் மண்ணுக்குள் புதைந்து மறைந்து கிடந்த மிகப்பழம் பொருள்கள் பல கண்டெடுக்கப்பட்டன. அவை நகரங் கள், கோயில்கள், அரண்மனைகள், கல்லறைகள், சிற்பங் கள், ஓவியங்கள், விலையுயர்ந்த கற்கள், நகைகள், பளிங்குக் கற்சிலைகள், மண்டை ஓடுகள், எலும்புகள், ஏடுகள் முதலி யனவாகும். சில சமயங்களில் நிறைந்த செல்வக் குவியல் களும் அங்கு மறைந்திருந்ததுண்டு. அவையும் கண் டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய உயர்ந்த நாகரிக வாழ்க்கை வாழ்ந்த மக்கள், நமக்குக் கதைகளிலும் புராணங்களிலும் வரும் பாத்திரங்களைப் போலவே தோன்றக்கூடும். எனினும் அவர்கள் உண்மையான மக்களே. அவர்களுள் மன்னர்களும், சக்கரவர்த்திகளும், துறவிகளும், மதத் தலைவர்களும், வீரர்களும், கலைஞர்

களும், தொழிலாளர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் படைத்த உன்னத நாகரிகமே அது. இன்று மிக உயர்ந்த நாகரிக நிலையில் வாழ்பவர்களாக எண்ணிக் கொள்ளும் நம்மை அது வியப்பில் ஆழ்த்தும் தன்மை வாய்ந்தது.

ஆராய்ச்சியாளர் அருந்தொண்டு :

இங்ஙனம் மறைந்துள்ள நாகரிகத்தின் சின்னங்களை மண்ணுக்கடியிலிருந்து மீண்டும் அகழ்ந்தெடுத்து நமக்குப் புலப்படுத்தும் அரும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களே தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநர் எனப்படுவோர். இவர்கள் மேடுகளில் பூமிக்கடியில் புதைந்திருந்த பழம் பொருள்களைப் புறத்தே கொணர்ந்து ஆராய்ந்து அவற்றிற்குரிய மக்களது தன்மைகளை நமக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள். இங்ஙனம் செய்வது எளிய செயலன்று. இதற்கு அதிக உழைப்பும், சிறப்பான பயிற்சியும், கூர்த்த அறிவும்,மிகுந்த பொறுமையும், மனவுறுதியும், தைரியமும் கூட வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிலிருந்து மறைந்தொழிந்த மொழிகளைப் படித்தறியும் தனித்திறமையும் இவர்களுக்கு வேண்டும். அம்மொழிகள் இப்பொழுது நாம் பேசும் எம்மொழிக்கும் சிறிதும் தொடர்புடையன அல்ல. அம்மொழி எழுத்துக்கள் எளிய சித்திர எழுத்துக்கள் அல்லது உருவெழுத்துக்கள் (Pictograph) என்னும் எழுத்து வகையைச் சேர்ந்தவை. சாதாரண மக்களுக்கு அவை சிறிதும் விளங்கா. ஆனால் தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநர் அவற்றைப் படித்துப் பொருள் கூறும் திறமை பெற்றிருக்கிறார்கள். அது போலவே ஒரு சிலையின் வயதையும் அது எந்தக் காலத்தில் எந்த வமிசத்து அரசர்களால் செதுக்கப்பட்டது என்பதையும் அவர்கள் கூறிவிடு

வார்கள். ஒரு சிறு பானை ஓடு, கல், அல்லது இடிந்த சுவர், இவற்றின் வயதையும் அவர்கள் கூறிவிட முடியும். இங்ஙனம் பழம் பொருள்களின் காலத்தை அல்லது வயதைக் கணித்துக் கூறுவதற்கு உறுதுணையாக இன்றைய விஞ்ஞானம் நமக்கு உதவுகிறது. எங்ஙனமெனின் ஐஸடோப்புகள்* எனப்படும் நவீன கண்டுபிடிப்புகளின் உதவியால் விஞ்ஞானிகள் எப்பொருளின் வயதையும் சரியாகக் கூறிவிடுகிறார்கள். மண்ணில் புதைந்திருக்கும் பொருள்களின் வயதை, அம் மண்ணின் வயதைக் கொண்டு அறிகிறார்கள்.

ஆராய்ச்சியாளர் தொல்லைகள் :

தொல்பொருள்களைத் தோண்டி யெடுப்பதில் அளவற்ற தொல்லைகள் உண்டு. மழையையும், வெயிலையும் பாராமல் மண்ணுக்கடியில் குடையும் போது அங்குள்ள புழு பூச்சிகள் கடிப்பதையும், கொட்டுவதையும் பொருட்படுத்தாமல், திறந்த வெளியில் பலமாத காலம் கூடாரங்களில் தங்கியிருந்து இவர்கள் வேலை செய்யவேண்டும். வேலை செய்யுமிடத்திற்குச் செல்வதும் சில சமயங்களில் எளிதன்று. அது நீரும் நிழலும் அற்று, உடலை வாட்டும் கொடிய வெயில் நிறைந்த பாலைவனத்திலோ, சாவு பதுங்கியிருக்கும் சதுப்பு நிலத்திலோ, கொடிய விலங்குகள் மறைந்திருக்கும் அடர்ந்த காடுகளிலோ அமைந்

* ஐஸடோப்புகள் என்பவை, அணுசக்தி யுகத்தின் அற்புத சஞ்சீவி போன்றவை. ஒரே மூலகம் அல்லது தனிப் பொருளில் வெவ்வேறு அணு எடையுள்ள அணுக்கள் இருப்பின், அவை ஐஸடோப்புகள் எனப்படும். இவற்றைச் செயற்கையாகவும் உண்டாக்கலாம். இயந்திரத் தொழில், மருத்துவம் முதலிய பல துறைகளில் இவை மிகவும் பயன்படுகின்றன.

திருக்கும். அங்குப் பெரும்பாலும் குதிரைகள் அல்லது கோவேறு கழுதைகள் மீது ஏறித்தான் செல்லவேண்டும். அவையும் செல்லாத இடங்கள் உண்டு. அங்குப் பல மைல்கள் வருந்தி நடந்தே போக வேண்டியிருக்கும். சில சமயங்களில் அது நெடுநாட் பயணமாகவும் இருக்கும். இப்படியெல்லாம் வருந்தி, மலைமலையாக மண்ணைத் தோண்டி அப்புறப்படுத்தி, ஆயிரக்கணக்கான மண்வெட்டிகள், கடப்பாரைகள், கல்கொத்திகள் முதலியவற்றைக் கொண்டு குடைந்தும், ஒரோ ஒருகால் அவர்கள் பட்ட பாடெல்லாம் வீணாகி விடுவதும் உண்டு. ஒவ்வொரு சமயம் நல்லூழ் வயத்தால் தொல்பொருள்கள் திரள் திரளாகவும் கிடைக்கும்.

உழைப்பின் பயன் :

இவ்வாறெல்லாம் உழன்று பெற்ற பொருள்களை அவர்கள் சேமித்து, ஒன்றுகூடி ஆராய்ந்து, முன்னுக்குப் பின் முரணின்றி, ஒருதலையாக இது இன்னது, இதன் பயன் இது, இவற்றின் பொருள் இது, இவற்றைக் கையாண்ட மக்கள் இத்தன்மையர் அவர்களது காலம் ஈது, நாகரிகம் இத்தன்மைத்து என்றெல்லாம் முடிவு கட்டுவர். இங்ஙனம் தொல்பொருள் ஆராய்ச்சியானது மிகப் பழைய வரலாற்றை—சரித்திர காலத்திற்கு மிக முந்திய வரலாற்றை—அறிய உதவுகிறது. ஆகவே இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் நமக்குப் பெரிதும் நன்மை செய்பவராவர். அவர்களை நாம் எவ்வளவு பாராட்டினும் தகும். ஒரு வகையில் அவர்கள் இறந்தவர்களை மீண்டும் நம் கண்முன் புத்துயிர் பெற்றெழச் செய்கிறார்கள் என்று கூறுவது பொருந்தும். ஏன்? இருள் மூடி மறைந்தும் மறந்தும் போன ஒரு பழைய உலகையே அவர்கள் மீண்டும் நம்முன் கொண்டுவந்து நிறுத்து

கிறார்கள் எனின் அது மிகையாகாது. நாம் இழந்த இந்த உலகங்களை யெல்லாம் அவர்கள் தம் சலியா உழைப்பினாலும்திறமையாலும் நமக்கு மீட்டுத் தருகிறார்கள்.

இந்தியாவில் தொல்பொருள் இயல்:

நம் நாட்டிலும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை ஒன்று 1862-ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. கானிங் பிரபு அரசப்பிரதிநிதியாக இருந்தபோது, வட இந்தியாவில் உள்ள பழம்பொருள்களை, (கட்டிடங்கள், கல்லறைகள், கோயில்கள், அரண்மனைகள் ஆகிய நினைவுச் சின்னங்களை) பாதுகாப்பதற்காக இத்துறை தொடங்கப் பெற்றது அப்பொழுது இத்துறையின் முதன்மையான நோக்கம் தொல்பொருள்களைப் பாதுகாப்பதே. பிறகு சில ஆண்டுகள் கழிந்த பின்னரே, புதை பொருள்களைத் தோண்டி யெடுக்கத் திட்டமிடப்பட்டது. 1870-இல் தொல் பொருள் இயல் ஆராய்ச்சித் துறைக்கு ஒரு தலைமை அதிகாரி (Director General) நியமிக்கப்பட்டார். முதல் முதலில் அப்பதவியைத் தாங்கியவர் கன்னிங்காம் என்பவர். முதலில் வட இந்தியாவில் வரலாற்றுச் சிறப்புடைய இடங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தலும், பழைய நினைவுச் சின்னங்களில் (கட்டிடங்கள்) தரைப் படங்களைத் தயாரித்தலுமே இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்திருந்த சீன யாத்திரிகர் யுவான்சுவாங் எழுதிய குறிப்புக்களில் கூறப்பெற்றிருந்த இடங்களைப் பற்றிக் கன்னிங்காம் ஆராயலானார். 1874-இல் மேற்கிந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் உள்ள பழைமையான இடங்களைப் பற்றியும், பொருள்களைப் பற்றியும் விவரங்கள் திரட்டப் பெற்றன. இவ்வாராய்ச்சியை நடத்த டாக்டர் பர்ஜெஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். பிறகு 1885-இல்

இவரே இந்தியா முழுவதற்கும் இத்துறையின் தலைவ ராஞர். இவர் 1889-இல் ஓய்வு பெற்றுச் சென்ற பிறகு பல ஆண்டுகள் இத்துறை கேட்பாரற்றுக் கிடந்தது. 1902-இல் சர் ஜான் மார்ஷல் என்பவர் இத்துறையில் மீண்டும் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர்தான் பல முன்னேற்றங்கள் உண்டாயின. அரசாங்கம் ஆண்டு தோறும் தொல்பொருள் ஆராய்ச்சிக்கென ஓர் இலட்சம் ரூபாய்களை ஒதுக்கிற்று. 1904-இல் மத்திய சட்ட சபையில் தொல்பொருள் பாதுகாப்புச்சட்டம் நிறைவேறியது. இதன்படித் தொல் பொருள்கள் சிதைந்துவிடாமல் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கப்பட்டன. ஆராய்ச்சி யும் அதிகமாக நடந்தது. 1914-இல் முதல் உலக மகா யுத்தம் தோன்றியவுடன் இத்துறையின் வேலைகள் தடைப்பட்டன. மீண்டும் யுத்தம் முடிந்ததும் 1919-இல் மத்திய அரசாங்கம் இத்துறையை நன்கு கவனித்து வரலாயிற்று.

வெற்றிகள்:

தொடக்கம் முதலே இத்துறையானது மௌரியர் காலம் முதல் உள்ள பழம் பொருள்களை நன்கு ஆராய்ந் தும் பாதுகாத்தும் வந்தது. அக்காலத்திற்கு முன்பு இங்கு வந்த ஆரியர்கள் அதிக முற்போக்கான நாகரிக முடையவர்களாய் இருந்தார்கள் என்பதும், அந்த நாக ரிகத்தை அவர்கள் இங்குப் பரப்பினர்கள் என்பதும் வரலாறு அறிந்த உண்மை. எனினும் அந்த நாகரிகம் எப்படி இருந்தது என்பதற்குச் சான்ருன அறிகுறிகள் ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. புத்தர் காலத்திற்கு முன்பு இந்தியாவில் இருந்த ஆரிய நாகரிகத்தின் தன்மை விளங்க வில்லை. ஆரியர்களுக்கும் முன்பு இங்கிருந்த நாகரிகம் இன்னமும் உயர்வாக இருந்தது

என்பதைப் பற்றி ஒருவரும் கனவுகூடக் கண்டதில்லை. சிந்துவெளி நாகரிகத்தை சர் ஜான் மார்ஷல் கண்டு பிடித்த பிறகு நமது பழைய எண்ணங்கள் எல்லாம் மாறி விட்டன. மொகஞ்ச தாரோ, ஹாரப்பா என்ற இடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த நாகரிகம், இந்திய நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் தன்மையில் ஒரு புதுமையைப் புகுத்திவிட்டது. 1924-இல் சர் ஜான் மார்ஷல் அங்குத் தாம் கண்டுபிடித்தவைகளைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:—

"இதுவரையில் இந்தியாவானது உலகத்தில் அதிக பழைமையில்லாத நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. கிரீஸ் தேசம் தனது உச்ச நிலையைக் கடந்து, மெசபத்தோமியா, எகிப்து ஆகிய பேரரசுகள் மறைந்து, இவை எல்லாம் மக்கள் மனதிலிருந்து மறந்துபோன காலமாகிய கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய சில சின்னங்களைத் தவிர, அதற்கும் முந்திய சின்னங்கள் இந்தியாவில் இதுவரை கிடைக்கவில்லை. புத்தர் வாழ்ந்துவந்த இராஜக்கிருகத்தின் மதில்களும் நாகரிகமற்ற பழைய கற்கால, புதிய கற்காலக் கருவிகளும் மட்டும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஆனால் இப்பொழுதோ ஒரே தாவுதலில், அதற்கும் 3000 ஆண்டுகள் முந்திய ஒரு பழைய நாகரிகத்தின் சின்னங்களைக் கண்டுபிடித்துவிட்டோம். ஆகையால் இந்திய நாகரிகத்தைப் பற்றிய நம் அறிவு 5000 ஆண்டுகளுக்கும் முன்னோக்கிச் செல்லுகிறது. கிறித்துவிற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவிலும் பஞ்சாபிலும் மக்கள் நன்கு அமைக்கப்பட்ட நகரங்களில், மற்றப் பழைமையான நாடுகள் அறியாத உன்னத நாகரிகத்துடனும், உயர்ந்த கலைகள், தொழில்கள், மிக வளர்ச்சியுற்றிருந்த சித்திரஎழுத்துமுறை முதலியவற்றுடனும்,வாழ்ந்து வந்தார்கள் என்பது நிலைநாட்டப்பட்டுவிட்டது."

உலகத் தொடர்பு:

சர் ஜான் மார்ஷல் வரலாற்றுப் புகழ் பெற்ற பல பழைய இடங்களைத் திட்டமிட்டு அகழ்ந்து அரும்பெரும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். சீன துருக்கிஸ்தானத்திலும் பலுசிஸ்தானத்திலும் இதன் பின்னர் செய்யப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சிகள், மேற்கூறிய சிந்து வெளி நாகரிகத்தோடு தொடர்புடையனவாய்க் காணப்பட்டன. சிறிய ஆசியாவில் 5000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சுமேரிய நாகரிகம் இதன் தொடர்புடையது. அங்கெல்லாம் கண்டெடுக்கப்பட்ட பன்னிறப் பாண்டங்களும் பலவகைப் பொருள்களும் இதை வலியுறுத்துகின்றன. நம்நாட்டில் தொல்பொருள் ஆராய்ச்சியை இன்னமும் செம்மையாகத் திட்டமிட்டுச் செய்யவேண்டியுளது. ஏனெனின் ஆரியர்கள் இங்கு வருவதற்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகள் முன்பே மொகஞ்ச தாரோ, ஹாரப்பா தவிர, மற்ற இடங்களில் பரவிக் கிடந்த நாகரிகத்தைப் பற்றிய குறிப்புக்கள் அதிகம் கிடைக்கவில்லை. இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள அரசர்கள், நகரங்கள் முதலியவையற்றி மண்ணுக்கடியில் மறைந்திருக்கும் செய்திகளை நாம் இன்னமும் அறியவில்லை; முதலில் இங்குக் குடியேறிய ஆரியர்களது இருப்பிடங்களாகிய பஞ்சாப், கங்கைச் சமவெளிகளை அகழ்ந்து பார்க்கவில்லை. சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் புத்தர் காலத்திற்கும் இடையில் உள்ள சுமார் 2000 ஆண்டுகள் பற்றி நமக்கு அதிகம் தெரியவில்லை. கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. நான்காம் நூற்றாண்டு வரை உள்ள செய்திகளும் சரிவரத் தெரியவில்லை. இவ்விடை வெளிகள் வரலாற்றில் இருண்ட காலங்களாகவே இன்னமும் உள. இவற்றின் மீது ஒளி வீசி, வரலாற்றைத் தொடர்பு படுத்தி அமைக்கத் தொல்பொருள் இயல் துறை ஒன்றினால்தான் இயலும். அதற்

காகப் பழம் புகழ்பெற்ற இடங்களாகிய சிராவஸ்தி, கங்கை, நருமதை முதலியவற்றின் சமவெளிகளை ஆராய வேண்டும். இக்குறைகளை நிரப்புவதற்குத் திட்டமிட்டு வேலை செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

தொல்பொருள்களின் தொன்மை:

தொல்பொருள் இயல் என்பது வரலாற்றைப் போல ஒரு குறிப்பிட்ட காலத்தில் தொடங்குவதன்று. மக்கள் இனம் தோன்றியது முதல் அதன் வேலையும் தொடங்கு கிறது. மனிதன் இன்றுள்ள உருவத்துடன் இவ்வுலகில் தோன்றி ஐந்து இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன. அது முதல் அவன் வாழ்ந்த இடங்களில் அவன் கையாண்ட கருவிகள், வளர்த்த நாகரிகம், பேணிய கலைகள், வாழ்ந்த வகை ஆகியவற்றை ஆராய்வதே தொல்பொருளியலின் வேலை. வரலாற்று ஆசிரியர்களால் இவ்வளவு பழைய காலத்தைப் பற்றி ஒன்றும் அறிய முடியாது; அதில் அவர்கள் கருத்தும் செலுத்த மாட்டார்கள். தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள்தான், வரலாற்றுக்காலம், வரலாற்றுக்கு மிகமிக முற்பட்ட காலம் ஆகிய இரண்டிலும் கருத்தைச் செலுத்தி அவற்றை ஆராய்ந்து அறிவொளி வீசுபவர்கள்.

தென்னிந்திய வரலாறும் தொல்பொருளும்:

தென்னிந்தியாவில் மறைந்த வரலாற்றை மீட்டுத் தருவது அவ்வளவு எளிய செயல் அன்று. ஏனெனின் தென்னிந்தியா வரலாற்றுக் காலத்துடன் தொடர்பு கொண்டது கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தான். அக் காலத்திய வரலாறு கூட நமக்கு இன்னமும் சரிவரத் தெரி யவில்லை. அதற்கும் முந்திய தென்னிந்திய வரலாறு நமக்குச் சிறிதும் கிடைக்கவில்லை. ஆனால் அதனை

ஆராய்வதற்குரிய பொருள்கள் இங்கு அநேகம் உள. ஏறத்தாழ கி. மு. 2000 முதல் கி. பி. 1200 வரை உள்ள காலத்திற்குரியஆயிரக் கணக்கான தொல்பொருள்(பெருங் கற்) சின்னங்கள் புதைந்துள்ள இடங்கள் இங்கு ஏராள மாக உண்டு. ஆனால் அவற்றைப் பற்றி நமக்கு இன்ன மும் ஒன்றும் தெரியாது. பரந்த பழங் கற்காலத் தொழில் களைப் பற்றிய குறிப்பு விவரங்களையும் திரட்டி ஆராய வேண்டியுள்ளது. சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரம் (பல்லவபுரம்), திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூர், பாண்டிச்சேரி அருகில் கடற்கரையில் உள்ள அரிக்கமேடு முதலிய இடங்களில் பழம் பொருள்கள் பல தோண்டி யெடுக்கப்பட்டுள்ளன. அவை பழந் தென் னிந்திய வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் துணையாய் உள்ளன. மேலும் இலக்கியத்திலும் வரலாற்றிலும் புகழ் பெற்ற பல இடங்களையும் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர் திட்டமிட்டு ஆராய வேண்டியுளது. எடுத்துக் காட்டாகச் சோழர்களது பழம்பெரும் தலைநகரங்களாகிய காவிரிப்பூம்பட்டினம், உறையூர், பாண்டியர் தலைநகராகிய மணலூர், சிலப்பதிகார காலத்து மதுரை முதலிய இடங் களை அகழ்ந்தெடுத்து ஆராயலாம்.

இனிச்செய்ய வேண்டுவது :

இதுவரையில் நம் நாட்டில் கிடைத்துள்ள புதை பொருட்செல்வம் அதிக மதிப்புடையது. அது நாடு முழுவதும் பரந்தும் மிகுதியாகவும் உள்ளது. புதை பொருட் செல்வத்தை ஆராய்வதால் தான் நாட்டின் உண்மை வரலாறு விளங்கும். எனவே வரலாற்றிற்கும் தொல் பொருள் இயலுக்கும் நெருங்கிய இணைபிரியாத தொடர்பு உண்டு. நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, நமது அரசாங்கம் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையை

ளாக்குவித்துளது. அது நமக்குப் பெருமையளிக்கிறது. இதனை மேலும் நன்றாகச் செய்வதற்கு, பயிற்சி பெற்ற மக்கள் பலர் வேண்டும்; பயிற்சிக் கூடங்கள் வேண்டும்; அரசாங்கமும் நிறையப் பொருள் செலவிடவேண்டும்; இறுதியாகத் திட்டமிட்டுத் தொடர்ச்சியாகப் பல இடங்களைத் தோண்டி ஆராயவேண்டும். இவ்வாறெல்லாம் செய்யின், நம்நாட்டின் பண்டைப் பெருமை குன்றின் மேல் இட்ட விளக்குப் போல உலக முழுவதும் பரவும். மக்களினம் முதலில் தோன்றி வளர்ந்து நாகரிகமடைந்த நாடுகளில் ஒன்றாக நம்நாடு நிலைநாட்டப்படக் கூடும். அதற்கான அறிகுறிகளும் சான்றுகளும் இப்பொழுது சில கிடைத்துள்ளன. அறிஞர் பலரும் இது உண்மை என்றும் கருதுகிறார்கள். அப்படியானால் நம் நாட்டின் பெருமை இணையற்றது என்பதில் ஐயம் என்ன?

---

2. மேனாடுகளில் தொல்பொருள் ஆராய்ச்சி

(i) மத்தியதரைக்கடல் நாடுகள்

கிரேக்க நாட்டுப் பழங்கதைகளில் 'டிராய்' (Troy) என்னும் நகரைக் கிரேக்கர்கள் பத்து ஆண்டுகளாக முற்றுகையிட்டுப் பிடிக்க முடியாமல் ஒரு சூழ்ச்சியால் உள்ளே நுழைந்து அழித்துப் படுநாசமாக்கியதாகக் கூறப்படுகிறது. மேனாட்டுச் சரித்திர காலம் என்று சொல்லப்படும் கி. மு. 8-ஆம் நூற்றாண்டுக்கு எத்தனையோ காலம் முன்பு இந்த நிகழ்ச்சி நடந்ததாகப் பழங்கதைகளாலும், செவிவழிச் செய்திகளாலும் தெரிகிறது. இப்பழங் கூற்றுக்கள் முற்றிலும் பொய் என்று சிலர் எண்ணினார்கள். ஆனால் வேறு சிலர் கிரேக்க நாட்டுப் புகழ் பெற்ற ஆசிரியராகிய ஹோமர்*

---

* இவர் கி. மு. 1000-க்கு முன்பு வாழ்ந்தவர் என்று கூறுவர்.

என்பவர் எழுதிய இலியட், ஒடிஸ்ஸி என்ற இரண்டு மாபெரும் காப்பியங்களில் இச்செய்தி கூறப்பட்டிருப்பதால் இது முற்றிலும் உண்மை என்றே நம்பினர்கள். நம்பினல் போதுமா? அந்த நம்பிக்கை பிறருக்கும் ஏற்படுவதற்கு வேறு சான்று ஏதாவது இருக்கவேண்டுமன்ரோ?

இளமைக் கனவு:

பழைமையில் ஊறிப் போனவர்களுக்கு நெடுங்காலமாக இக்காவியங்களில் கூறப்பட்ட செய்திகளுக்குக் கண்கூடான சான்று ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்களுள் இவற்றைப் பற்றித் தன் சிறு வயதில் கேள்வியுற்றும், படித்து மகிழ்ந்தும் இறும்பூது எய்திய ஜெர்மானியச் சிறுவன் ஒருவன் இவற்றை உண்மை என்றே உறுதியாக நம்பினன். அவன் பெயர் 'ஹெின்ரிச் சிலீமன்' (Henrich Schliemann) என்பது. அவன் சிறுவயதில் காணும் கனவெல்லாம் நிலத்தைத் தோண்டுவதும், புதையல் எடுப்பதுமாகவே இருக்கும். அதற்குக் காரணம் அவன் ஊரில் புதையல் பற்றிய கதைகள் பல வழங்கி வந்ததுதான். இதைப் போன்ற கனவு ஒன்று அவன் பிற்கால வாழ்க்கையில் நனவாகவே மாறியது தான் வியப்பினும் வியப்பு. அஃது எப்பொழுது எனில் கிரேக்கக் கதைகளில் கூறப்பட்ட 'டிராய்' நகரத்தைக் கண்டுபிடிக்க வேண்டி அவன் பெரியவனை பிறகு நிலத்தை அகழ்ந்த போதுதான்.

டிராய் எங்கே?

கிரீஸ் தேசத்திற்குக் கிழக்கேயுள்ள ஆசியா மைனர் அல்லது சிறிய ஆசியாவின் மேற்குக் கடற் கரையில் 'புதிய இல்லியம்' என்னும் ஊர் உள்ளது. அஃது ஒரு

பெரிய சமவெளியின் நடுவில் ஒரு குன்றின்மேல் அமைந்திருக்கின்றது. அந்த ஊரில் கி. மு. 6-ஆம் நூற்றாண்டு முதலே மக்கள் குடியேறி யிருந்தனர். அதற்கு 'இல்லியம்' என்ற பெயரோடு'புதிய'என்ற அடைமொழியைச் சேர்த்து வைத்ததற்குக் காரணம் யாதாய் இருக்கமுடியும் என்று சிலீமன் அங்கு வந்தபோது சிந்தித்தார். மேலும் பல அரசர்களும், பேரரசர்களும்ஏதோ காந்தத்தால்இழுக்கப்பட்டவர்கள் போல அங்கு வருவார்கள்; தொழுவார்கள்; பலியிடுவார்கள். 'மகா அலெக்ஸாந்தர்'கூட முதலில் அங்குள்ள கோயிலுக்கு வந்துதான் தன் படைக்கலங்களைத் தெய்வத்தின் அருளுடன் எடுத்துத் தாங்கினாராம். அவ்விடத்தில் ஏதோ ஒரு பெருஞ் சிறப்பு இருக்கவேண்டும் என்றும், பழைய இல்லியம் இருந்த இடத்தில் தான் இந்தப் புதிய இல்லியம் இருந்திருக்க வேண்டும் என்றும் சிலீமன் முடிவு செய்தார். இல்லியம் என்பது 'டிராய்' என்பதற்குக் கிரேக்கர்கள் கூறும் மற்றொரு பெயர். ஆகையால் உடனே அந்த இடத்தில் தோண்டி ஆராய முற்பட்டார். 1870-ஆம் ஆண்டில் அகழும் வேலை தொடங்கியது.

குன்றினை அகழ்தல்:

அந்த இடம் கடற் கரையிலிருந்து சுமார் மூன்று மைல் தொலைவில், ஓர் அகன்ற பீடபூமி போன்ற பகுதியின் நடுவில் ஒரு குன்றின்மேல் உள்ளது. அஃது ஓர் இயற்கையான அரண் போல அமைந்திருக்கின்றது. அங்கே அகழ்ந்தவுடன் சில அடி ஆழத்தில் ஒரு பாழடைந்த நகரம் காணப்பட்டது. அஃது உரோமர்களுடைய நகரஅரண் என்பது அவருக்கு உடனே புலப்பட்டது. அதற்கும் கீழ் அகழ்ந்தவுடன் அடுக்கடுக்காகப் பல அழிபாடுகள் தோன்றின. அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் அழிந்த நகரத்தின் சின்னங்கள்தாம்.

இதைக் கண்டு சிலீமன் அடைந்த இறும்பூதிற்கு அளவே யில்லை. அவருடைய இருதயம் இக்காட்சியால் துள்ளியது. ஏன் இத்தனை நகரங்கள் ஒன்றின்மேல் ஒன்ருக ஒரே இடத்தில் கட்டப்பட்டன? அதற்கு ஒரே காரணம்தான் இருக்கக்கூடும். இயற்கையாக அமைந்த இந்த மலையரண்தான் இதற்குக் காரணமாய் இருந்திருக்க வேண்டும். அங்கே மிகப் பழைய கட்டிடங்களின் மேல், அரண்மனைகளும் ஆலயங்களும் அழிந்து கிடந்ததை அவர் கண்டார். அவர் பதினைந்து அடி ஆழத்திலேயே ஆறடி கனமுள்ள அற்புதமான பெரிய சுவர்களைப் பார்த்தார்; அதற்கும் கீழே ஏழரை அடி ஆழத்தில் எட்டரை அடி கனமுள்ள சுவர்களின்மேல் இச்சுவர்கள் நிற்பதைக் கண்ணுற்ருர். இச்சுவர்கள்தான் அந்நகரத்து அரசனுகிய 'பிரயம்' என்பவனது அரண்மனை மதில்கள் அல்லது மினர்வா என்னும் தெய்வத்தின் கோயில் மதில்கள் என்று அவர் இவற்றைப் பற்றி நூல்களில் படித்தும் கேட்டும் இருந்தார்.

அடுக்கு நகரங்கள் :

சிலீமன் 'டிராய்' நகரத்தைக் கண்டுபிடிக்கவே விரும்பினுர். ஆனுல் அவருக்குக் கிடைத்ததோ அதைவிடப் பன்மடங்கு அதிகப் பெருமையுடைய, வியப்பிற்குரிய பழம் பொருட் செல்வம். பழைமையைப் பற்றி அறிய உதவும் ஒரு பெரிய சுரங்கத்தையே அவர் அங்குக் கண்டார் என்று சொல்லலாம். ஏனெனில் அங்குப் பல நகரங்கள் தோன்றின. பலவகை மக்கள் வாழ்ந்து மறைந்தார்கள். பல நாகரிகங்கள் ஒன்றன்பின் ஒன்ருக உருவாயின. ஒரு நகரம் அழிந்ததால் பின்னுல் வந்தவர்கள் அவ்விடத்தைக் கைவிட்டுப் போய்விடவில்லை. அவர்கள் மீண்டும் அங்கேயே மற்ருெரு நகரத்தைக் கட்டினுர்கள். இப்படி

ஒரு நகரம் மறைந்ததற்கும் மற்றொரு நகரம் தோன்றிய தற்கும் இடையே பல நூற்றாண்டுகள் சென்றிருக்க வேண்டும். முன்பு இருந்தவர்களுடைய நினைவெல்லாம் மறைந்துபோன பிறகே அங்கு மற்றொரு நகரம் உண் டாயிருக்க வேண்டும். இப்படியே ஒன்றன்பின் ஒன்றாகப் பல உண்டாகி மறைந்தன.

புதைபொருட் சான்று:

அகழ்தல் வேலை நிகழும் பொழுது ஒவ்வொரு நாளும் பல அற்புதப் பொருள்கள் கிடைத்தன. கோயில்கள், கோபுரங்கள், புதுமையான கருவிகள், உருவச் சிலைகள், பானைகள் முதலியவை ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந் தன. மூவாயிரம் ஆண்டுகளாகக் கதைகளில் படித்தும், கேட்டும் வந்த பொருள்கள் ஒவ்வொன்றாகக் கண்முன் தோன்றின. ஒன்றின்மேல் ஒன்றாக இருந்த அந்த ஒன்பது நகரங்களில் கிடைத்த அற்புதப் பொருள்கள் உலகையே வியப்பில் ஆழ்த்திவிட்டன. ஹோமருடைய கதைகளில் கூறப்பட்டிருந்த செய்திகளெல்லாம் உண்மை என்பதற்கு இதை விட வேறு சான்றுகள் என்ன வேண்டும்?

தங்கப் புதையல்கள்:

இப்பொழுது ஹோமரின் கதையில் கூறப்பட்ட 'பிரயம்' என்னும் மன்னனது நகரம் இந்த ஒன்பது நகரங்களில் எது? இதுதான் அப்போது சிலீமன் முன் நின்ற கேள்வி. எல்லாவற்றுக்கும் அடியில் இருந்த நகரம், உலோகத்தின் உபயோகம் தெரியாத, சரித்திர காலத்திற்கு முற்பட்ட, பழங் கற்கால மனிதர்களுடையது என்பது நன்கு விளங்கியது. அதற்கு மேல் இருந்த இரண்டாவது நகரத்தையே அவர் 'பிரயம்' என்னும் மன்

னது நகரம் எனக் கருதினர். மூன்று ஆண்டுகளாகத் தோண்டி எடுத்து மலைபோல மண்ணை வெளியே குவித்தும் அவர் கனவு கண்ட பொன்னும், மணியும், செல்வமும் அந்த நகரத்தில் கிடைக்கவில்லை. அதனால் அவருடைய ஏமாற்றம் பெரிதாயிற்று. எனினும் ஒரு நாளைக் குறிப்பிட்டு அதற்குள் அங்குத் தங்கம் கிடைக்காவிடில் அவ்விடத்தை விட்டுப் போவதாக முடிவு செய்தார். ஆ! அவரது நல்லூழ் இருந்தவாறு என்னே! அந்த நாளுக்கு முந்திய நாளே அவர் அளவற்ற புதையலைப் பெற்றார். அவரும் அவர் மனைவியும் ஓர் அரண்மனை மதிலின் அடியில் தோண்டி அளவற்ற பொற் குவியலை வெளியே எடுத்தார்கள். அதன் ஒளியால் அவர்களுடைய கண்கள் மங்கின. அதன் மதிப்போ அளவிடற்கரியது. அதில் கிடைத்த பலவகை அணிகலன்களை அவர் தம் மனைவிக்கு அணிவித்து அழகு கண்டார்.

மேலும் புதையல்கள் :

இரண்டு தங்கக் கிரீடங்களும், ஆயிரக் கணக்கான மோதிரங்களும், பதக்கங்களும், பல தங்கச் சிலைகளும், சங்கிலிகளும், காதணிகளும் முதலான அளவற்ற செல்வம் அப் புதையலில் இருந்தது. இவையெல்லாம் அங்கு எப்படி வந்தன? 'டிராய்' நகரம் தீக்கிரையாக்கப்பட்ட போது இவற்றை யெல்லாம் யாரோ விரைவாகக் கொண்டு வந்து அங்குப் போட்டிருக்கவேண்டும் என்று சிலீமன் எண்ணினர். இப்படி எண்ணிக்கொண்டிருக்கும் பொழுதே அந்தப் புதையலின் அருகில் இன்னும் நான்கு புதையல்கள் கிடைத்தன. அப்போது அவருக்கு உண்டான மகிழ்ச்சியையும் வியப்பையும் யாரால் விவரிக்க முடியும்?

சிலீமன் புதையல் கண்ட நகரத்தையே 'டிராய்' நகரம் என எண்ணியது தவறு என்று பிறகு நிலைநாட்டப்

பட்டது. அடியிலிருந்து ஆருவதும் மேலிருந்து நான் காவதுமாக உள்ள நகரமே 'டிராய்' நகரம் என்று ஆராய்ச்சியாளர் முடிவு செய்தனர். எனினும் சிலீமன் முயன்று வெற்றி பெற்றிரா விடின், யார் டிராய் நகரத்தைக் கண்டிருக்க முடியும்? இவ்வெற்றிக்கு அவருக்கு உதவியாயிருந்தது ஹோமரின் கதையில் அவர் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையே என்பது தெளிவு.

மைசினுவில் அகழ்தல்:

கிரீஸ் தேசத்தில் 'மைசினு' என்னும் நகரத்தில் மன்னர் மன்னனுகிய 'அகமெம்னுன்' என்பவன் ஆண்டு வந்தான் என்று ஹோமர் கூறியிருக்கிருர். இவனுடைய தலைமையில்தான் மற்ற எல்லா அரசர்களும் ஆயிரம் கப்பல்களில் பெரும் படையுடன் 'டிராய்' நகரைத் தாக்கச் சென்றனர். இவன் வாழ்ந்த 'மைசினு' நகரம் தங்கமயமானது என்று ஹோமர் கூறுகிருர். ஆகையால் அப்பேர்ப்பட்ட மன்னர் மன்னனது மாபெரும் நகரத்தில் எவ்வளவு பொற்குவியல்கள் இருக்க வேண்டும்? இந்த நகரத்தின் அழிபாடுகளை, சிலீமன் முன்பே கண்டிருந்தார். ஆகையால் அவ்விடத்திலும் தோண்டித் துருவிப் பார்க்க அவர் திட்டமிட்டார்.

கருந்தனக் காட்சி:

1876 ஆகஸ்ட்டு மாதம் அவர் அங்குப் பல வேலையாட்களுடன் ஆயத்தமாகச் சென்று தோண்டினுர். சிறிது தோண்டிய உடனேயே இரண்டு வரிசையான கற்கள் வட்டமாக வைக்கப்பட்டிருந்ததை அவர் கண்டார். அதற்குள்ளேதான் அகமெம்னுன் மன்னன் புதைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று அவர்கருதினுர். மூன்றடி

ஆழமாக அங்கே தோண்டியவுடன் ஐந்து கல்லறைகள் காணப்பட்டன. பிறகு வேலையாட்களை அனுப்பிவிட்டு அவரும் அவர் மனைவியும் மட்டும் அக்கல்லறைகளைத் துருவினார்கள். அவற்றில் இருந்த பிரேதங்களுடன் அளவற்ற விலை மதிக்க முடியாத பொருள்கள் புதைக்கப் பட்டிருந்ததைக் கண்டபோது அவர்களுடைய மனம் துள்ளிக் குதித்தது. உடல் பூரித்தது. கற்பனைக்கும் எட்டாத அளவு கருந்தனம் அதில் இருந்தது. யாரோ முன்பே அதில் இருந்த செல்வத்தில் ஓரளவு கொள்ளை கொண்டு போய்விட்டிருந்தனர். இருப்பினும் சாம்பலுக் கும் மண்ணுக்கும் இடையே பல பொற்கலங்கள் பளபள வென்று மின்னின. பிரேதங்களின் முகத்திலும் மார்பிலும் முறையே தங்க முகமூடிகளும் கவசங்களும் இருந்தன. உடலின் மற்ற உறுப்புக்களெல்லாம் பலவிதமான அணி கலன்கள் பெற்றுத் துலங்கின. போர்க் கருவிகள் பலவும் பக்கத்திலிருந்தன. இன்னும் எத்துணையோ தங்கப் பாத்திரங்களும் பல்வகைப் பொருள்களும் அருகில் இருந் தன. இவையெல்லாம் இறந்தவர்கள் இன்பமாகவும் சேம மாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகப் பெய்து வைக் கப்பட்ட பொருள்கள் என்று கருதப்படுகின்றன.

உலகம் மருண்டது:

ஆண்களுடைய கல்லறையில் அவர்கள் கண்ட காட்சி இது. அடுத்து இருந்த மற்றொரு கல்லறையில் அவர்கள் கண்ட காட்சி சற்று மாறாக இருந்தது. ஏனெனில் அது பெண்கள் புதைக்கப்பட்ட இடம். எனினும் அதிலும் கிடந்த செல்வத்திற்குக் கணக்கில்லை. கிரீடங்கள், காதணிகள், கழுத்தணிகள், கடகங்கள், மோதிரங்கள், பிராணிகளின் உருவமாகச் செய்யப்பட்ட பல தங்கச் சிலைகள் முதலிய பல பொருள்கள் அதிலிருந்தன.

சீலிமன் மெய்ம் மறந்து நின்றுவிட்டார். தாம் கண்ட இக் கல்லறைக் காட்சிகளைப் பற்றி அவர் பத்திரிகைகளுக் குச் செய்தி யனுப்பினர். பல நாட்கள் தொடர்ந்து இச் செய்திகள் வெளிவரலாயின. உலகம் அவற்றை யெல் லாம் படித்துப் படித்துப் பரவசமடைந்தது. தினந்தோ றும் கூடைகளில் 'சிலீமன்' மனைவி வீட்டிற்குக் கொண்டு போன தங்க நகைகள் மதிப்பிடற்கு அரியன. எடுக்க எடுக்கக் குறையாத சுரங்கம் போல அவை கிடைத்துக் கொண்டே இருந்தன.

எண்ணம் திரும்புகிறது;

ஆனல் அவருடைய பொருளாசை இவற்ருல் நிறை வுற்ற உடன், அவர் அப்பொருள்களில் இருந்த வேலைப் பாடுகளைப் பற்றியறிந்து வியப்புறத் தொடங்கினர். அவற் றைச் செய்தவர்களுடைய கைத் திறமையை எடுத்துக்கூற அவரால் சிறிதும் முடியவில்லை. இவற்றைப் பற்றி யெல் லாம் கேள்விப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர் பலர் கிரீஸ் தேசத்திற்கு விரைந்தோடி வந்தார்கள். இவ்வளவு உயர்ந்த நாகரிகம் அந்த ஓர் இடத்தில் மட்டும்தான் இருந்திருக்க முடியுமா, இன்னும் பல இடங்களிலும் அது பரவியிருந்திருக்க வேண்டுமே, என்று அவர்கள் எண்ணினர்கள். ஆகையால் அவர்கள் மண்ணுக்குள் மறைந்த நகரங்களை மற்ற இடங்களிலும் தோண்டத் தொடங்கினர்கள்.

டிரின்ஸ் நகரம்:

சிலீமனும் தனக்கு 62 வயதாகியும் சிறிதும் ஆர்வம் குறையாமல் டிரின்ஸ் என்னும் மற்றேரிடத்தைத் தோண் டினர். அங்கே அவர் ஹோமரால் வருணிக்கப்பட்ட ஒரு பெரிய அரண்மனையின் தரை மட்டத்தைக் கண்டார்.

பல அறைகளும், மண்டபங்களும், முற்றங்களும் அந்தப்புரங்களும், அரண்மனை மதில்களும் அவ்வமைப்பில் இருந்தன. அரண்மனையைவிடப் பன்மடங்கு உயரமான அதன் சுற்றுப்புற மதில் 57 அடி கனமுள்ளதாய், இடையிடையே அறைகளையும், அரங்குகளையும் கொண்டதாக இருந்தது. அங்குக் கிடைத்த பழம் பொருள்களுள் அழகான சுவர் ஓவியங்கள், படிகக் கல் உருவங்கள் முதலியன கண்ணையும் கருத்தையும் கவரக் கூடியவையாயிருந்தன.

மினேஸ் அரண் :

முன்பு மைசினுவிலும் இப்பொழுது டிரின்ஸிலும் காணப்பட்ட நாகரிகம் ஒன்ருகவே இருந்தது. இவ்விரண்டையும் ஆக்கியவர்கள் ஒரே மக்கள். சரித்திர கால கிரேக்கர்கள் நாகரிகத்தில் உயர்ந்தோங்கியிருந்த காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் முன்பே இம்மக்கள் இங்கு வாழ்ந்திருக்க வேண்டும். அம்மக்களுக்கும் சரித்திர கால மக்களுக்கும் யாது தொடர்பு? அவர்களுடைய நகரங்கள் எவ்வாறு அழிந்தன? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை காண்பது அரிதாயிருந்தது. ஆனால் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் மேலும் தொடர்ந்து ஆராய்ந்ததின் பேரில் கிரீஸிற்குத் தெற்கேயுள்ள 'கிரீட்' என்னும் பெரும் தீவிலும், அதனருகிலிருந்த பல சிறு தீவுகளிலும் இதே மாதிரி பழைமையான மக்களது நாகரிகச் சின்னங்கள் பல அகப்பட்டன. கிரீட் தேசத்து அரசன் 'மினேஸ்' என்பவனைப் பற்றிக் கட்டுக் கதைகள் பல இருந்தன. அவன் மிக்க வல்லமையுடைய பேரரசன் என்றும், சட்டங்களைச் செய்தவன் என்றும், கப்பல் படையால் கடல் கடந்த நாடுகளை ஆண்டவன் என்றும் அவை கூறின. ஹோமர், அவனுடைய சந்ததியில் வந்த ஓர்

அரசன் கிரேக்க அரசருடன் சேர்ந்து டிராய் நகரைத் தாக்கினான் என்று எழுதியுள்ளார். மினோசுக்கு மிக அழகான புகழ் பெற்ற அரண்மனை ஒன்று இருந்ததாகவும் கூறப்பட்டது. ஆகவே அவ்விடத்தை அகழ்ந்து பார்க்க வேண்டுமென்று சிலீமன் முயன்றார். ஆனால் அதற்குக் கால்கோள் இடும் முன்பே அவர் இறந்துவிட்டார்.

ஆர்தர் இவான்ஸ் :

அவருக்குப் பிறகு 'ஆர்தர் இவான்ஸ்' என்னும் ஆங்கிலேயர் அங்கே வந்து ஆராயலானார்; மினோஸின் புகழ்பெற்ற அரண்மனையையும் அதிலிருந்த மர்மமான சுரங்க வழிகளையும் பற்றி அவர் கேள்விப்பட்டிருந்ததால், அதிக ஊக்கத்துடன் தோண்டலானார். 1900-ஆம் ஆண்டு வேலை தொடங்கியது. சில மணிநேரங்களில் மெய் சிலிர்க்கும் காட்சிகள் கண்முன் தோன்றின. இரண்டு ஏக்கர் பரப்பளவுள்ள பீடத்தின்மீது பழம்பெரும் கட்டிடம் ஒன்று காணப்பட்டது. அதைக் கண்டவர்கள் தம் கண்களையே நம்ப முடியவில்லை. தோண்டத் தோண்டப் பல அதிசயங்கள் வெளிவந்தன. ஆறு ஏக்கர் பரப்பில் அழிபாடுகள் சிதறிக் கிடந்தன. அரண்மனையின் அமைப்பில் நடுவில் 200 அடிக்கு 100 அடியுள்ள ஒரு முற்றமும் சுற்றுக்கட்டிடங்களும் பல அடுக்குகளுடன் இருந்தன. அச்சுற்றுக் கட்டிடங்களில் நடைபாதைகளும் அறைகளும் முடிவின்றித் தொடர்ந்து பிணைக்கப்பட்டிருந்தன. அப்பகுதியில் எவரும் எளிதில் வழிகண்டு செல்ல முடியாது. மேல் அடுக்கில் மற்றோரிடத்திலும் இப்படியே இருந்தது. அரண்மனையில் ஆடம்பரத்திற்கும் இன்பத்திற்கும் அளவேயில்லை என்பதற்கு அறிகுறிகள் காணப்பட்டன. அக்காலத்தில் அம்மக்களுக்கு எண்ணெய் அரிய பொருளாய் இருந்திருக்க வேண்டும் என்பது ஒரு

செய்தியால் புலப்பட்டது. அது என்னவென்றால் அரண்மனையின் அடித்தளத்தின் அருகில் ஒரு பெரிய நிலவறையில் வரிசை வரிசையாக மிகப் பெரிய எண்ணெய்ச் சாடிகளிருந்தன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு திருடன் ஒளிந்திருக்கக் கூடிய அளவு பெரிதாய், அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்னும் கதையில் வரும் சாடிகள் போல அவை இருந்தன. அவற்றின்மீது அழகான வேலைப்பாடும் காணப்பட்டது. அந்நாட்டுச் செல்வத்தை மறைத்து வைப்பதற்குரிய, ஈயத்தாலாகிய சுவர்களையுடைய பெரிய நிலவறைகளும் அவற்றின் அருகில் இருந்தன.

அரண்மனையா? கோயிலா?

அரண்மனைக்கு வேண்டிய தொழிற்சாலைகள் அதன் அருகிலேயே இருந்தன. அரசியின் அந்தப்புரம் அழகான ஆதனங்களுடனும், கண்கவர் ஓவியங்களுடனும் இன்பமயமாக இருந்தது. அதைவிட அழகான இடம் அரண்மனையில் எங்குமே இல்லை. மற்றொரு புறத்தில் அரியணை வைக்கப்பட்ட அறை மிக அற்புதமாக இருந்தது. அமைச்சர்கள் அமரும் இருக்கைகளும் அரியணைக்கு இருபுறமும் அருகிலும் அமைந்திருந்தன. அரியணைக்கு எதிரில் இருந்த ஒரு சிறிய அறையில் மகா சக்தி தெய்வத்தின் சிலை வைக்கப்பட்டிருந்தது. அது மிகப் புனிதமான இடமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அந்த அரியணை உலகிலேயே மிகப் பழையது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவ்வறையில் சுவர் ஓவியங்களும் தங்கம், பளிங்கு, மரகதம் முதலிய அலங்காரப்பொருள்களும் இருந்தன. அக்கால அரசர்கள் புரோகிதர்களாகவும், அவர்களுடைய அரண்மனை ஒரு கோயிலாகவும் இருத்தது என்பதற்கு இந்த அரண்மனைக்

காட்சியே தக்க சான்று. சக்தி தெய்வ வழிபாடு அங்கு அக்காலத்தில் வேரூன்றி யிருந்தது. அத்துடன் வேறு பல சிறு தெய்வங்களுக்குரிய கோயில்களும் அரண்மனை யில் சிதறி யிருந்தன. இம்மை மறுமைக்குரிய இரு வகைப் பொருள்களும் அங்கு ஏராளமாக இருந்தன. எல்லாம் அழகு மயமாகக் காட்சியளித்தது. தங்கம், வெள்ளி, தந்தம், படிகம் முதலியவை பதிக்கப்பெற்ற சொக்கட்டான் பலகை ஒன்றும் அங்கிருந்ததால் அஃது அரண்மனைப் பொழுது போக்குக்கு உகந்ததாய் இருந் தது என்று தெரியவருகிறது.

அரண்மனையில் நவீன வசதிகள்:

அந்த அரண்மனை அமைப்பில், இன்றியமையாத சுகாதார வசதிகள் என்று இப்பொழுது கருதப்படும் சாக்கடைகள், மலஜலம் கழிக்குமிடங்கள், காற்றேட்ட வச திகள், வெளிச்சம் வரும் வழிகள் முதலியவை இருந்தன. அஃது இங்கிலாந்தில் உள்ள 'பக்கிங்காம்' அரண்மனைக்கு நிகராக, அளவிலும் அழகிலும் இருந்தது என்று ஆர்தர் இவான்ஸே கூறுகிறார். இப்பழங்காலக் கட்டிடத்தில் இவ்வளவு நவீன வசதிகளும் ஆடம்பரங்களும் கலைப் பொருள்களும் இருந்தது வியப்பினும் வியப்பே! கி. மு. 1400-ஆம் வருடத்திற்கு முன்பே அஃது அடியோடு மறைந்துவிட்டது என்பதை எண்ணும் போது இக்கால ஆடை அலங்கார ஒப்பனைகளுடன் 'கூடிய பாரிஸ் நாக ரிகம்' அப்பழங்காலத்திலேயே அவ்வரண்மனையில் இருந் ததோ என்றுநாம் அளவுகடந்த மருட்கை யடையக்கூடும். இருபத்தைந்து ஆண்டுகள் அரும்பாடுபட்டு அகழ்ந் தெடுத்த ஓவியங்கள், சிலைகள், அணிகலன்கள், களிமண் ணில் எழுதப்பட்ட ஏடுகள், முத்திரைகள் முதலிய பல பொருள்களால் 'ஆர்தர் இவான்ஸ்' இவ்வரிய செய்தி

களை உலகுக்கு அறிவித்து அளவற்ற புகழையும் பாராட்டு களையும் பெற்ருர்.

மினேவன் நாகரிகத்தின் அழிவு:

மினேஸ் மன்னனின் அரண்மனையை யார் அழித்தது? அல்லது அஃது எப்படி அழிந்தது? அங்குக்கண்டெடுக்கப் பட்ட எழுத்துக்களின் பொருள் என்ன? இக்கேள்வி களுக்கு விடை காண முயலும் பொருட்டு 'ஆர்தர் இவான்ஸ்' தொல்பொருள் இயல்முறைப்படி பல ஆராய்ச் சிகள் செய்தார். அவர் அந்நகரைத் தோண்டிய போது அங்கிருந்த படிமானப் பொருள்களை அளந்தும், மண்ணில் மறைந்திருந்த பொருள்களைக் கூர்ந்து கவனித்தும், கட்டிட அமைப்புக்களையும், ஓவியங்களையும், அலங்காரப் பொருள்களையும், எழுத்துக்களையும், ஏற்கனவே வேறி டங்களில் கண்டெடுக்கப்பட்ட அத்தகைய பொருள் களோடு ஒப்பிட்டுப் பார்த்தும், கால இடைவெளிகளைக் கணித்தும், ஒவ்வொரு பொருளின் காலத்தை முடிவு செய் தும், அந்த அரண்மனை கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டதென்றும், காலச் சுழலில் அகப்பட்டு அது பல மாறுதல்களை அடைந்தது என்றும் கண்டார். ஏறத்தாழக் கி. மு. 1750-இல் அவ்வரண்மனை அழிந்து விட்டது. மீண்டும் அதை மிக அழகாகவும் புதுமையாக வும் அந்நகர மக்கள் கட்டினர்கள். பழைய அரண்மனையில் இல்லாத பல முன்னேற்றமான சிறப்பியல்புகள் புதிய அரண்மனையில் இருந்தன. சில நூற்ருண்டுகள் கழித்து அதுவும் ஒரு பெரிய நில நடுக்கத்திஞல் அழிந்துவிட்டது. அப்பொழுது அதன் சுவர்களிலிருந்து ஒவ்வொன்றும் ஒரு டன்னுக்கு மேல் எடையுள்ள பெரிய பாறைகள் அப்பால் சிதறி விழுந்தன. மீண்டும் அவ்வரண்மனை மிக அழகாகக் கட்டப்பட்டது. அதுவும் சுமார் கி. மு. 1400-இல்

அழிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது. அதன் பிறகு அங்கு அரண்மனை கட்டப்படவே யில்லை.

இவான்ஸ் கருத்து:

மினோஸ் அரண்மனைக்குச்சுற்றுப்புற மதில்கள் இல்லை என்றும் அங்கு ஆண்ட மன்னர்களுக்குப் பகை யச்சமே இருந்ததில்லை என்றும் இதனால் தெரிகின்றன. அவர்கள் கவலையின்றிச் சுகத்திலும் இன்பத்திலும் திளைத்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் அவர்களுடைய அரண்மனை பகைவர்களால் அழிக்கப்பட்டிருக்க முடியாது என்று இவான்ஸ் உறுதியாக நம்பினார். ஆனால் கிரேக்க நாட்டுக் கதைகளிலோ கிரேக்கர்கள் அதை அழித்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்நகர் இயற்கையின் கொடுமையால் அழிந்த பிறகு கிரேக்கர்கள் அங்கு வந்து குடியேறினார்கள் என்றும் அதனால் அவர்களே அந்நகரை அழித்ததாகக் கதைகள் கட்டப்பட்டன என்றும் இவான்ஸ் கருதினார்.

ஆராய்ச்சியாளர் கருத்து:

ஆனால் அந்நகரம் அழிந்த அதே காலத்தில் ஐரோப்பாவின் தெற்குப் பகுதியில் ஒரு முரடர் கூட்டம் பரவியிருந்தது என்றும், அவர்கள் தம் கண்ணில் பட்ட நகரங்களையும் அரசர்களையும் கருணையின்றி அழித்துத் திரிந்தார்கள் என்றும் பலர் கூறுகிறார்கள். இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது உறுதியாகச் சொல்வதற்கில்லை. எனினும் அவர்கள் இப்பொழுது ஐரோப்பா முழுதும் நிலைபெற்றிருக்கும்படியான இந்தோ-ஐரானிய இனத்தவர் என்பது மட்டும் உறுதி. இவர்களும் கிரீஸிலும் அதைச் சுற்றியுள்ள தீவுகளிலும் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு குடியேறி உயர்ந்த நாகரிகத்தைப்

பேணி வளர்த்தவர்களும் வெவ்வேறு இனத்தவராவர். மைசினு, டிரின்ஸ் ஆகிய விடங்களில் திரண்டிருந்த செல்வத்தையும் ஆடம்பரத்தையும் சுமார் கி.மு. 1400-இல் ஐரோப்பாவில் நாடோடிகளாய் அலைந்து கொண்டிருந்த இம் முரடர் கூட்டம் கண்டவுடன் வெறிபிடித்தவர்கள் போல் அவற்றைத் தாக்கிப் பறிக்க முயன்றனர். இந்தத் தாக்குதலை அந்நகர மக்கள் எதிர்த்து நிற்க முடியாது வீழ்ந்தனர். அவர்களுள் சிலர் வேறிடங்களுக்கு ஓடிவிட்டனர். பிறகு வென்றவர்கள் அவ்விடங்களில் நிலைத்து வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குப் பிறகு சரித்திரகால கிரேக்கர்கள் அந்நகரங்களுக்கு வந்து அவர்களை வென்று அவற்றை அழித்தனர். அவர்களால் முன்பிருந்த உன்னத நாகரிகத்தைப் படைக்க முடியவில்லை. எனினும் அவர்கள் அங்கு முன்பு வாழ்ந்த மக்களுடைய கதைகளையும் நாகரிகத்தையும் தம்முடையவை யென்று பெருமையுடன் கூறிக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இதுவே இக்கால வரலாற்று அறிஞர்கள் தொல்பொருள் ஆராய்ச்சியின் அடிப்படையில் கிரேக்க நாட்டுக் கதைகளுக்கு ஒப்பக் கண்டிறிந்த முடிபாகும்.

II மத்திய அமெரிக்கா

மத்திய அமெரிக்காவின் பழைமை :

வரலாற்றுப் புகழ்பெற்ற கிரேக்க நாகரிகம் கி. மு. 8-ஆம் நூற்றுண்டில் தோன்றிச் சில நூற்றுண்டுகள் நிலைத்து இருந்ததும், அதன் பிறகு அதை விஞ்சிய உரோம நாகரிகம் தோன்றிக் கிறிஸ்துவுக்குப் பிறகு சில நூற்றுண்டுகள் ஐரோப்பாவின் பெரும் பகுதியிலும் வேறு சில இடங்களிலும் நிலைத்திருந்ததும் யாவரும் அறிந்த செய்திகள். ஆனுல் புது உலகம் என்று கூறப்

படும் அமெரிக்காவில் அதுபோலவே கிறிஸ்துவுக்குப் பல நூற்றுண்டுகள் முன்பும், பின்பும் ஒரு பழம் பெரும் நாகரிகம் நிலைத்திருந்ததைப் பற்றி ஒருவரும் அறியார். அந்த நாகரிகத்தைப் படைத்த மக்களின் வழி வந்தவர்கள் அல்லது இனத்தவர்கள் மத்திய அமெரிக்காவில் 'குவாடிமாலா', 'யுகாடன்' என்னும் நாடுகளில் வாழ்ந்து வருகிறுர்கள். அவர்களும் தம் முன்னோர்கள் பேசி வந்த மொழியையே இப்பொழுதும் பேசி வந்தாலும் தங்களுடைய பழம் பெருமையை இதுகாறும் அறியாதவர்களாய் இருந்தார்கள். அவர்களைப் புதிய உலகத்தின் (அமெரிக்காவின்) கிரேக்கர்கள் என்று புனைந்து கூறலாம்.

ஸ்டீபன்ஸ் வருகை :

இவர்களுடைய முன்னோர்களின் பழம் பெருமைக்கு அறிகுறிகள் மக்கள் அணுக முடியாத காடுகளில் மண்டிக் கிடக்கின்றன. அங்குப் புதர்களாலும் மரங்களாலும் மறைக்கப்பட்டுக் கிடக்கும் பழம் பெரும் சின்னங்கள் பல உள. அவற்றை அந்நாட்டு மக்கள் கண்டிருந்த போதிலும் அவை பழைமைச் சின்னங்கள் என்று அவர்கள் உணரவில்லை. அப்பகுதிகளை ஸ்பெயின் நாட்டினர் (சுமார் 400 வருடங்களுக்கு முன்) படையெடுத்து வந்து வென்ற போதே, பழைய நகரங்கள் பலவும் காடுகளால் விழுங்கப்பட்டிருந்தன. அமெரிக்காவில் நியூயார்க் நகரில் 120 வருடங்களுக்கு முன்னுல் இருந்த ஸ்டீபன்ஸ் என்னும் ஒருவர் இவ்வாறு மறைந்த நகரங்களைப் பற்றிப் புத்தகங்களில் படித்திருந்தார். 'மாயா' என்னும் பெயருடைய மக்களினம் இப் பகுதிகளில் வாழ்ந்து வந்ததைப் பற்றி நூல்கள் கூறின. ஆகையால் மண் மூடிப் போன அந் நகரங்களை அகழ்ந்து பார்க்கவேண்டும் என்ற அவா அவரை உந்தியது. அவரைப் போலவே

பழம்பொருள் ஆராய்ச்சியில் கருத்துக்கொண்ட '**காதர் உட்**' என்னும் நண்பர் ஒருவருடன் அவர் மத்திய அமெரிக்காவுக்குச் சென்றார்.

காட்டில் இன்னல்கள் :

முதலில் அவர்கள் மத்திய அமெரிக்காவில் மலைப்பாங்கான பகுதியில் உள்ள அச்சம் நிறைந்த கணவாய்கள் வழியாகக் கடும் உழைப்புடன் செல்ல வேண்டியிருந்தது. சிறிது தூரம் அவர்களைச் சுமந்து சென்ற கோவேறு கழுதைகளும் தள்ளாடி வீழ்ந்தன. இறுதியில் அவர்கள் சகதியும் புண்ணும் பட்டுப் பல துன்பங்களுக்குள்ளாகி '**கோப்பன்**' என்னும் சிற்றூரைச் சென்றடைந்தனர். அதற்குள் அவர்களுக்கு 'செத்தோம், பிழைத்தோம்' என்றாகிவிட்டது. அச் சிற்றூருக்கு அருகில்தான் அழிபாடுகளின் தலைவாயில் அமைந்திருந்தது. அங்குச் சென்ற மறுநாள், அவர்கள் ஒரு சுதேசியின் துணைகொண்டு அடர்ந்த காட்டிற்குள் அதிக பரபரப்புடன் நுழைந்தார்கள். அச்சுதேசி தன் கைவாளால் மரங்களையும் புதர்களையும் வெட்டிக்கொண்டு செல்ல, ஓர் அரிய சிற்பம் அமைந்த கற்றூண் அவர்கள் கண்முன் பட்டது. அதிலிருந்த சிற்ப நுட்பத்தைக் கண்டு அவர்கள் திகைத்து நின்றுவிட்டார்கள். அச்சிற்பத்தின் பக்கங்களில் பண்டை எகிப்திய சித்திர எழுத்துக்கள் போன்ற ஒருவகை எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன. இஃது உயர்ந்த நாகரிக மக்களுடைய வேலை என்பது உடனே அவர்களுக்கு ஐயமின்றித் துலங்கியது. அதிலுள்ள கலைச்சிறப்பை முற்றிலும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அஃது இணையற்ற கலைக் கருவூலம் என்பதை உணர்ந்தார்கள். இதற்கு இணையாக அவர்கள் எதையும் அதுவரை கண்டதில்லை. அருகிலுள்ள சுதேசி மீண்டும் தன்

கை வாளால் பல மரங்களை வெட்டிச் சாய்த்து அது போன்ற பல சிற்பங்களை அவர்களுக்குக் காட்டினன்.

கோபுர அமைப்பு :

பிறகு மரங்களுக்கு மேல் உயர்ந்திருந்த ஒரு சதுரக் கோபுரத்தைக் கண்டு அதன்மேல் அவர்கள் ஏறினர்கள் அதில் பல மேடைகளும் படி வரிசைகளும் இருந்தன. இறுதியாக 100 அடி உயரமுள்ள ஒரு மேடையை அவர்கள் அடைந்தார்கள். அவர்கள் அதைக் கண்ட போது அநாகரிக மக்களே அமெரிக்காவில் வாழ்ந்து வந்தார்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறியது பொய் என்பது அவர்களுக்குத் தெற்றென விளங்கியது. ஆனல் அதைக் கட்டியவர்கள் யார் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. அஃது ஒரு பெரிய நகரின் கண் அமைந்த கோவில் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? எனினும் அதன் வரலாற்றை மீட்டுத் தருவதே அவர்கள் முன்நின்ற பணி என்று அவர்கள் கருதினர்கள். அக் காட்டில் நோயும் உயிரச்சமும் நிறைந்திருப்பினும் அவர்கள் அங்கேயே தங்கி அப் பணியை நிறைவேற்ற உறுதி கொண்டனர்.

உலகம் வியந்தது :

அங்கிருந்த காட்சிகளை யெல்லாம் அவர்கள் தம் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டும் அவ்விடத்தின் அமைப்புப் படத்தை வரைந்துகொண்டும் மற்றும் பல பழைய நகரங்களை அவ்வாறே ஆராயச் சென்றுர்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தாம் கண்டவற்றை யெல்லாம் ஒரு நூலாக ஸ்டீபன்ஸ் என்பவர் வெளியிட்டபோது உலகமக்கள் அவற்றைப் படித்து

வியப்பில் ஆழ்ந்தனர். பழங் காலத்தில் அமெரிக்காவில் கலை உணர்ச்சியும், அழகுணர்ச்சியும், நாகரிகமும் பொருந்திய மக்கள் கோயில்களையும், அரண்மனைகளையும் அமைத்து நுட்பமான சிற்பங்களைச் செதுக்கி, எழிலோவியங்களைத் தீட்டிச், சித்திர எழுத்து முறையும் கண்டு பிடித்து, அறிவில் சிறந்து வாழ்ந்தார்கள் என்ற செய்தி உலகிற்கு அளவற்ற ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. ஸ்டீபன்ஸ் எழுதிய நூலை ஆயிரக்கணக்கில் மக்கள் படித்ததால் மூன்று மாதத்தில் அது பத்துப் பதிப்புகளைக் கண்டது. அன்றியும் வெவ்வேறு நாடுகளில் அது தனித் தனியாகப் பதிப்பிக்கப்பட்டது.

மாயாக்கள் யாவர்?

அந்நூலைப் படித்த மக்கள் இந்த "மாயா" இனத்தவர் யார்? இவர்களே தனியாக இந்த நாகரிகத்தைப் படைத்திருக்க முடியுமா? என்ற கேள்விகளைக் கேட்கலாயினர். இவற்றிற்குப் பலரும் பலவாறு விடையளித்தனர். எகிப்தியர்கள் போலவே இவர்கள் சதுரக் கோபுரங்கள் கட்டியதால் இருவரும் ஓரினத்தவரோ என்றும் இந்தியர்களைப் போல யானைச் சிற்பங்கள் செதுக்கியதால் இவர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்களோ என்றும் ஊகங்கள் தோன்றின. அவர்கள் பாம்பு வழிபாடு செய்பவர்கள் என்றும், உலகம் முழுவதும் பழங் காலத்தில் பாம்பை வழிபடுவோர் பரவியிருந்தார்கள் என்றும், அத்தகைய நாகர்கள் எனப்படும் இனத்தவரே இவர்கள் என்றும் கருத இடமுண்டு. மத்திய அமெரிக்கச் சுதேசிகள் பழங்காலத்தில் தம் நாட்டிற்கு நாகர்கள் (Serpent men) கப்பலில் வந்து இறங்கியதாயும் அவர்களை இவர்கள் பயபக்தியுடன் வரவேற்று தெய்வமாகக் கொண்டாடினார்கள் என்றும் பிறகு அவர்களே இவர்களுக்கு

குருக்களாக மாறினார்கள் என்றும் கூறுகிறார்கள். இதில் உண்மை இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

கல்வெட்டு ஆராய்ச்சி :

மற்ற இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி செய்வது போல 'மாயா' நாட்டில் செய்வது எளிதன்று. நுழைதற்கரிய காட்டில் வழி வகுத்து, நோய்களையும் உயிரச்சத்தையும் எதிர்த்துப் பல இன்னல்களுடன் போராடித் தொல்பொருள் ஆராய்ச்சி செய்வதற்கு இணையற்ற வீரமும் உறுதியும் வேண்டும். ஆகையால் 'ஸ்டீபன்ஸும்', 'காதர் உட்டும்' செய்து புகழ்பெற்ற வேலையைப் பிறர் தொடர்ந்து செய்ய முன்வர வில்லை. ஆனால் சித்திர எழுத்துக்களைப் படித்தறியும் முறை கண்டறியப்பட்ட பிறகு 'மாயா' நாட்டில் காணப்பட்ட கல்வெட்டுக்களை ஆராயப் பலர் துடித்தனர். 'ஸ்பெயின்' நாட்டின் தலைநகராகிய 'மாட்ரிட்டில்' கொணர்ந்து வைக்கப்பட்டிருந்த 'மாயா' கல்வெட்டு ஒன்றை 300 ஆண்டுகளாக ஒருவருமே அறியாது இருந்தனர். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 'லென்டா' என்னும் பாதிரியொருவர் மாயாநாட்டில் தாம் கண்டவற்றைப் பற்றி ஒரு நூல் எழுதியிருந்தார். அவர் சித்திர எழுத்துக்களை அதில் விரிவாக விளக்கி இருந்ததின் துணைகொண்டு மற்ற 'மாயா' நூல்களை (கல்வெட்டுகளை) ஆராய்ந்த போது அவற்றின் பொருள் விளங்கியது; ஒவ்வொரு நினைவுக் கல்வெட்டும் எந்தத் தேதியில் நாட்டப்பட்டது என்பதை அறியமுடிந்தது. 'மாயா' மக்கள் நாகரிகத்துடன் வாழ்ந்த சுமார் 1500 ஆண்டுகளில் இருபதாண்டுகளுக்கு ஒரு கல்வெட்டாக நிறுவினார்கள். பெரிய நகரங்களில் பத்து அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒன்றும் எழுப்பப்பட்டது. இவற்றிலிருந்து அவர்கள் எந்தக்காலத்தில் எந்த நகரத்தைக் கட்டினார்கள்?

எப்பொழுது அதனைக் கைவிட்டு வேறொரு நகரத்திற்கும் சென்றார்கள்? என்பவை யெல்லாம் நன்கு தெரிகின்றன. கி. பி. 68-இல் முதல் நகரம் தோன்றியதாகவும், பிறகு பல நகரங்கள் தோன்றிச் சுமார் கி. பி. 600-இல் அவர்கள் தம் நாட்டையே விட்டு வடக்கே சென்று விட்டதாகவும் இவற்றால் அறிகிறோம். 1500 ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்பெயின் படையெடுப்பாளரால் காட்டின் நடுவில் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கூறிய முதல் நகரம் அவர்களை மருளச் செய்தது எனின் அதன் அழகை என்னென்று கூறுவது?

மாயா நாகரிகத்தின் தன்மை:

'மாயா' நாட்டில் கிடைத்த கல்வெட்டுக்களையும் சிலைகளையும் கொண்டு அம்மக்களது வரலாற்றை மீட்க முடிகிறது. 'மாயா' மக்கள் உயர்ந்த நாகரிகம் உடையவராய் இருந்தாலும் அவர்களுக்குப் பல துறைகளில் உழைப்பதற்காகப் பல அடிமைகள் இருந்தனர். நுட்பமான கைத்திறமை வாய்ந்த கலைஞர்களும் ஆயிரக் கணக்கான உழைப்பாளிகளும் (அடிமைகளும்) சேர்ந்தே இந்த நாகரிகத்தை உருவாக்கினர். உழவுத் தொழில் இல்லாத காலத்தில் உழவர்களெல்லாம் கோபுரங்களும் கோயில்களும் நகரங்களும் அமைக்க ஏவப்பட்டனர். அரசனுக்காக நாடு முழுவதுமே பாடுபட்டது என்றால் அது மிகையாகாது. அரசர்கள் அதிக வலிமை படைத்தவர்களாகவும் செல்வர்களாகவும் இருக்கக் குடிகள் எளிமையும் வறுமையும் உற்றவர்களாய் இருந்தனர். உயர்ந்த நிலையில் இருந்தவர்கள் ஒருபுறமும் தாழ்ந்த நிலையில் இருந்தவர்கள் மற்றொரு புறமுமாகப் பிரிந்து வாழ்ந்தனர். நகர அமைப்பிலிருந்து இது நன்கு தெரிகிறது. நகரின் நடுவில் உயரமான அரண்மனைகளி

லும் கோயில்களிலும் உயர்ந்த மக்களும், நகரைச்சுற்றி அப்பால் குடிசைகளில் தாழ்ந்த மக்களும் வாழ்ந்து வந்தனர். குடிகளே தம் காவலரையும் குருக்களையும் கண்டு வியந்தும் அஞ்சியும் வாழ்ந்திருக்கவேண்டும். இவ்வாறு நாம் கருதுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அது என்ன வென்றால் அரசர்களும் குருக்களும் தமது ஆடம்பரத்தாலும். சடங்குகளாலும் வலிமையாலும். மந்திர சக்தியாலும் மக்களை அச்சத்திற்குள்ளாக்கினார்கள் என்பதே.

அவர்களது அறிவின் திறன்:

அவர்களுடைய மந்திர மாய ஜால ஆற்றல்களால் அவர்கள் தம் பதவிகளையும் அதிகாரத்தையும் நிலைத்திருக்கச் செய்தார்கள் என்று தெரிகிறது. அவர்களுடைய வானநூல் அறிவும் மிக உயர்ந்தது. அவர்கள் ஞாயிறு, திங்கள், கோள்கள் முதலியவற்றின் உதவியால் நேரத்தைச் சரியாகக் கணிப்பதற்கு அறிந்திருந்தார்கள். சூரிய, சந்திர கிரகண காலங்களைப் பற்றியும் முன்கூட்டி அறியும் திறமை அவர்களுக்கு இருந்தது. *சாந்திரமான முறைப்படியும், +சௌரமான முறைப்படியும் அவர்கள் பஞ்சாங்கங்களை எழுதி இரண்டையும் இணைத்துப் பின்பற்றி வந்தார்கள் என்றால் அவர்களுடைய வான நூலறிவின் திறனை என்னென்று மதிப்பிடுவது? இவை எல்லாவற்றையும் சேர்த்தே மந்திர மாய ஜால சக்தி என்று மக்கள் கருதினார்கள். அவர்கள் கோயில் கோபுரங்களின் மேல் ஏறி இச் சக்தியை மக்கள் வியக்குமாறு காட்டுவார்கள்.

---

* இது பூமியைச் சுற்றிச் சந்திரன் ஒரு முறை வரும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

+ இது சூரியன் பூமியை ஒரு முறை சுற்றி வரும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

சூரிய கடிகாரம்:

மாயா மக்களின் முதல் நகர அழிபாடுகளில் ஐம்ப தடி உயரமுள்ள ஒரு சதுரமான மேடு இருந்தது. அதன் எதிரே வரிசையாக மூன்று கோயில்கள் இருந்தன. இவை ஒரு பெரிய சூரிய கடிகாரமாக* அமைந்திருந்ததைக் கண்டு ஆராய்ச்சியாளர் அதிசயித்து நின்றனர். சூரியனுக்கு வணக்கம் செய்யும் முறையிலேயே இக் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன என்பதும் தெளிவாயிற்று. உத்தராயண தக்ஷிணாயண முடிவுக் காலங்களையும் சூரியன் நேராக உச்சிக்கு வரும் காலங்களையும் காட்டுவதற்கு இந்த அமைப்பு ஏற்பட்டிருந்தது. இவை இக்காலக் கணக்குப்படி ஜூன் 21, டிசம்பர் 21, மார்ச்சு 21, செப்டம்பர் 21 ஆகும். இச் சூரிய கடிகாரத்தின் உதவியால் அம் மக்கள் உழவுத் தொழிலை எப்பொழுது தொடங்க வேண்டும்? அறுவடை எப்பொழுது செய்ய வேண்டும்? என்று அறிய முடிந்தது. குருமார்கள் கோபுரத்தின் மேலேறி இக் கடிகாரத்தின் உதவியால் காலத்தை அறிந்து மக்களுக்குக் கட்டளையிடுவார்கள்.

கோபுரத்திற்குள் கோபுரம்:

கோபுரத்தில் மற்றொரு இரகசியமும் இருந்தது, வெளிக் கோபுரத்திற்கு உள்ளே மற்றொரு கோபுரம் இருந்தது. அதற்கு நான்கு பக்கமும் படிகள் இருந்தன. அப் படிகளின் மேல் ஏறியபின் மற்றொரு படியின் வழியாகச் சென்றதும் ஒரு மேடை வந்தது. அப் படிகளின் பக்கங்களில் பயங்கரமான மனித முகங்கள் போல் கற்களால் செய்யப்பட்ட உருவங்கள் இருந்தன. அம்முகம் ஒவ்வொன்றும் எட்டடி சதுரமாகப் பிளந்த வாயுடன் இருந்தது. இந்த உள் கோபுரம் வெளிக் கோபுரத்தைவிட

* சூரியன் உதவியால் பகலில் காலத்தைக் காட்டும் கருவி.

அழகாக இருந்தது. ஆனால் அவை ஏன் ஒன்றுக்குள் ஒன்று கட்டப்பட்டன என்பது விளங்க வில்லை.

வேதங்கள் :

மாயாக்களின் புனித வேதங்கள் 'சீலம் பாலம்' என்று அழைக்கப்படும். அவர்களுடைய மத குருவும் தேவ தூதனும் ஆகிய பாலம் என்பவர் பெயரால் அவை அவ்வாறு அழைக்கப்பட்டன. அவர் வாழ்ந்த காலம் கி. பி. 15-ஆம் நூற்றுண்டின் இறுதி. அவரே மாயாக்களின் கடைசிக் குரு. கிழக்கிலிருந்து புதிய இனத்தார் அங்குவந்து ஒரு புதிய மதத்தை நிலைநாட்டுவார்கள் என்று அவர் முன் கூட்டியே அறிவித்திருந்தபடி பின்னல் நிகழ்ந்தது. அதற்காக அவர் மாயாக்களால் மிகவும் மதிக்கப்பட்டார். 'சீலம் பாலம்' என்னும் வேத நூல் அவர்களது வரலாற்றை அறிவிக்கும் ஓர் அரும் பெரும் பொக்கிஷம். இந்நூலின் பெரும் பகுதி சித்திர எழுத்திலிருந்து இக்கால மாயா மொழியில் பெயர்த்து எழுதப்பட்டிருக்கிறது. யூகாடன் இராஜ்யத்தில் இவர்கள் குடியேறிய பிறகு நடந்த செய்திகள் எல்லாம் அதனல் அறியப்படுகின்றன.

மாயாக்களின் முடிவு :

குவாடிமாலா, ஹொண்டுராஸ் என்ற பகுதிகளிலிருந்து யூகாடன் பகுதிக்கு வந்த மாயாக்கள் பல நூற்றுண்டுகள் பாடுபட்டு மீண்டும் கலைகளையும் கட்டிடங்களையும் உண்டாக்கினர். அது வரையில் காடுகளை வெட்டி நிலத்தைப் பண்படுத்துவதும், நீர் ஊற்றுக்களைத் தேடுவதுமே அவர்களுக்குச் சரியான வேலையாய் இருந்தது. அவர்களது புதிய நாகரிகம் பல நூற்றுண்டுகளுக்கு முன் இருந்ததைவிட மிக உயர்வாகவும் சிறப்

பாகவும் இருந்தது. அவர்களது 'சிச்சின் இட்சா' என்னும் புதிய மாபெரும் நகரம் ஒன்றே இதற்குத் தக்க சான்ருகும். பிறகு மாயாக்கள் கூட்டத்தைச் சேர்ந்த மற்ரெரு கூட்டத்தினர் இவர்களோடு போர் தொடுத்து வந்தனர். நேசமாக இருந்தவர்களும் இவர்களுக்கு எதிராகத் திரும்பினர். இறுதியாகக் கி. பி. 1451-இல் பகைவர்களால் இவர்களது நகரம் பிடிக்கப்பட்டு அழிக்கப் பட்டது. போதாக் குறைக்குப் புயலும் பஞ்சமும் உள் நாட்டுக் கலகமும் நோயும் போன்ற பல கொடிய சக்திகள் மாயாக்களின் மன உறுதியையும் உடல் வலிமை யையும் தொகையையும் சிதறடித்து விட்டன. இந்நிலே யில் தான் அவர்களே ஸ்பெயின் நாட்டினர் படை யெடுத்துத் தாக்கி முற்றிலும் ஒடுக்கி விட்டனர்.

மாய மனிதன் :

ஏறத்தாழ கி. பி. 12-ஆம் நூற்ருண்டில் மாயாக் களின் இடையே 'குக்குல்கன்' என்னும் அந்நியன் ஒருவன் முதலில் போர்க் கைதியாக வந்தான். அவனே உடனே அவர்கள் மழைக் கடவுளுக்குப் பலியாகத் தங்கள் புனித மான கிணற்றில் போட்டு விட்டனர். ஆனுல் அவன் இறக்க வில்லே. அதைக்கண்ட அம்மக்கள் அவனேத் தம் தெய்வமாகக் கருதினுர்கள். அவனேப் "பறவைப் பாம்பு" அல்லது "இறகுள்ள பாம்பு" என்ற பெயரால் அழைத் தார்கள். பிறகு அவன் முற்கூறப்பட்ட 'சிச்சின் இட்சா' என்னும் நகரத்திற்கு அரசனுக்கப் பட்டான். யூகாடன் பகுதியிலேயே அவன் இணேயற்ற தலேவனுக விளங் கினுன். அவனுக்குக் கோயில்கள் கட்டப்பட்டன. இற குள்ள பாம்புச் சிலேகள் எங்கும் தோன்றின. இந்தக் 'குக்குல்கன்' என்பவன் ஒருநாள் திடீரென்று மறைந்து விட்டான். ஆகவே அந்த மாய மனிதனேப் பற்றி எங்கும்

பேச்சாயிருந்தது. பிற்கால ஆராய்ச்சி யாளரும் அவன் யாரென்று அறிய முயன்றனர். ஆனல் அம்முயற்சி வெற்றியடைய வில்லை.

தாம்ஸன் ஆராய்ச்சி:

மாயா நாட்டில் ஆராய்ச்சி செய்தவர்களுள் 'தாம்ஸன்' என்பவர் போல் நாற்பது வருடங்கள் படாத துன்ப மெல்லாம் பட்டு ஆராய்ச்சி செய்தவர்கள் ஒருவரு மில்லை. இவருடைய கருத்துப்படி மாயாக்கள் என்பவர் கள் அட்லாண்டிக் பெரும் கடலில் அமிழ்ந்துபோன ஒரு மாபெரும் கண்டத்தில் வாழ்ந்து வந்த மக்களின் ஒரு பிரிவினரே. அக்கண்டத்தின் பெயர் 'அட்லாண்டிஸ்' என்பது. ஆகையால் தான் அட்லாண்டிக் பெருங்கடல் என்ற பெயரும் அப்பகுதிக்கு உண்டாயிற்று. அது ஒரே நாளில் கண்ணுக்குத் தெரியாமல் கடலில் ஆழ்ந்து விட்டது என்று பிளேட்டோ என்னும் கிரேக்க ஆசிரியர் கூறியிருக்கிருர்.

மாயக் கிணறு:

தாம்ஸன் என்பவர் மெக்ஸிகோவில் அமெரிக்காவின் தூதராக 1885-இல் நியமிக்கப் பட்டவுடன் யூகாடன் பகுதி முழுவதிலும் நுழைதற்கரிய காடுகளில் சென்று பழைய நகரங்கள் பலவற்றைக் கண்டு பிடித்தார். 'சிச்சின் இட்சாவில்' இருந்த புனிதக் கிணற்றைப் பற்றி யும் அவர் படித்திருந்தார். அவர் அதில் தெய்வங்களுக்குப் பலியாக மனிதர்களேயும் விலே உயர்ந்த பொருள்களேயும் போடுவது வழக்கம் என்று அறிந்திருந்தார்; ஆகையால் அக்கிணற்றை அடைந்து அதற்குள் துருவிப் பார்க்க எண்ணினர். அக்கிணறு பார்ப்பதற்கு இருள் சூழ்ந்து மாயமாகவும் அஞ்சத் தக்கதாகவும் இருந்தது; 180 அடி

அகலமும் செங்குத்தான உட்புறத்தையும் கொண்ட தாயும் இருந்தது. 80 அடி ஆழத்தில் அதன் தண்ணீர்ப் பரப்பு தென்பட்டது. தாம்ஸன் ஒரு தோண்டும் கருவியை அதனுள் இறக்கி மேலே இழுத்தபோது குரங்கு, மான் முதலியவற்றின் எலும்புகள் முதலில் கிடைத்தன. மேலும் மேலும் தோண்டியெடுத்தபோது சாம்பிராணி போன்ற ஒரு பிசினும், கோவிலில் உபயோகிக்கும் தட்டுகளும், ஜாடிகளும், பலவகைப் போர்க் கருவிகளும் கிடைத்தன. பல மாதங்கள் விடாமல் தோண்டியெடுத்த பிறகு தங்கத்தாலும் விலையுயர்ந்த மரகதக் கற்களாலும் செய்யப்பட்ட பலவகை நகைகளும், ஆண், பெண்களின் எலும்புக் கூடுகளும் கிடைத்தன. அதன் பிறகு அடிப் பாறையின் துண்டுகள் தான் வந்தன. தாம்ஸன் அப்பாறைகளின் இடுக்குகளிலும் ஏதேனும் அரும் பொருள் இருக்கக் கூடும் என்று எண்ணிக் கிணற்றில் மூழ்கித் துருவிப் பார்த்தார். இவ்வாறெல்லாம் பாடுபட்டு அவர் முந்நூறுக்கு மேற்பட்ட தங்கச் சாமான்களும், சிலைகள், சட்டிகள் போன்ற வேறு பல பொருள்களும் பெற்றார். இஃது ஓர் அற்புதமான அளவிடற்கரிய பெரும் புதையல். இதன் உதவியால் இதுவரை மாயாக்களைப் பற்றித் தெரியாத பல செய்திகள் வெளியாயின. இந்த நூற்றாண்டில் இதைவிட அற்புதமான தொல்பொருள் தொகுதி வேறெங்கும் கண்டுபிடிக்கப் பட்டதில்லை என்று கூறலாம்.

கல்லறைக் காட்சி :

மற்றொரு நாள் தாம்சன் நாற்பது அடி உயரமுள்ள ஒரு கோபுரத்தின் மேல் இருந்த ஒரு கோயிலை அகழ்ந்து கொண்டிருந்த போது அதில் ஒரு கல்லறையைக் கண்டார். அதில் உருக்குலைந்து இருந்த மனித எலும்பு

களின் மேல் ஒரு பெரிய பாம்பு படுத்திருந்தது. அவ் வெலும்புகளை எடுத்த பிறகு அவ்விடத்தில் மற்றொரு கல்லறைக் குழி தென்பட்டது. இப்படியே ஒன்றன் கீழ் ஒன்றாக ஐந்து கல்லறைகள் இருந்தன. ஐந்தாவது கல்லறை சரியாகப் பூமி மட்டத்திலிருந்தது. தாம்ஸன் அதற்கும் கீழ் அகழ்ந்த போது கீழ் நோக்கிச் சென்ற கற் படிகளின் வழியாக மற்றோர் அறையை அடைந்தார். அங்கிருந்த பொருள்களை அவர் தோண்டிய போது கால் களுக்கு அருகில் ஓர் அகன்ற பாறை, சுவரின் மேல் சார்த்தப் பட்டிருந்ததைக் கண்டார். அதைத் தன் கை களால் நகர்த்தியவுடன் தரைக்கடியில் ஒரு பெரிய இருண்ட துவாரம் தெரிந்தது. அதிலிருந்து இரத்தத்தை உறையச் செய்யும்படியான குளிர்ந்த காற்று வேகமாக வீசியது. உடனே அருகிலிருந்த விளக்குகள் எல்லாம் அணைந்து விட்டன. அங்கிருந்த வேலையாட்களில் ஒரு வன் "இது தான் நரகத்தின் வாயில்" என்று அச்சத்து டன் கூறினான். அதில் தாம்சன் எட்டிப் பார்த்த பொழுது ஒரு வட்டமான கிணறு தெரிந்தது. அதனு டைய ஆழம் எவ்வளவு என்று முதலில் தெரிய வில்லை. பிறகு 50 அடி ஆழம் என்று அளந்து கண்டார்கள்.

கிணற்றில் செல்வம் :

அந்தக் கிணற்றுக்குள் தாம்சன் இறங்கி முத்துக்கள், முத்து மாலைகள், மரகதக் கற்கள், ஜாடிகள் முதலிய பல பொருள்களைக் கண்டார். இவை யெல்லாம் பூமி மட்டத்திலிருந்து 90 அடி ஆழத்தில் கிடைத்தன. இந்தப் படுகுழி 'குக்குல்கன்' என்னும் பெரிய குருவின் கல்லறை என்பதை அவர் உடனே உணர்ந்தார். இவரும் மற்றக் கல்லறைகளில் காணப்பட்டவர்களும் இயற்கையாக இறுதியடைந்தார்களா? அல்லது கொன்று புதைக்கப்

பட்டார்களா ? என்பது விளங்கவில்லை. அஃது என்றும் விளங்காத புதிராகவே இருக்கும் என்று தாம்ஸன் கருதினர். மரகதக் கற்கள் பல இடங்களிலும் கண்டெடுக்கப் பட்டதிலிருந்து அது 'மாயாக்கள்' வாழ்க்கையில் ஒரு முக்கியமான பொருளாயிருந்தது என்பது தெளிவு. அது தாயத்துக்களுக்கும், பரிசாக அளிப்பதற்கும், சூரிய வழிபாட்டிலும் பாம்பு வழிபாட்டிலும் காணிக்கையாகக் கொடுப்பதற்கும் பயன்பட்டது என்பது நன்கு தெரிகின்றது. இந்தக் கற்கள் முன்பு ஆழ்ந்துபோன அட்லாண்டிஸ் கண்டத்திலிருந்து அவர்களுக்கு ஏராளமாகக் கிடைத்திருக்க வேண்டும் என்றும் அக் கண்டம் மூழ்கிய பிறகு அவை கிடைத்தற்கு அருமையாய்விடவே, தம்மிடம் இருந்த கற்களை அவர்கள் சிறு சிறு துண்டுகளாக உடைத்து உபயோகித்து வந்தார்கள் என்றும் தாம்ஸன் கருதினர்.

மாயாக்களின் மாண்பு:

மேற்கூறிய அழிந்த கோயில்களையும் கோபுரங்களையும் வான ஆராய்ச்சி நிலையத்தையும், மெக்ஸிகோ அரசாங்கம் இப்பொழுது புதுப்பித்துப் பாதுகாத்து வருகிறது. 'சிச்சின் இட்சா' நகருக்குச் செல்லும் மக்கள் இப்பொழுது இவற்றைக் கண்டு களிக்கலாம். அருகிலேயே வீரர்களின் நினைவாகக் கட்டப்பட்ட கோயில் ஒன்றும் இருக்கிறது. இவ் வீரர்களது கோயிலும் மண்ணால் மூடப்பட்டிருந்தது. அம் மண்ணைத் தோண்டிய போது இவ்வழகான கோயில் வெளிப்பட்டது. அதில் உள்ள தூண்களில் வீரர்களுடைய சிலைகள் செதுக்கப் பட்டுள்ளன. இவற்றை எல்லாம் பார்க்கும் போது மாயா மக்கள் இணையற்ற கலைஞர்கள், தனித்திறமை வாய்ந்தவர்கள், சிறந்த அறிஞர்கள் என்றெல்லாம் தெரிகின்றது. அவர்களுடைய சித்திர எழுத்து முறையும் கணித

அறிவும் நமக்கு வியப்பை ஊட்டுகின்றன. ஆனால் அவர்களுடைய எழுத்து முறை இன்னும் நமக்கு முற்றிலும் விளங்கவில்லை. அவ்வெழுத்துக்களுள் பல வெவ்வேறு உருவமுள்ள மனித முகங்களாக உள்ளன. அவர்களுடைய எண் குறிப்பும் எண்மானமும் இப்பொழுதுள்ள அரபி, உரோம எண் முறைகள் போல இருவகையாக இருந்தன. அவர்களுடைய வான நூலறிவோ முதல்தரமானது என்னலாம். இத்தகைய மக்களைப் பற்றி இன்னமும் நாம் அறியவேண்டியவை எத்துணையோ உள. ஆனால் அறிந்து கூறக் கூடியவர்கள்தான் இன்னமும் தோன்றவில்லை. அவர்கள் எப்பொழுது தோன்றுவார்களோ?

தென் அமெரிக்கா :

இவர்களைப் போலவே தென் அமெரிக்கக் கண்டத்தின் வடமேற்குப் பகுதி முழுவதிலும் மிக உயர்ந்த நாகரிகம் படைத்த பண்டை மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்களது நாகரிகச் சின்னங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவர்களும் மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த மக்களும் ஒரே விதமான நாகரிகமுடையவர்களே. இவ்விடத்திலும் இனிச் செய்ய வேண்டிய தொல்பொருள் ஆராய்ச்சி மிகுதியாக உளது. அதற்கு இடையூறாக உள்ளவை அடர்ந்த பெருங் காடுகளும் உயர்ந்த மலைகளுமே ஆகும். இவ்விடையூறுகளையும் வென்று இடைவிடாது ஆராய்ச்சிகள் நடத்தப்பெற்று வருகின்றன.

3. மத்திய கிழக்கு நாடுகள்

(i) எகிப்து

கிரீஸிலும் மத்திய அமெரிக்காவிலும் மறைந்திருந்த பழம் பெரும் நாகரிகங்களை மண்ணுக்கடியிலிருந்து

தோண்டி யெடுத்தே கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. ஆனால் எகிப்திய நாட்டின் பழம் பெரும் நாகரிகமோ யாவரும் கண்கூடாகக் காணும்படியாக அங்குக் கோபுரங் களாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. காலக் கணிப்பிற்கு எட்டாத மிகப் பழைய காலம் முதலே அங் குள்ள கோபுரங்களும் கோயில்களும் மாபெரும் கற்சிலை களும் அந் நாட்டின் பெருமைக்குச் சான்று பகர்ந்து உலகத்தைத் தன் பால் கூவி அழைத்த வண்ணம் உள் ளன. இவற்றை விட அதன் பெருமைக்கு வெளிப்படை யான சான்றுகள் வேறு வேண்டியதில்லை. கிரீஸும் உரோமும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு உன் னத நிலையிலிருந்த போதே அங்கிருந்து எகிப்தின் அற்புதங்களைக் காண ஆயிரக் கணக்கான மக்கள் வந்து கொண்டிருந்தனர். ஆம். அன்றே எகிப்தியப் பிரமிடுகளை (கோபுரங்களை) உலக அதிசயங்களுள் ஒன்றாக மக்கள் கருதினர். ஆனால் அவற்றைக் கட்டியவர்களைப் பற்றி அவர்கள் ஒன்றும் அறியார்கள். அந்த நாகரிகச் சின் னங்களை ஆக்கியவர்கள் யார் ? அந்த மாபெரும் சிலை கள் யாருடையவை? என்று அறியாமல், அக்காலப் பேரரசர்கள் கூட வியப்பில் மெய்ம் மறந்து அவற்றின் முன்னர் நின்று தம் சிறுமையை உணர்ந்தார்கள். அவர்கள் எல்லோரும் அழிந்த பிறகும், எகிப்திய நாகரிகச் சின்னங்கள் அழியாது பெருமையுடன் ஓங்கி நின்று கொண்டிருக்கின்றன.

பழம்பொருட் பொக்கிடம் :

இன்று அக் கால உரோமர்களும் கிரேக்கர்களும் எகிப்தைப் பற்றி அறியாத பல செய்திகளை நாம் அறிந் திருப்பதற்குத் தொல் பொருள் ஆராய்ச்சியே காரண மாகும். உலகத்தில் ஓங்கியிருந்த பழம் பெரும் நாகரிகங்

கள் எல்லாவற்றையும் விட எகிப்தின் மறைந்த நாகரிகத்தைப் பற்றி இன்று நாம் அதிகம் அறிந்துள்ளோம். எகிப்தைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுடைய சுவர்க்கம் என்றே சொல்லலாம். அங்குத் தோண்டிய மாத்திரத்தில் வேண்டிய பொருள்கள் கிடைக்கின்றன. அந் நாட்டின் மிகுந்த வெப்ப நிலை காரணமாக அங்குள்ள சின்னங்கள் ஒன்றும் அழியாமல் அன்று இருந்தது போலவே இன்றும் உள்ளன; கலைஞன் கையிலிருந்து புத்தம் புதிதாகக் கடைந்தது போல் காணப்படுகின்றன.

பாந்த இடுகாடு :

எகிப்தியர்கள் மதத்திற்கு மிகவும் முக்கியத்துவம் அளித்து வந்தார்கள். மரணத்திற்குப் பிறகு மறு பிறவி உண்டு என்ற நம்பிக்கையோடு இறந்தவர்களுக்குப் பல சிறப்புக்கள் செய்து, அவர்கள் மேல் விலை உயர்ந்த பொருள்களை அள்ளிக் கொட்டினார்கள்; அடுத்த பிறவியில் அவர்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கொடுத்து வழி அனுப்பினார்கள். சுமார் 5000 ஆண்டுக் காலமாக அவர்கள் இவ்வாறு செய்து வந்னர். அவர்கள் தம் முயற்சியால் பெற்ற அரும்பெரும் பொருள்களையெல்லாம் இறந்தவர்களுடன் சேர்த்துப் புதைத்தனர். அப்படி புதைக்கப்பட்ட சவக் குழிகளிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட உணவுப் பொருள்கள், பாத்திரங்கள், ஆடையணிகள், தட்டுமுட்டுச் சாமான்கள், சிலைகள், புத்தகங்கள், நகைகள் முதலியவற்றிலிருந்து அவர்களுடைய நாகரிகம் முழுவதையும் நாம் இன்று அறிய முடிகின்றது. அங்கே 5000 ஆண்டுக் காலத்தில் 73 கோடி மக்களுக்கு மேல் இவ்வாறு சிறப்புடன் புதைக்கப்பட்டிருந்தார்கள் என்று தெரியவருகின்றது. இதைக் காணும்

போது எகிப்து நாடு முழுவதுமே உயர்ந்த புதையல்கள் உள்ள ஒரு பரந்த இடுகாடு என்று கூறலாம். இன்றும் அங்கு ஏதாவது ஒரு புதிய இடத்தில் தோண்டினால் ஏதேனும் அரிய பொருள் கிடைப்பது உறுதி.

அந்நியர் கருத்தின்மை :

எகிப்தை வென்ற உரோமர்கள் ஏன் அங்கே தோண்டிப் பார்க்கவில்லை என்பது நமக்கு வியப்பாக இருக்கிறது. ஒருவேளை அவர்களுக்கு அங்கே செல்வம் புதைந்திருந்தது தெரியாதோ? அவர்களுக்குப் பிறகு எகிப்தை ஆண்டவர்களும் ஏன் அங்கே தோண்டவில்லை? அல்லது கண்ணுக்கு எதிராக எங்கும் மலைபோல் தெரியும் கோபுரங்களையும் அவற்றிலுள்ள எழுத்துக்களையும் ஏன் ஆராயவில்லை? இதில் அவர்கள் கருத்துச் செல்லவில்லை போலும். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எகிப்தின் மீது படையெடுத்துச் சென்ற நெப்போலியன் கூட அக் கோபுரங்களைக் கண்டு வியந்து அவற்றைப் பற்றி உலகுக்கெல்லாம் எடுத்துக் கூறுமாறு அறிஞர்களுக்குக் கட்டளையிட்டான் என்று சொல்லப் படுகின்றது. அவனுடைய ஆர்வம் அத்துடன் நின்றுவிட்டது. ஆனால் அவ்வறிஞர்களுள் ஒருவர் எகிப்தைப் பற்றி 36 புத்தகங்களைத் தொடர்ச்சியாக எழுதி வெளியிட்டார்.

சித்திர எழுத்துக் கண்டுபிடிப்பு :

1799-இல் நெப்போலியனுடைய படை வீரன் ஒருவன் நிலத்தைத் தோண்டிய போது புதுமையான எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்த தட்டையான கல்லைக் கண்டெடுத்தான். அவனுக்கு அப்போது அதைப் பற்றி ஒன்றும் தெரியாதெனினும் அஃது ஓர் அரும் பெரும் பொக்கிடம் என்று ஆராய்ச்சியாளர் அறிந்தனர்.

பண்டை எகிப்திய நாகரிகத்தை அறிவதற்கு அஃது ஒரு மந்திரத் திறவுகோல் போல உதவிற்று. அவ்வெழுத்துக் களைப் படித்து அறிவது முதலில் முடியாத செயலாகவே இருந்தது. ஏனெனின் விலங்குகள், பறவைகள், பாம்புகள், பூச்சிகள், இலைகள், மலர்கள், மக்கள் முதலிய உருவங்கள்தான் அதிலிருந்தன. இடையிடையே வட் டங்களும் சதுரங்களும் அரை வட்டங்களும் முக்கோணங் களும் முடிச்சுகளும் சுருக்குகளும் போன்ற பல இருந் தன. இவையெல்லாம் சித்திரங்கள் அல்லது உருவங்கள். இவற்றை எல்லாம் எழுத்துக்கள் என்று எப்படி ஊகித் துப் படித்துப் பொருளறிய முடியும்? முடிவில் இவை ஒரு வகை எழுத்துக்களே என்று அறிஞர் உணர்ந்த பிறகும் இவற்றைப் பலர் பலவிதமாகப் படித்துப் பொருள் கூறி னர். இறுதியாக ஒரு பிரெஞ்சு அறிஞர் இச் சித்திர எழுத்துக்களைச் சரியாகப் படித்தறியும் முறையை யாவரும் ஒப்புக்கொள்ளும்படி எடுத்துக் கூறினார். இச் சித்திரங் களில் சில முழுச் சொற்களாகவும், சில தனி எழுத்துக் களாகவும், மற்றும் சில, சொற்களின் பகுதிகளாகவும் இருந்தன. எகிப்திலிருந்து கிடைத்த ஆயிரம் எழுத்துக் களில் சுமார் 100 எழுத்துக்களுக்கு மட்டுமே இவ்வாறு 23 ஆண்டுகள் முயன்று பொருள் கண்டுபிடிக்கப்பட்டது என்றால் அவற்றை முற்றிலும் படித்தறிவது எத்துணை அரும் செயல் என்று கூறவும் வேண்டுமோ?

அந்நியர் திரண்டு வருகை:

இதற்கிடையில் எகிப்தியச் சின்னங்களை யாவரும் சேகரிக்கத் தங்கப் புதையல் எடுக்க வருபவர்கள் போலத் திரண்டு வந்தனர். இப்படி வந்தவர்களுள் மிகப் பெரும் பாலோர் கல்லறைகளினுள் சவப்பெட்டியிலிருந்த காகிதச் சுருளை எடுப்பதிலேயே அளவுகடந்த ஆர்வம் காட்டினர்.

இதற்குக் காரணம் அவற்றிலிருந்த எழுத்துக்களைப் படித்தறிய வேண்டும் என்னும் அவாவே. எகிப்தில் கூலி வேலை செய்யும் சாதாரண மக்களும் தமக்குக் கிடைத்த பழம் சின்னங்களை அங்கு வருபவர்களுக்கு விற்றுப் பெரும் பொருள் பெற்றனர். இப்படி வந்தவர்களுள் 'ஆகஸ்ட் மேரியெ' என்ற பிரெஞ்சுக்காரர் பழம் சின்னங்கள் கொள்ளை போவதைக் கண்டு மனம் பொறுமல் அவற்றைக் காப்பாற்ற விரும்பினர்.

தங்கச் சிலைகள்:

ஒருநாள் மேரியெ தற்செயலாக ஒருவருடைய வீட்டுத் தோட்டத்தில் கற்களால் செய்யப்பட்ட சிங்கங்களின் (Sphinxes) சிலைகளைக் கண்ணுற்ருர். பிறகு மற்றும் சில இடங்களில் அவை அளவற்று இருப்பதைக் கண்டார். இவையெல்லாம் எங்கிருந்து வந்தன என்பது அவருக்குப் புரியவில்லை. ஏதோ ஓரிடத்திலிருந்து இவை கணக்கின்றிக் கிடைத்திருக்கின்றன என்று அவர் ஊகித்தார். முன்பு அவர் ஒரு நூலில் படித்திருக்கிற செய்தி திடீரென்று நினைவிற்கு வந்தது. ஒரு கோயிலுக்குச் செல்லும் நீண்ட பாதையின் இருபுறமும் இந்தச் சிங்கச் சிலைகள் இருப்பதாக அந்நூலில் கூறப்பட்டிருந்தது. அப்பொழுது அவர் அதே வழியின்மீது நின்றுகொண்டிருந்ததை உணர்ந்தார். 600 அடி நீளமுள்ள அப்பாதையைத் தோண்டியபோது 140 சிங்கச் சிலைகள் கிடைத்தன. உடனே அவர் எகிப்தியப் பழம் சின்னங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொண்டார்.

பெட்ரியின் முயற்சி:

பிறகு இங்கிலாந்திலிருந்து வந்த பழைமை விரும்பியாகிய 'பெட்ரி' என்பவர் தொல்பொருள் ஆராய்ச்சியில்

ஒரு புதுத் திருப்பத்தை உண்டாக்கினார். அவர் எகிப்திய கோபுரங்களின் அளவுகளை யெல்லாம் குறித்துக் கொண்டார்; இரவில் அவற்றில் நுழைந்து நெடு நேரம் துருவிப் பார்த்தார். எகிப்தில் உள்ள மிகப் பெரிய கோபுரம் 450 அடி உயரமும், 2640 அடி சுற்றளவும் கொண்டது. உலக அற்புதங்கள் ஏழினுள் எகிப்தியப் பிரமிடுகள் முதன்மை யானவை என்று கூறப்படுவதில் உள்ள உண்மை நேரில் பார்ப்பவர்களுக்குத்தான் விளங்கும். இத்தகைய கோபுரங்களின் மேலும் உள்ளும், பெட்ரியின் தலைமையில் பல ஆராய்ச்சியாளர்கள் சென்று பார்த்து அவற்றின் இரகசியங்களை எல்லாம் உலகுக்கு அறிவித்து விட்டார்கள்.

சடலத்தின் பாதுகாப்பு:

எகிப்தியர்கள் இத்தகைய வானளாவும் கோபுரங்களைக் கட்டுவதில் எவ்வளவு பொருளும் காலமும் செலவிட்டிருப்பார்கள்? அவர்கள் ஏன் அவற்றைக் கட்டினார்கள்? எகிப்தியர்களுடைய அடிப்படையான நம்பிக்கைகளில் ஒன்று, நம் உயிர் உடலை விட்டு நீங்கிய பிறகும் உடல் பாதுகாக்கப்பட்டால் அவ்வுயிர் அவ் உடலில் புகுந்து இவ்வுலகத்திற்குத் திரும்பி வரும் என்பதுதான். ஆகவே உயிர் நீங்கிய பின் உடலைப் பாதுகாக்க வேண்டியது தம் கடமை என்று அவர்கள் கருதினார்கள். இதற்காக உடலை அழியாமல் பாதுகாக்கும் முறைகளை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.* அப்படிப் பாதுகாக்கப்பட்ட உடலைப் பத்திரமாக வைப்பதற்குப் பெரிய கோபுரம் போன்ற சமாதிகளைக் கட்டினார்கள். ஆகையால்தான் எகிப்தில்

*இப்படிப் பாதுகாக்கப்பட்ட உடலுக்கு மம்மி (Mummy) என்று பெயர்.

எப்பக்கம் நோக்கினாலும் சமாதிகளே காணப்படுகின்றன. குறிப்பாகச் செல்வர்கள், தங்கள் ஆன்மா அழியாமலிருப்பதற்கு, உடலையும் அழியாமல் பாதுகாப்பதில் பெரும் பொருள் செலவிட்டார்கள். எகிப்திய அரசர்கள் தெய்வத் தன்மை பொருந்தியவர்களாகக் கருதப்பட்டதால் நாட்டின் செல்வம் முழுவதும் அவர்களுக்குச் சமாதி கட்டுவதில் செலவழிக்கப்பட்டது. இது மட்டுமா? நாட்டின் அறிவு, திறமை, உழைப்பு எல்லாம் அதிலேயே திரும்பின. "குபூ" என்னும் அரச குரு (Pharaoh Khufu)+ தான் உயிருடன் இருக்கும் போதே, இறந்த பின் தன் சடலத்தைப் பாதுகாக்க இலட்சம் வேலையாட்களை ஏவி முப்பது வருஷங்கள் இடைவிடாது பாடுபட்டு ஒரு சமாதியைக் கட்டிக் கொண்டான். காலத்தாலும் கள்வராலும் அச் சமாதி அழிக்கப்படக் கூடாது என்பதுதான் அவனுடைய ஒரே நோக்கம். இதற்காக அவன் தன் நாட்டு மக்கள் மீது கொடிய வரிகளை விதித்து அவர்களுடைய உழைப்பை உறிஞ்சிக் கொண்டிருந்தான்.

உழைப்பும் திறமையும் :

இதைக் கட்டிய உழைப்பாளிகளோ தம் பொறுமையாலும் திறமையாலும் உடல் வலிமையாலும் அருஞ் செயலைச் செய்து முடித்து உலகிலேயே கட்டிடங்கள் கட்டுவதில் இணையற்றவர்கள் என்று பெயர் பெற்றார்கள். பெரிய பாறைகளை உடைப்பதும் தூக்கி நிறுத்துவதும் இழுத்துச் செல்வதும் இவர்களுக்கு எளிய செயல்களாக இருந்தன. கோபுரங்களின் மேல் கட்டிலுள்ள கற்கள் ஒவ்வொன்றும் பல டன் எடையுள்ளவை என்பதையும் உருவச் சிலைகள் செதுக்கப்பட்ட கற்கள் ஒவ்வொன்றும் நூற்றுக் கணக்கான டன் எடையுள்ளவை என்பதையும்

+ எகிப்தில் அரசர்களே மத குருக்களாகவும் விளங்கினர்.

அறியும் போது இவற்றை இவர்கள் எப்படிக் கொண்டு வந்து வைத்தார்கள் என்பது மிக வியப்பாக இருக்கிறது.

ஆன்மப் பாதுகாப்பு :

இச் சமாதிகள் சடலத்துக்கு மட்டுமன்றி அதை விட்டு நீங்கிய ஆன்மாவிற்கும் இருப்பிடமாகக் கருதப் பட்டன. உயிருடன் இருந்த பொழுது செய்த செயல்களெல்லாம் அஃது அங்கே பிறகும் செய்து வரும் என்று மக்கள் நம்பினுர்கள். ஆகையால் உறவினர்களும் நண்பர்களும் அந்த ஆன்மாவிற்கு வேண்டிய பொருள்களை அடிக்கடி கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். சிறப்பாக அரசர்களுக்கும் செல்வர்களுக்கும் இத்தகைய காணிக்கை தவருது கடமையாகச் செலுத்தப்பட்டு வந்தது. ஒரு வேளை இக் கடமையைப் பின் சந்ததியினர் செலுத்தத் தவறிவிட்டால் ஆன்மாக்கள் அழிந்து விடுமே என்ற அச்சத்தினுல் உடலைச் சமாதியில் இடும் போதே அளவு கடந்த பொருள்களைப் பெய்து வைப்பது வழக்கமாகி விட்டது. பெருஞ் செல்வர்கள் தம்முடைய சொத்தில் ஒரு பகுதியை உறவினருக்கோ பிறருக்கோ இக் கடமையைச் செலுத்துவதற்காக எழுதிவைப்பது முண்டு.*

கொள்ளையர் கூட்டம் :

ஆனுல் அந்தோ! அரசர்களும் செல்வர்களும் புதையுண்டிருந்த சமாதிகளில் ஏராளமான செல்வம் இருந்ததை அறிந்த பிற்கால மக்களிடையே தோன்றிய கொள்ளைக் கூட்டத்தார் அங்கே புகுந்து அவற்றையெல்

---

* இவ் வழக்கம் நம் நாட்டில் இந்துக் குடும்பங்களில் பிதிர்க்கடன் செய்வது போன்று உள்ளது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

லாம் திருடிச் சென்று விட்டனர். வானளாவிய கோபுரங்கள் கொள்ளைக் கூட்டத்தாரைக் கூவி அழைப்பது போன்று இருந்தன. சிறிய சமாதிகளில் அதிக செல்வம் இராது என்று அவர்களுக்குத் தெரியும். சமாதிகளின் பெருமையே அதிலுள்ள பொருள் பறிபோவதற்குக் காரணம் என்பதை உணர்ந்த அரசர்களும் பிரபுக்களும் திருடர்களிடமிருந்து தப்புவதற்கு வேறு வகையான சமாதிகளைத் தந்திரமாகக் கட்டத் தொடங்கினர்.

பெட்ரியின் திகைப்பு :

சமாதிகளை எவ்வளவு சாமர்த்தியமாகக் கட்டியும் கள்ளர்கள் அவற்றில் நுழைந்து விட்டதால், கட்டிடக் கலைஞர்களுக்கும் கள்ளர்களுக்கு மிடையே பிற்காலத்தில் ஒரு கடும் போட்டி நடந்தது என்று கருத வேண்டி இருக்கிறது. முன்பெல்லாம் சமாதிக் கோபுரத்தின் வடபுறத்தில் 40 அடி உயரத்திற்கு மேல் பெரிய பாறையினுல் மூடப்பட்ட ஒரே ஒரு திறப்பு இருந்தது. பிற்காலச் சமாதிகளில் திறப்பு எங்கிருந்தது என்பதைக் கண்டு பிடிக்கக் கூட முடியவில்லை. 'பெட்ரி' என்னும் ஆராய்ச்சியாளர் பிற்காலத்தில் கட்டப் பட்ட ஒரு சமாதியைச் சுற்றிப் பார்த்து அதில் எங்கும் திறப்பு இல்லாமையால் அதன் மையத்தில் துளைத்துக் கொண்டு உள்ளே சென்ருர்; பல வாரங்கள் குடைந்து பாதி தூரம் உள்ளே சென்றவுடன் ஓர் அறையின் சுவரை அணுகினுர். அதிலும் குடைந்து உள்ளே சென்று பார்த்த போது அவ்வறையின் அடிப்பாகத்தில் திருடர்களால் செய்யப்பட்ட ஒரு துவார மிருந்தது. தனக்கு முன்பு அவர்கள் எப்படியோ அதில் நுழைந்து விட்டதைக் கண்டு அவர் ஏமாற்றமும் வியப்பும் அடைந்தார். அந்தத் துவாரத்தில் எட்டிப் பார்த்த போது இரண்டு சவக் குழிகள் தெரிந்

தன. அவற்றிலிருந்த பொருள்களெல்லாம் அபகரிக்கப் பட்டிருந்தன. ஆனால் ஒரு குழியில் மட்டும் காணிக்கை யாகக் கொடுக்கப்பட்ட பொருள்களின் பெயர்ப் பட்டியல், ஒரு சலவைக் கல்லில் சித்திர எழுத்தினால் எழுதப்பட்டி ருந்தது. அப் பொருள்களின் எண்ணிக்கை நூற்றுக்கு மேலிருக்கும். பிறகு உள்ளே அமைந்திருந்த வழிகளைப் பின்பற்றிச் சென்று, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருடர்கள் வெளியிலிருந்து நுழைந்த வழியைக் அவர் கண்டுபிடித்தார். திருடர்களைத் திகைக்க வைப்பதற்காகச் சமாதி கட்டியவர்கள் செய்த தந்திரங்களை எல்லாம் அவர்கள் வென்று விட்டதைக் கண்டு 'பெட்ரி' மருண்டு நின்றார்.

வழியடைக்கும் கல்:

சமாதியில் சுற்றிச் சுற்றிப் பல படி வரிசைகளின் வழியாகப் பல அறைகளின் உள்ளே நுழைந்த பிறகு சவக் குழியிலிருந்து வெளியே வருவதற்கு வழி தெரியா மல் பன் முறை திகைக்க வேண்டி யிருக்கும். பல இடங் களில் வழி திடீரென்று முடிவடைந்து விடும். மற்றொரு புறம் எங்கேயோ உண்மையான வழி இருக்கும். அப்படி அவ்வழியே சென்று பார்த்தாலும் உண்மையான சவக் குழி கிடைக்காமல் வெறும் குழிகள் தானிருக்கும். அவற் றில் எங்கோ ஒரு நழுவு கதவு காண்டற்கு அரியதாய் மறைந்திருக்கும். அதைத் திறந்து கொண்டு சென்றா லும் மற்றோர் வெற்றறை தான் தென்படும். இப்படி எத்தனையோ மயக்கம் தரும் பாதைகளின் வழியாக மேலும் கீழுமாக உள்ள பல அறைகளில் நுழைந்து இறுதியாக 45 டன் எடையுள்ள ஒரு பெரும் பாறையை அப்புறப்படுத்தி உண்மையான சவக் குழியை அடைய வேண்டும். அப் பாறையை அகற்ற முடியாதாகையால்

அதில் துவாரம் குடைந்து கொண்டுதான் உள்ளே செல்ல வேண்டும். இவ்வாறுதான் திருடர்கள் செய்தார்கள் என்பதைக் கண்ட போது 'பெட்ரிக்கு' உண்டான வியப்பிற்கு அளவேயில்லை.

சவப் பெட்டி :

சவக் குழியில் சில விலையுயர்ந்த கற்கள் தவிர மற்ற எல்லாம் களவு போய் விட்டிருந்தன. சவக் குழி 22 அடி நீளமும் 3 அடி கனமும் உள்ள ஒரு மஞ்சள் பாறையிலிருந்து குடைந்து செய்யப்பட்டிருந்தது. அஃது ஒரு விலைஉயர்ந்த கல். அதன் எடை 110 டன். அதைக் கொண்டுபோக முடியாத காரணத்தினுல்தான் திருடர்கள் அதை அங்கேயே விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். இந்தக் கல்லறை 'அமனெம்ஹோட்' என்னும் அரசனுடையது என்று அங்கிருந்த ஒரு கல் வெட்டினுல் தெரிந்தது. அவனுடைய மகளும் அவன் அருகிலேயே புதைக்கப் பட்டிருந்தாள்.

பிரபுவின் சவம் :

மற்ருெரு சமாதியில் பூமிக்குக் கீழே 40 அடி ஆழத்தில் தண்ணீர் நிறைந்த இடத்தில் ஒரு சவப் பெட்டியில் 'ஹொருடா' என்னும் பிரபு அடக்கம் செய்யப் பட்டிருந்தான். இதைக் கண்டு பிடிப்பதற்குப் பல மாதங்கள் உழைக்க வேண்டி யிருந்தது. அச் சவப் பெட்டியின் மூடி இரண்டடி கனமுள்ள பாறை. அதைத் திறக்க முடியாததால் உடைக்க வேண்டியதாயிற்று. தண்ணீரில் நின்று கொண்டு கும்பிருட்டில் அதனை அப்படியே கட்டித் தூக்கி வெளியே கொண்டு வந்தார்கள். பிறகு அதைத் திறந்து பார்த்த போது, தங்க மோதிரங்களும் உருவச்

சிலைகளும் மரகதச் சிலைகளும் மற்றும் பல விலையுயர்ந்த கற்களால் ஆகிய தாயத்துக்களும் கவசங்களும் அச் சவத்தை அணி செய்து கொண்டிருந்தன. அத்தகைய காட்சியை ஆராய்ச்சியாளர் எவரும் அதுவரையில் கண்டதேயில்லை. இவற்றைப் பெட்ரி கண்ட போது மறைந்திருக்கும் பகைவர்களிட மிருந்து தன்னைக் காப் பாற்றிக் கொள்ள அப் பிரபு என்னென்ன ஏற்பாடுகளை யெல்லாம் செய்து வைத்துக்கொண்டிருந்தார் என் றெண்ணி வியந்தார். இல்லாவிட்டால் தாயத்துக்களும் கவசங்களும் மந்திர சக்தியும் அப் பிணத்திற்கு எதற்கு? இது போலவே, சிறிய கோபுரங்கள் சிலவற்றை அகழ்ந்து பார்த்த போது ஒவ்வொரு சவக் குழியிலும் மந்திர வாச கங்கள் எழுதப்பட்டிருந்தன. மறு பிறவியில் எங்கே செல்வது ? என்ன செய்வது ? என்பன போன்ற பல கட்டளைகள் அம் மந்திரத்தில் அடங்கி இருந்தன. பிற் காலத்தில் ஒவ்வொரு சவத்துடனும் ஒரு மந்திரப் புத்த கத்தையே புதைத்து வைக்கும் வழக்கம் உண்டாயிற்று.

அரண்மனைக் காட்சி :

கோபுரங்களின் கீழிருந்த அரச குருக்களின் அரண் மனைகளை அகழ்ந்து பார்த்த போது அவற்றில் பல வியத் தகு காட்சிகள் நிறைந்திருந்தன. அத்தாணி மண்ட பத்தில் விலையுயர்ந்த மரங்களில் அழகான அரிய செதுக்கு வேலைகளும் வர்ணப் பூச்சுகளும், வரிசை வரிசையான தூண்கள் தோறும் காணப்பட்டன. அறைகளின் கதவுக ளெல்லாம் தங்கத் தகட்டால் மூடப்பட்டு, மரகதம், மாணிக் கம் முதலிய கற்களால் பதிக்கப்பெற்றிருந்தன. சுவர் களிலும் கூரைகளிலும் தரையிலும் பல அரிய காட்சிகள் ஓவியமாகத் தீட்டப்பட்டு இருந்தன. ஆசனங்கள், கட் டில்கள் எல்லாம் கலைச் சிறப்புடன் மிளிர்ந்தன. அரச

குருவின் அரண்மனை அமரர் நகரம் போல இன்பமய மாய் இருந்தது. அவனுடைய ஒப்பனை (அலங்கார) வேலைகளைக் கவனிப்பதற்கு மட்டும் அரண்மனையிலேயே அளவற்ற தொழிலாளர்கள் இருந்தார்கள். கண், உதடு, கன்னம், தலை மயிர், விரல்கள், நகங்கள் முதலிய ஒவ்வோர் உறுப்பையும் அலங்கரிப்பதில் கை தேர்ந்த கலைஞர்கள் இருந்தார்கள். ஆடைகள், கால் அணிகள், இடுப்பணிகள் முதலியவற்றை ஆடம்பரமாக அணிவிப்பதற்கு அநேகர் இருந்தனர். நடனக் கலை, இசைக் கலை, விகடக் கலை முதலியவற்றில் தேர்ந்த பலரும் ஆயத்தாரும், அரசனையும் அரசியையும் அகமகிழ்வித்துக் கொண்டிருந்தனர்.

அரக்கத் தனம் :

இவ்வளவு இன்பமாகக் காலம் கழித்துக் கொண்டு வந்த அரச குடும்பத்தினர் மக்கள் நலனில் சிறிதும் கருத்தைச் செலுத்தவில்லை என்பதுதான் வருந்துதற்குரியது. அவர்களின் கீழ்க் குடிகள் பட்ட கொடுமைக்கு அளவேயில்லை. வெயில் நிறைந்த பாலை வனத்தில் பகல் முழுவதும் அரசருக்கும் பிரபுக்களுக்கும் பாடுபட்ட வண்ணமாகவே அவர்கள் இருந்தார்கள். அவர்களுடைய உறுப்புக்களெல்லாம் உழைத்து உழைத்துத் தேய்ந்து போயின. உட்கொள்வதற்கு உணவுகூட உண்டோ இல்லையோ என்ற நிலைதான் இருந்தது. களைப்பு மிகுதியால் வேலை செய்யாதிருந்தால் உதையும் அடியும் தான் கிடைக்கும். இவ்வாறு செல்வத்திற்கும் ஆடம்பரத்திற்கும் இடையில் கண்ணீர் விட்டுக் கதறும் குடிமக்கள் துயரம் எங்கும் தலை தூக்கி நின்றது. இரக்கம் என்பது இம்மியுமில்லாத அரக்க மனம் படைத்த அரசர்களால் அவர்கள் பட்ட துன்பத்திற்கு அளவே யில்லை.

உயர்குடி மக்கள், இரக்கம் வேறு இன்பம் வேறு என்று கருதினர். அவர்கள் இவ்விரண்டுக்கும் தொடர்பில்லை என்று எண்ணினார்கள் போலும்!

முறை மாற்றம்:

உயிருடன் வாழ்ந்த காலத்தில் அடைந்த இன்பமெல்லாம் தாம் இறந்த பிறகும் அடைய வேண்டும் என்பதற்காகவே அரசர்களும் செல்வர்களும் அவ்வின்பப் பொருள்களை யெல்லாம் தங்கள் சவத்துடன் சேர்த்து புதைக்குமாறு செய்தனர். இதை யறிந்தே திருடர்கள் சவக் குழிகளில் புகுந்து எல்லாவற்றையும் கொள்ளை கொண்டு ஓடினர். இவ்வாறு எகிப்திய அரச குருக்களின் பதினெட்டாவது தலைமுறை வரை திருடர்கள் தொல்லை தாங்க முடியாமல் இருந்த காரணத்தினால் பிற்காலத்தில் அவர்கள் தம் சமாதிகளைப் பிறர் கண்ணில் படாதவாறு பள்ளத் தாக்குகளில் நில மட்டத்திற்கு அடியில் கட்டலாயினர். முதல் முதலில் சமாதிக் கோபுரம் யாவரும் அறியுமாறு ஓரிடத்திலும், சவக் குழி ஒருவரும் அறியாதவாறு மற்றோர் இடத்திலும் தனித் தனியே கட்டப்பட்டன. இதனால் இறந்தவர்களுடைய ஆன்மாவானது சவக் குழியிலிருந்து கோயிலுக்குத் தினந்தோறும் வந்து வந்து போக வேண்டிய தொல்லை இருந்தாலும், திருடர்களைத் தவிர்ப்பதற்கு வேறு வழி இல்லை என்று கருதப்பட்டது! சுமார் கி. மு. 1500-ஆம் ஆண்டிலிருந்து இந்தப் புதிய ஏற்பாடு தொடங்கி 500 ஆண்டுக் காலம் அவ்வாறே நடந்தது. இக் காரணத்தினால்தான் **மாண்டவர் நகரம்** (City of the Dead) என்று ஒன்றும் **சமாதிப் பள்ளத்தாக்கு** (Valley of the Tombs) என்று ஒன்றும், தனித் தனியாக இன்றளவும் காணப்படுகின்றன!

மீண்டும் களவு :

ஆனால், அந்தோ! இந்த ஏற்பாட்டினாலும் அவர்கள் திருடர்களை ஏமாற்ற முடியவில்லை. மறைவான பள்ளத் தாக்கிற்கு எப்படியோ வழி தேடிக் கொண்டு அவர்கள் கொள்ளை அடிக்க வந்து விட்டார்கள். அரசனைச் சேர்ந்த வர்களோ அல்லது அவனது கொடுமையைப் பொறுக்க முடியாத பிறரோ திருடர்களுக்கு உடந்தையாய் இருந்த னர். சமாதியில் கொள்ளை இடுவது ஒரு சிறப்புத் தொழி லாக மாறி அதற்கு அரசாங்க அலுவலர் ஆதரவும் கிடைத்துக் கொண்டிருந்தது. ஒரு முறை ஒரு கொள் ளைக் கூட்டத்தினர் உதவியைக் கொண்டே பழம்பொருள் பாதுகாப்பாளர் ஒருவர் ஒரு சவக் குழியில் 40 அரச குருக் களின் சடலங்களைக் கண்டார். அவர்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டவர்கள். அவர்களுள் **'இரண்டாம் இரமேசஸ்'** என்னும் அரசனும் ஒருவன். மூவாயிரம் ஆண்டுகளாகியும் அவர்களுடைய உடல்கள் அழியாமல் பாதுகாக்கப் பட்டிருந்ததை அவர் கண்டு மருண்டு நின்றார். இச் சவங்களை யெல்லாம் அவர் வெளியே கொண்டு வந்து ஊருக்குள் எடுத்துச் சென்ற போது மக்கள் ஆத்திரம் கொண்டு அவர் மீது சுட்டனர்; மங்கையர் அழுது புரண்டனர்.

திருடரிடமிருந்து தப்பிய சமாதி :

அதிருஷ்ட வசமாக ஒரே ஓர் அரசனுடைய சமாதி மட்டும் திருடர்களால் தீண்டப் பட்டிருந்தும் அளவற்ற செல்வக் குவியலுடனிருந்ததை ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்தார். இஃது அவருக்கு வியப்பினும் வியப்பாக இருந் தது. அதைக் கண்டு பிடித்ததற்காக அவர் தம் நல் வினையை எண்ணி மகிழ்ந்தார். 1905-இல் **"ஆர்தர் வைகல்"** என்னும் ஆராய்ச்சியாளர் **"யுவா"** என்னும்

இளவரசனின் சமாதிக்குள் நுழைந்து 3000 ஆண்டுகளுக்கு முன் அங்கு வைத்திருந்த பொருள்கள் எல்லாம் அப்படியே புத்தம் புதியனவாக இருந்ததைக் கண்டு திகைத்துப் போனார். அவனுடைய மனைவியும் அவன் அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டிருந்தாள். அவர்களுக்கு அழகாகச் செதுக்கிச் செய்யப் பட்டுத் தங்கத் தகட்டால் மூடப்பட்டிருந்த மூன்று நாற்காலிகள் அமருவதற்காக அருகில் இருந்தன. ஒரு மூலையில் பளபளவென்று மின்னும் பொற் கலங்கள் மண்டிக் கிடந்தன.

துத்-அங்-காமன் சமாதி :

இவ்வாறே 'கார்னர்வான்', 'கார்ட்டர்' என்ற இரண்டு பேரும் 'துத்-அங்-காமன்' என்பவருடைய கல்லறையைச் சமாதிப் பள்ளத் தாக்கில் கண்டு பிடித்தார்கள். இதற்காக அவர்கள் அங்கு ஆறு ஆண்டுகள் அலைந்து திரிந்து இறுதியில் 1922-இல் அதை அங்குக் கண்டார்கள். ஒரு வரிசையான படிகளின் வழியாகக் கீழே இறங்கிச் சென்றதும் அங்கே துத்-அங்-காமனுடைய முத்திரை வைத்துப் பூட்டப்பட்ட கதவு ஒன்று காணப்பட்டது. திருடர்கள் அக் கதவை உடைத்திருந்ததும், பின்னர் அது செப்பம் செய்யப்பட்டிருந்ததும் விளங்கியது. அக் கதவை உடைத்துக் கொண்டு 'கார்ட்டரும்', 'கார்னர் வானும்' உள்ளே செல்ல அங்கே மற்றொரு முத்திரையிடப்பட்ட கதவு இருந்தது. அதுவும் முன்னரே திறக்கப்பட்டு மறுபடியும் பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு துளை செய்து எரியும் மெழுகுவர்த்தியை உள்ளே செலுத்திப் பார்த்த போது அங்கிருக்கும் அற்புதமான பொருள்களெல்லாம் பளபளப்பாகத் தெரிந்தன. மக்கட் சிலைகள், விலங்குகளின் சிலைகள், பொற்கலன்கள் எல்லாம் அதில் மிளிர்ந்து கொண்டிருந்தன. அந் நில

வறை ஒரு பெரிய கண்காட்சிச் சாலை போலத் தோன்றியது. தங்கத் தகடு பதித்த மூன்று கட்டில்களும், இரண்டு அரசர்களுடைய சிலைகளும், கல் பதித்த செப்புகளும், ஜாடிகளும், பொற் சிங்காதனமும், நாற்காலிகளும், பெட்டிகளும், படுக்கைகளும், தேர்களும் முதலான பல பொருள்களால் அது நிறைந்திருந்தது. இது கனவில் கண்ட காட்சியன்று என்று அவர்கள் தெளிந்த பிறகு, கல்லறையில் சவப் பெட்டி இல்லை என்பதை உணர்ந்தார்கள். ஆனால் சற்றுக் கவனித்த பிறகு முத்திரையிடப் பட்ட ஒரு வாயிலின் இரு புறமும் இரு காவலாளர் உருவங்கள் நிற்பது தெரிந்தது. அந்தக் கதவைக் கொண்ட உள் அறையில் அரச குரு அடக்கம் செய்யப்பட்டிருப்பார் என்று அவர்கள் துணிந்தார்கள்.

கல்லறைக் கருவூலம் :

மறு நாள் மின்சார விளக்குகளைச் சரியாகப் பொருத்தி அந்த உள் அறையின் கதவை உற்று நோக்கிய போது அதிலும் கள்வர்களுடைய கைவண்ணம் காணப்பட்டது. கட்டிலுக்குப் பின்னால் மற்றோரிடத்தில் கல்லில் கன்னம் வைக்கப் பட்டிருந்த காட்சி தெரிந்தது. அக் கன்னக்கோல் துளையில் விளக்கை நுழைத்துப் பார்த்த போது மற்றொரு சிறிய அறையும் அதில் நிறையப் பொருள்களும் இருந்தன. முன் அறையிலிருந்த பொருள்களை எல்லாம் குறித்துக் கொண்டு அப்புறப் படுத்திய பிறகு அவர்கள் பலர் முன்னிலையில் முத்திரையிடப்பட்ட கதவைத் திறந்தார்கள். அந்த உள் அறையின் சுவர்களெல்லாம் தங்க மயமாக இருந்தன. அங்கே தான் அரசனுடைய சவப் பெட்டி அமைந்திருந்தது. அச் சவப் பெட்டி தங்கத்தால் செய்யப்பட்டு 17 அடி நீளம், 11 அடி அகலம், 9 அடி உயரம் உடையதாயிருந்தது.

அதில் ஒரு மடக்குக் கதவும் இருந்தது. அதைத் திறந்து பார்த்த போது மற்றொரு சவப்பெட்டி முத்திரை இடப்பட்டிருந்தது. 3300 ஆண்டுகளாக 'துத்-அங்-காமன்' அதில் ஒருவராலும் தீண்டப் படாமல் பத்திரமாகப் படுத்திருந்தான். அந்த அறையில் தணிவாக மற்றொரு கதவுதிறந்தபடி இருந்தது. அதில் அவர்கள் நுழைந்து அரிய செல்வங்கள் எல்லாம் அங்கே குவிந்திருந்ததைக் கண்ணுற்றார்கள். கதவின் அருகில் பொன்னாலாகிய பெட்டி ஒன்று இருந்தது. அதன் மேல் பாம்புகளும் நான்கு தெய்வச் சிலைகளும் செதுக்கப்பட்டு, அதற்குப் பாதுகாப்பாக இருந்தன. கதவுக்கு எதிரில் நரி, எருது முதலிய எகிப்திய தெய்வ மிருகங்களின் உருவங்கள் இருந்தன. பல கருப்புப் பெட்டிகளும் ஒரு புறமிருந்தன. அவற்றில் ஒன்றில் **துத்-அங்-காமனுடைய** சிலை கருப்புச் சிறுத்தையின் மேல் நின்ற வண்ணம் இருந்தது. தந்தத்தாலும் மரத்தாலும் செய்யப்பட்ட சிறு சவப் பெட்டிகள், படகுகள் முதலியவை அவ்வறையில் சிதறிக் கிடந்தன. அவை யெல்லாம் அப்பொழுதுதான் செய்யப்பட்டவை போலப் புத்தம் புதியனவாக இருந்தன.

சவப் பெட்டியின் சிறப்பு :

துத்-அங்-காமனுடைய சவப் பெட்டி ஒன்றேகால் டன் எடையுள்ள ஒரே மஞ்சட் கல்லிலிருந்து குடைந்து செய்யப்பட்டது. அதன் மேல் சிறகுடன் கூடிய தேவதைகளின் உருவங்கள் நாற் புறமும் செதுக்கப்பட்டிருந்தன. அதற்குள் பல மடிப்புகளாக வைக்கப்பட்டிருந்த லினன் துணிகளுக்கு இடையே இணையற்ற அழகுடன் கூடிய மற்றோர் சவப் பெட்டி இருந்தது. அப் பெட்டி முழுத் தங்கத்தினால் அரசனது உருவமாக செய்யப்பட்டிருந்தது. அதில் கண் விழிகள், புருவங்கள், இமைகள்

முதலியவை நவரத்தினங்களால் பதிக்கப்பெற்றிருந்தன. அதன் நெற்றியில் வாடிய பூக்கள் போல் மிக அழகான செதுக்கு வேலை செய்யப்பட்டிருந்தது. இந்தத் தங்கப் பெட்டியைத் திறந்த போது அதற்குள் அது போலவே. மற்ருெரு மனித உருவமான பெட்டி இருந்தது. அதுவும் தங்கத்தால் ஆனதே. அதற்குள் மிகக் கனமான கெட்டித் தங்கத்தால் செய்யப்பட்ட மற்ருெரு பெட்டி இருந்தது. அப் பெட்டியிலிருந்த தங்கத்தின் மதிப்பு மட்டும் ஐந்து இலட்சம் பவுன் இருக்கும். மிக இளைய வயதில் இறந்து போன ஒரு சாதாரண அரசனுடைய சவப் பெட்டியே இவ்வளவு மதிப்புடையதாளுல் முதிர்ந்த வயதில் இறந்து போன மற்றப் பேரரசர்களுடைய சவச் செல்வத்தை என்னென்று மதிப்பிடுவது!

சடலத்தின் அணிகள் :

இறுதியாகக் கடைசி மூடியைத் திறந்த போது அரசனுடைய சடலம் (மம்மி) தோன்றியது. அதன் முகத்தின் மீதும் தங்கத் தகட்டாலாகிய ஒரு முக மூடி இருந்தது. தலையில் ஒரு கிரீடமும் கழுத்தில் கணக்கற்ற இரட்சைகளும் மாலைகளும், மார்பில் தங்கக் கவசங்களும், இரு தொடைகளிலும் எகிப்து அரசாங்கச் சின்னங்களும், அடிகளில் தங்கப் பாதக் குறடுகளும், கால் விரல்களில் தங்கச் சுட்டிகளும், தோள்களில் கற்கள் பதித்த பொற் கடகங்களும் அணி செய்தன. மொத்தம் நூறு வகையான 143 அணிகலன்கள் அதன்மேல் அணியப்பட்டிருந்தன. கார்ட்டர் அதற்கு முன் இதைப் போல இவ்வளவு அற்புதக் காட்சியையும் அரும்பெரும் செல்வத்தையும் கண்டதில்லை. அவர் அதை எண்ணி அளவு கடந்த மகிழ்ச்சியில் மெய்ம்மறந்து நின்ருர். கனவிலும்

கற்பனையிலும் கூட இத்தனைக் கருந்தனத்தை யாரும் பார்த்திருக்கமாட்டார்கள் என்பது உறுதி.

உண்மை மதிப்பு:

ஆனால் அச் செல்வத்தின் மதிப்பை விட அஃது ஒரு மறைந்த நாகரிகத்தின் மாண்புடைய சின்னம் என்ற எண்ணம் ஒன்றே யாவருக்கும் இறும்பூது அளிப்பதாகும். எகிப்தினுடைய பெரிய அரச குருக்களின் அளவு கடந்த ஆடம்பரத்தையும் செல்வத்தையும் அந்நாட்டு மக்களின் அடிமைத் தனத்தையும் அரும் உழைப்பையும், நாட்டில் உலவிய கொடுங்கோன்மையையும், கைத் திறமையையும், மாய மந்திரத்தில் மக்களது நம்பிக்கையையும், அழகுக் கலைகளில் ஈடுபாட்டையும், உலகம் முழுவதற்கும் அறிவிக்க இவ்வரசனுடைய சமாதி ஒன்றே சாலும்!

(ii) மெசபத்தோமியா

மெசபத்தோமியாவின் பழைமை:

எகிப்தின் கோபுரங்களையும் அவற்றின் மறை பொருள்களையும் கண்டவர்களும், அவற்றைப் பற்றிக் கேட்டவர்களும், எகிப்துதான் உலகிலேயே பழம் பெரு நாடு என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் டைகிரீஸ், யூபரிடிஸ் என்னும் நதிகள் பாயும் மெசபத்தோமியாவின் பள்ளத்தாக்கைப் பற்றிய பல கதைகளும் செவிவழிச் செய்திகளும் சில இடங்களில் பரவி இருந்தன. அது மக்கள், தேவர்கள் போல் சிறந்து வாழ்ந்த காலத்தில் புகழ் பெற்ற நாகரிகத்துடன் உயர்ந்து விளங்கியது என்றும், பேரரசர்களும் பெருநகரங்களும் அங்கிருந்தன என்றும் மக்கள் கூறினர். அறிவு நிறைந்த ஆன்றோர்களும், அழகு சான்ற பூஞ்சோலைகளும், விண் முட்டும் கோபுரங்

களும், கண்கவரும் காட்சிகளும் ஒரு காலத்தில் அங்கிருந்தனவாம். யூதர்களுடைய நூல்களில் அவ் வரசர்களின் கொடுமையும் செருக்கும் அச்சுறுத்தும் தன்மையும் கடிந்து கூறப்பட்டுள்ளன.

பைபிள் சான்று:

பாபிலோன், நினெவா என்னும் இரு நகரங்களைப் பற்றிப் பழைய பைபிள் என்னும் கிறிஸ்தவ நூலில் சிறிது கூறப்பட்டுள்ளது. ஆனால் அந் நகரங்கள் இருந்தன என்பதற்கும் அம் மக்கள் நாகரிகம் அடைந்தவர்கள் என்பதற்கும் வெளிப்படையான சான்றுகள் சில ஆண்டுகள் முன்னர் வரை கிடைத்தில. அண்மைக்காலத்தில் அப் பள்ளத் தாக்கில் இங்குமங்குமாக உள்ள சில மண்மேடுகளை அகழ்ந்து ஆராய்ந்த போது அதிசயமான பழம்பெரும் நாகரிகச் சின்னங்கள் கிடைத்தன. அப் பழங்கால மக்கள் வழிவந்த கூட்டத்தாருக்குக் கூட அம் மேடுகளைப் பற்றியும் அவற்றினடியிலிருந்த பொருள்களைப் பற்றியும் அதுகாறும் ஒன்றும் தெரியாதிருந்தது. அம்மேடுகளின் கீழ் இப்பொழுது அரண்மனைகளும், கோயில்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதனால் பல்லாயிரம் ஆண்டுகளினுடைய சரித்திரம் இன்று பளிச்சென்று நம் கண்முன் தெரிகின்றது.

சுவர்க்கமா? குப்பை மேடா?

மெசபத்தோமியா என்னும் சொல்லுக்குப் பொருள் ஆறுகளுக்கு இடைப்பட்ட நாடு என்பது. இப்பொழுது அந்நாட்டின் பெயர் ஈராக். அதுவே முற்காலத்தில் பைபிளில் கூறப்பட்டுள்ள ஏடன் நகரத்துத் தோட்டம்

அல்லது சுவர்க்கம் என்று கருதப்படுகிறது. பாபிலோனியா, அசிரியா என்னும் இரண்டு பெரிய இராஜ்யங்கள் அங்கே தழைத்திருந்தன. அவை நெடுங்காலத்திற்கு முன்பே சுற்றிலும் உள்ள பாலை வனத்தின் மணல் விழுந்து புதைந்து போய் விட்டன. உலகத்திலேயே அப் பகுதிதான் மிகச் செழிப்பானது. ஆகையால் தான் அதைச் சுவர்க்கம் என்று கருதினார்கள் போலும். சுற்றிலும் நெடுந்தூரம் பரவியுள்ள பாலைவனத்தைப் பார்க்கும் போது இச் செழிப்பான பகுதி சுவர்க்கமாகத் தானே தெரியும்! ஆனால் இப்பொழுதோ அது உலக நாடுகளின் குப்பை மேடு என்று கூறப்படுகிறது. துருக்கியர் அங்குப் படையெடுத்து வந்த போதே (கி. பி. 1516) அவ்விடம் ஒரே பாழாகத்தான் காட்சி அளித்தது. எனினும் அவர்கள் வெறி கொண்டு அதை மேலும் பாழாக்கி விட்டார்கள். இங்ஙனம் பல நாடுகள் படையெடுத்து வந்து அழித்ததால் தான் அது உலக நாடுகளின் குப்பை மேடு எனப் பெயர் பெற்றது.

முன் வரலாறு:

மெசபத்தோமியாவின் மிகப் பழைய மக்கள் சுமேரியர்கள் எனப்படுவோர். அவர்கள் இந்தோ ஐரோப்பிய அல்லது இந்திய மக்களினத்தைச் சேர்ந்தவர்கள். பிறகு அவர்கள் ஒரு நாடோடி மக்களாகிய அராபிய (சிமித்தியர்) கூட்டத்தாரால் வெல்லப்பட்டனர். பிறகு அக் கூட்டத்தார் சுமேரியர்களுடைய நாகரிகத்தை மேற்கொண்டதால் இந்த சிமித்திய-சுமேரியக் கலப்பிலிருந்து அசிரியர்களும் பாபிலோனியர்களும் தோன்றினார்கள். முதல் பாபிலோனியப் பேரரசு கி. மு. 2100-இல் தோன்றியது. அதன் பிறகு நீண்ட காலம் கழித்து அசிரிய அரசு வந்தது. அப்போது பாபிலோனும் எகிப்தின் வட பகுதியும் அசி

ரிய ஆட்சியின் கீழ் வந்தன. அவர்களுடைய தலைநகரம் உலகத்திலேயே முதன்மையான நினெவா என்பது. அந் நகரினுடைய அழிபாடுகள் டைகிரிஸ் நதிக் கரையில் மோசூர் என்னும் நகருக்கு எதிரே உள்ளன. கி. மு. ஏழாம் நூற்றாண்டில் அந் நகரம் மறைந்தது. மீண்டும் பாபிலோன் தலையெடுத்து ஆதிக்கம் பெற்றது. அப் போது நெபுகாட்நசர் என்னும் மன்னன் நினெவா நகரை மீண்டும் கட்டி அதற்கு மதில்களை எழுப்பி, நகரினுள்ளே உலக அற்புதங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட தொங்கு தோட்டங்களை உண்டாக்கினான். சில நூற்றாண்டுகள் கழித்துப் பாரசீகர்கள், மீதியர்கள் என்பவர்களுடைய மன்னன் சைரஸ் என்பவன் அதன் மேல் படையெடுத்து வந்து அழித்தான். அவ்வாறு அழிந்த பாபிலோன் நாட்டின் அறிகுறிகள் இப்பொழுதும் பாக்தாத் நகரத்திற்குத் தெற்கே தெரிகின்றன. அப் பாரசீகர்களும், பின்னர் அலெக்சாந்தர் படையெடுத்து வந்த போது கிரேக்கர்களால் முறியடிக்கப்பட்டனர். கிரேக்கர்களை அடுத்துப் பார்த்தியர்களும் பிறகு உரோமானியர்களும், இறுதியாக மீண்டும் பாரசீகர்களும், அந் நாட்டை மேலும் மேலும் தாக்கினார்கள். கி. பி. 632-இல் முகம்மது இறந்த பிறகு அராபியர்கள் மறுபடியும் பாரசீகப் பேரரசைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்கள் கி. பி. 762-இல் பாக்தாத்தைப் புதுப்பித்தார்கள். அவர்களுடைய புகழ் மிக்க மன்னன் ஹாரூன்அல் ரஷீத் என்பவன் பாக்தாத் நகரத்தை அறிவிற்கும் அழகிற்கும் கலைக்கும் உறைவிடமாகச் செய்தான். அராபிக் கதைகளில் புகழப்படும் மன்னன் இவனே. கடைசியாக 1516-இல் அராபிய இராஜ்யத்தைத் துருக்கியர்கள் கைப்பற்றி 400 ஆண்டுகள் ஆண்டனர். இந்த நூற்றாண்டில் அது பிரிட்டிஷார் வசம் வரவே, அவர்கள் 1921-இல் பைசால் என்பவரை அதற்கு

அரசனுக்கு பின்னர் இறுதியாக 1932-இல் அது ஒரு சுதந்திர நாடாகி இன்று தனி ஆட்சி செலுத்தி வருகிறது.

பச்சைக் களிமண் கட்டிடங்கள்:

பாபிலோனியாவில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் அச் சம வெளியில் கிடைத்த வண்டல் மண்ணினுல் அல்லது பச்சைக் களிமண்ணினுல் செங்கற்களைச் செய்து வெயிலில் காய வைத்து அவற்ருல் கட்டிடங்கள் கட்டினுர்கள். அவர்களுக்கு அருகில் கருங் கற்கள் எங்கும் கிடைக்க வில்லை. ஆகையால் தான் மேற்கூறிய மண் கட்டிகளைக் கொண்டு கட்டிடங்களைக் கட்டினுர்கள். ஆனுல் இக் கட்டிடங்கள் அதிக காலம் நிலைத்திருக்க முடியாது. அவை கவனிக்கப்படாமல் இருந்தால் விரைவில் அழிந்து விடும் என்பது தெளிவு. இவ்வாறு தான் பகைவர்களால் அழிக்கப்பட்ட அந் நகரம் கேட்பாரற்று மண் மேடுகளாக மாறிவிட்டது.

போட்டாவின் கண்டுபிடிப்பு:

சென்ற நூற்ருண்டின் மத்தியில் ''பால் எமிலி போட்டா'' என்ற பிரெஞ்சுக்காரர் ஒருவர் மெசபத்தோமிய நகர் ஒன்றிற்கு அரசாங்கத் தூதுவராக நியமிக்கப் பட்டார். அவர் எகிப்திலும் சிரியாவிலும் இருந்தவர். அவருக்கு மெசபத்தோமிய மண் மேடுகளில் ஏதோ இரகசியம் இருக்க வேண்டும் என்ற ஐயம் ஏற்பட்டது. ஏற்கனவே அங்குள்ள பழம் பொருள்களைச் சேகரிப்பதில் அவர் ஆவலுடன் இருந்தார். ஒரு நாள் அவர் கல்வெட்டுக்கள் நிறைந்த இரண்டு இணையான சுவர்களை அகழ்ந்து கண்டுபிடித்தார் அக் கல்வெட்டுக்களில் முக்கோண வடிவமாக ஆழப் பதிந்த எழுத்துக்கள் இருந்ததைக் கண்டு வியப்புற்ருர். இவ் வகை எழுத்துக்கள்

அலெக்சாந்தர் காலத்திற்குப் பின்பு மறைந்து விட்டதை அவர் அறிந்திருந்தார். மற்றும் பல இடங்களில் இத்த கைய எழுத்துக்கள் காணப்பட்டன. மண்ணுக்கடியில் பல அறைகளும் பழம் பொருள்களும் கிடைத்தன. கோட்டை ஒன்று தாக்கப்பட்ட செய்தியும், வீரர்கள் கொலையுண்ணப்பட்ட செய்தியும், சிறைப்பட்டவர்கள் கழுவேற்றப்பட்ட செய்தியும் போன்ற பல செய்திகள் அங்கிருந்து அவருக்குக் கிடைத்தன. அசிரிய அரசர் ஒருவரின் அரண்மனை ஒன்றை அவர் கண்டுபிடித்தார். நினெவா நகர் நிகரற்று இருந்த காலத்தில் செதுக்கப் பட்ட சிலைகள் பல கிடைத்தன. அவற்றுள் அசிரியர் களின் உருவமும், சிறகுள்ள எருதுகளும், வேட்டைக் காட்சிகளும், போர்க்களக் காட்சிகளும் செதுக்கப்பட்டி ருந்தன. இப்பொருள்களெல்லாம் பிரான்ஸின் கண் காட்சிச் சாலைக்கு அனுப்பப்பட்ட போது அதைக் கண்ட மக்கள் அளவு கடந்த வியப்படைந்தனர். பலர் இவற் றைப் பற்றி ஆராய்ந்து கட்டுரைகள் எழுதினர். அசிரிய நாகரிகத்தை மேலும் அறிய அவா தூண்டப்பட்டது.

லேயர்டின் முயற்சி :

பின்னர்க் கீழ் நாடுகளினுடைய மாயஜாலக் கதைகளை யும் மக்களையும் பற்றி அராபியக் கதைகள் மூலம் படித் தறிந்த "லேயர்டு" என்னும் ஆங்கிலேயர், அந் நாடுக ளுக்குச் சென்று நேரில் பார்க்க ஆவல் கொண்டார். 1840-இல் அவர் அசிரிய மண் மேடுகளைக் கண்டவுடன் அவற்றால் பெரிதும் கவரப்பெற்றார். பிறகு 'பால் எமிலி போட்டா' வைச் சந்தித்து அவற்றை ஆராயத் திட்டமிட் டார். முதலில் அவர் நினெவா நகரத்திற்குச் சென்று, 'நிம்ருடு' என்னும் பெயருடைய மண் மேட்டைத் தோண் டினார். அங்கே ஓர் அறையின் ஒரு சுவரிலிருந்த எழுத்

துக்களைக் கண்டார். மேலும் அவ்விடத்தில் தந்தத்தால் செய்த உருவங்களும் தங்கத் தகடுகளும் கிடைத்தன. இறுதியாக இறகுள்ள சிங்கங்களின் சிலைகளும் எருதுகளின் சிலைகளும் பல கிடைத்தன. அவை மிகப் பெரிய உருவத்துடன் குன்று போல் காட்சியளித்தன. சிங்கத்திற்கு ஆறு கால்களும் மனித முகமும் இருந்தன. இவற்றையெல்லாம் கண்டு அந் நகர மக்கள் தமக்குத் தெரியாத பல பொருள்களை 'லேயர்டு' கண்டு பிடித்ததற்காக அவரைப் பாராட்டினர்கள்.

சென்னுசெரிப்பின் கோட்டை :

பிறகு லேயர்டு மண் மேட்டின் அடித் தளத்தில் சுற்றிலும் அகழ்ந்து பார்க்க, ஒரு சுவரின் ஓரமாக இறகுடைய எருதுகளால் காக்கப்பட்ட ஒரு வாயிலைக் கண்டார். அவ்வாயிலில் நுழைந்ததும் ஒரு பெரிய கூடம் இருப்பது தெரிந்தது. அதைத் தோண்டிப் பார்த்த போது ஒன்பது அறைகள் தென்பட்டன. அது நினெவாவில் இருந்த சென்னுசெரிப் என்னும் கொடுங்கோல் மன்னனது கோட்டை என்பது தெரிந்தது. அவன் தன்னை உலகம் முழுதும் ஆண்ட பேரரசன் என்றும், பேரறிவாளி என்றும், அறத்தைக் காப்பவனென்றும், தெய்வங்களால் விரும்பப்பட்டவன் என்றும் கூறிக் கொண்டான். மேலும் கொடியவர்களைத் தண்டித்து, ஏழைகளைக் காத்த மாவீரனைகத் தன்னைக் கருதினன். ஆனல் உண்மையில் அவன் மக்களைக் கொள்ளையடித்தவன்; எதிர்ப்பவர்களை இரக்கமின்றி வெட்டியும் எரித்தும் கழுவேற்றியும் அரக்கன் போல் வாழ்ந்தவன். இவற்றையே அவன் அவனது தொழிலாகக் கொண்டிருந்தான். அவனும் மற்ற அசிரிய அரசர்களும் தாங்கள் செய்த கொடுமைகளைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டனர். இக் கொடுங்கோலர்

களின் கடைசி நகரம் பகைவர்களால் அழிந்த போது மக்கள் மகிழ்ச்சியால் கை கொட்டி ஆரவாரம் செய்தனர் என்று கூறப்படுகின்றது.

பெரிய நூல் நிலையம் :

ஆனால் லேயர்டு அசிரிய அரசர்களைப் பற்றிக் கண்ட உண்மையொன்று அவர்களுக்குப் பெருமையளிப்பதாய் உள்ளது. அவர்களுள் ஒருவன் 30000 நூல்களைத் தன் நூல் நிலையத்தில் சேகரித்து வைத்திருந்தானும். அவற்றில் பாதியை லேயர்டு இரண்டு அறைகளில் கண்டு பிடித்தார். இந் நூல்கள் அசிரிய மக்களைப் பற்றி நமக்கு அளவற்ற செய்திகளை அறிவிக்கின்றன. இவை களி மண் பலகைகளில் அழுத்தி எழுதப்பட்ட நூல்கள். இந்த நூல்கள் பாபிலோன், போர்சிப்பா என்னும் நகரங்களிலிருந்த நூல்களிலிருந்து பிரதி செய்யப் பட்டவை. இவற்றில் பெரும்பாலும் சமயத் தொடர்புடைய பாடல்கள், துதிகள் முதலியவையே உள்ளன. சிலவற்றில் மட்டும் கனவுகள், சகுனங்கள், குறி சொல்லுதல், மாந்திரீகம் போன்ற செய்திகள் அடங்கியுள்ளன. மந்திர வித்தையில் அம் மக்களுக்கு அதிக நம்பிக்கை இருந்தது என்பது இதனால் தெரிகிறது. மற்றும் அந்த நூல் நிலையத்தில் கணிதம், வான சாத்திரம், மருத்துவம், வரலாற்றுக் குறிப்புக்கள், கதைப் புத்தக்ங்கள் முதலிய பல் வகை நூல்களும் இருந்தன.

புரியாத எழுத்து :

அந்த நூல்களைப் படித்து அறிவது எளிய செயலன்று. அவை முக்கோண வடிவமான கருவிகளால் களி மண்ணில் அழுத்தி எழுதப்படும் எழுத்து முறையில் அமைந்தவை (Cuneiform or wedge - shaped writing).

இங்கிலாந்தில் உள்ள கண் காட்சிச் சாலையில் அசிரிய நாட்டுப் பழம் பொருள்களை ஆராய்ந்து வந்த அதிகாரி ஒருவர் அவற்றை ஓரளவு படித்துப் பைபிளில் கூறப்பட்டுள்ள "நோவாவும் அவர் படகும்" என்ற கதையின் முன் பின் தொடர்ச்சியும் முழு விவரமும் அவற்றில் கூறப் பட்டிருப்பதைக் கண்டார்.

இவ் வெழுத்துக்களுள் சில, முழுச் சொல்லாகவும் அசையாகவும் இன்றி, ஒலிக் குறிப்புக்களாய்ப் பல ஒலிகளைக் குறிக்கும் ஒரு குறியாயும், பல சொற்களைக் குறிக்கும் ஒரு குறியாயும் இருந்தன. பாபிலோனியர்கள், அசிரியர்கள் முதலிய மக்கள் இத்தகைய எழுத்து முறையை எப்படிக் கண்டு பிடித்தார்கள் என்பது ஒருவருக்கும் விளங்கவில்லை. உலகத்தில் வேறெங்குமே அம்முறை இல்லாதிருப்பினும் அறிஞர்கள் எப்படியோ அரும்பாடு பட்டு அதைப் படித்தறிவதில் வெற்றி கண்டார்கள். இம் முக்கோண எழுத்துக்கள் முன்பு எகிப்திய உருவ எழுத்துக்களாகவும், அதற்கும் முன்பு சித்திரங்களாகவும் இருந்தன. அசிரியர்களும் பாபிலோனியர்களும் இவ் வெழுத்து முறையை வேறு யாரிடமிருந்தோ பெற்று அதைச் சற்று மாற்றியமைத்துக் கொண்டார்கள் என்று கருதப்படுகிறது.

சுமேரிய நாகரிகம் :

ஆகவே முதலில் யார் இவ்வெழுத்து முறையின் முன்னோடியைக் கண்டு பிடித்த மக்கள் என்ற ஆராய்ச்சி தொடங்கியது. மிகப் பழைய கல் வெட்டுக்களெல்லாம் பாபிலோனியாவில் கிடைத்ததால் அங்கு முதன் முதல் வாழ்ந்த மக்கள் தான் அம் முறையைக் கண்டு பிடித்தவர்கள் என்று முடிவு செய்யப்பட்டது.

அம் மக்கள் சுமேரியர்கள் என்றும் அவர்களது மொழி சுமேரிய மொழி என்றும் கூறப்பட்டது. டி-ஸார்ஸெக் என்னும் பிரெஞ்சுத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர் மெசபத்தோமியாவிற்கு வந்து ஒரு மண் மேட்டைத் தோண்டி இரண்டு பெரிய உருளைகளில் இரண்டாயிரம் உருவ எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தார். அவ் வெழுத்துக்கள் சுமேரியருடையவை என்று அவர் நிலை நாட்டினர். ஆனல் அவர்கள் யார், எங்கிருந்து வந்தவர்கள், எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள், பாபிலோனியர்களுக்கும் அவர்களுக்கும் இருந்த தொடர்பு என்ன என்ற கேள்விகளுக்கு விடை அவராலும் வேறு எவராலும் கூற முடியவில்லை.

கல்தோன்றி மண் தோன்ருக் காலம்:

டி-ஸார்ஸெக் கண்டு பிடித்த இவ் வெழுத்தினலும் வேறு பழைய சின்னங்களாலும் மெசபத்தோமிய நாகரிகத்தின் வரலாறு காலத்தால் பின்னேக்கிச் சென்றது. அங்கு மேலும் அகழ்தல் வேலைகள் நிகழ்ந்தன. நினெவா, பாபிலோன் முதலிய நகரங்களை விட மிகப் பழைய நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந் நகரங்களில் இருந்த கட்டிடக் கலையின் சிறப்பியல்புகளையே அவர்களுக்குப் பின் வந்த பாபிலோனியர் கையாண்டனர் என்பது தெளிவாயிற்று. அப் பழைய நகரங்களை அமைத்த சுமேரியர்கள், அசிரியர்களுடைய இனத்தவரல்லர் என்பதும் புலனுயிற்று. பாபிலோனியச் சட்டங்கள் சுமேரியச் சட்டங்களிலிருந்து தோன்றியவை என்பது தெரிந்தது. சுமேரியர் விட்ட கலைகளையே பாபிலோனியர் தொட்டுப் பயின்றனர். சுமேரிய எழுத்து முறையையே பாபிலோனியர் திருத்தி அமைத்துக் கொண்டனர். இருவர்களுடைய தெய்வங்களும் ஒன்ருகவே இருந்தன.

கோயிற் குன்று :

சுமேரிய நகரங்களில் இன்றியமையாத ஒரு கட்டிடம் எங்கும் காணப்பட்டது. அது என்னவெனில் படிகளும் மேடைகளும் அமைந்த ஒரு பெரிய கோபுரம். 'ஊர்' என்னும் இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இக் கோபுரம் பல தளங்களைக் கொண்டதாய் உச்சியில் ஒரு கோயிலுடன் விளங்கி ஒரு மலை போல் காட்சியளித்தது. உண்மையில் அது ஒரு செயற்கை மலையே. அவர்கள் ஏன் இத்தகைய மலையைக் கட்டினார்கள்? இவ் வழக்கம் அவர்களுக்கு எப்படி வந்தது? ஒரு வேளை அவர்கள் இந்தியாவிலிருந்து அங்குச் சென்றவர்களாக இருக்கலாமோ? இந்தியாவில் மலைகளின் மேல் தெய்வங்களுக்குக் கோயில் கட்டி வணங்குவது போல், இயற்கையான மலையில்லாத சம நிலத்தில் இவர்கள் செயற்கை மலையை ஆக்கிக் கடவுளை வழிபட்டார்கள் போலும். இந்தியாவில் ஏற்பட்டபழக்கம் சென்றஇடத்திலும்அவர்களைவிடவில்லை. **பேபல் நகரத்துக் கோபுரம்** (Tower of Babel) என்ற உலகப் புகழ் பெற்ற கட்டிடமும் இதைப் போலத்தான் இருந்திருக்க வேண்டும். இவ்வாறுதான் ஆராய்ச்சியாளர்கள் எண்ணினார்கள்.

பாபிலன் :

ஆனால் பாபிலோனியாவின் தலை நகராகிய **பாபிலன்** இன்னமும் கண்டுபிடிக்கப்பட வில்லை. பல நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் இந்த நகரம் இருக்குமிடம் தெரியவில்லை. இந் நகரம் நெடுங்காலமாக இராஜ்யத் தலை நகர்களின் சூடாமணி போல் விளங்கி இணையற்ற செல்வத்திற்கும் பெருமைக்கும் எடுத்துக்காட்டய் இருந்தது. அங்கேதான் பேபல் நகரத்து மாபெரும் கோபுரம் இருந்

தது; உலக அற்புதங்களுள் ஒன்ருகிய தொங்கு தோட்டங்கள் இருந்தன. பெரிய சட்ட கர்த்தாவாகிய ஹம்முராபி என்னும் அரசன் செங்கோல் ஓச்சிய இடம் அதுவேயாகும். அந்த இடத்திலேயே ஒன்றின் மேல் ஒன்ருகப் பல நகரங்கள் தோன்றின. ஹம்முராபியினுடைய நகரத்தைச் சென்ஞெரிப் என்பவன் அடியோடு அழித்துத் தரைமட்டமாக்கி அதன் தரையையும்பெயர்த்துக்கொண்டு போய்க் கடலில் கரைத்து விட்டதாக அவனே சொல்லுகிருன். அவன் அங்கு நிகழ்த்திய கொடிய செயல்களையெல்லாம் அவன் பெருமையாக விவரித்திருக்கிருன். இந்தக் கூற்று மெய்யாயினும் பொய்யாயினும், அவனுக்குப் பிறகு அவன் மகன் அங்கு ஒரு நகரத்தை மீண்டும் கட்டினன். நெபோ போலஸர், நெபுகாட்னசர் என்னும் அரசர்களும் அதை மிகவும் அழகு படுத்தி உலகப் புகழ் பெற்றதாகச் செய்தனர்.

பாபிலன் கோட்டை :

ஆகவே, இராபர்ட் கோல்டிலி என்னும் ஜெர்மானியர் அந் நகரைக் கண்டுபிடிக்க 1899-இல் பபில் என்னும் இடத்தில் இருந்த ஒரு பெரிய மண் மலையைத் தோண்டினர். பதினன்கு ஆண்டுக் காலம் 250 பேர் கூடித் தோண்டியும் பாதி அளவு கூட அதைக் கரைக்க முடியவில்லை. தொடர்ந்து பல வருடங்கள் தோண்டிய பின்னர் 300 அடி உயரமும் 75 அடி கனமும் உள்ள, சுற்றிலும் நூற்றுக்கணக்கான கதவுகள் அமைந்த, ஒரு பெரிய கோட்டை மதில் வெளிப்பட்டது. அதற்குள் மற்ருெரு கோட்டை மதில் இருந்தது. வெளிக் கோட்டை மதிலைச் சுற்றி ஆழ் நீர்க் கிடங்கு ஒன்றிருந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க யாத்திரிகர் ஹெரோடோட்டஸ் என்பவர் இதைப் பற்றித் தாம் நேரில் கண்டு குறித்தி

ருந்தபடியே எல்லாம் இருந்தன. பண்டைக் காலத்து கோட்டை எதுவுமே இவ்வளவு கனமும் உறுதியுமுடைய மதிலைப் பெற்றிருக்கவில்லை. இத்தகைய உறுதியான மதில்களையுடைய பாபிலன் இறுதியாக அழிந்தது வெளிப் பகைவர்களால் அன்றி, உட்பகைவர்களாலேயே ஆகும். மீடியா நாட்டிலிருந்து வந்த சைரஸ் என்னும் மன்னனுக்கு உட்பகைவர் கோட்டையைத் திறந்துவிட்ட தனாலேயே அது மண்ணோடு மண்ணாயிற்று.

நகரச் சிறப்பு :

பாபிலனில் வாழ்ந்த அரசர்களெல்லாரும் தம்முடைய செல்வம் முழுவதையும் அதை அழகுபடுத்துவதற்குச் செலவழித்தார்கள். அதனுடைய அரசர்களுள் **நெபு காட்னசர்** என்பவன் மற்றெல்லாரையும் விட அதை ஆடம்பரமும் அழகும் உடையதாக்கி உலகைத் திகைக்க வைத்தான். ஓர் அழகான பெரிய தலைவாயில், பரந்த முற்றங்கள், 175 அடி நீளமும் 55 அடி அகலமும் உள்ள அத்தாணி மண்டபம், தொங்கு தோட்டங்கள் முதலிய பல உறுப்புக்களை அவன் உண்டாக்கினான். ஆனால் அதில் எல்லாவற்றையும் விட மலைக்கோயில்தான் (செய் குன்று) எல்லார் மனதையும் கவர்ந்தது. அது ஏழு நிலை களை உடையதாய் 300 அடி உயரமாய் இருந்தது. பேபல் நகரத்துக் கோபுரம் அழிந்த பிறகு இது அதே இடத்தில் அரண்மனைகளுக்கும், கோயில்களுக்கும், மாளிகைகளுக் கும் நடுவில் கம்பீரமாக நின்றது. அது அவ்வாறு நின்ற தற்கு அறிகுறியாக அதனுடைய பெரிய சதுர வடிவான அடிபாடுகள்தான் அங்குக் காணப்பட்டன. அந் நகரில் நடுவே ஓர் அகன்ற பெரிய தெரு இருந்தது. அது உண்மையில் இரு பெரிய அரண்களுக்கிடையே அமைந்த பாதையே. அதில் பகைவன் நுழைந்து விட்டால் அதன்

அழகிய கட்டிடக் கலையையும், சிங்கம், எருது, மலைப்பாம்பு முதலியவற்றின் சிற்பச் சிறப்பையும் கண்டு மயங்கி நின்று விடுவான். உடனே அவனை இரு வரிசையிலுள்ள மாடங்களின் மீதிருந்த வண்ணம் மக்கள் கற்களை வீசிக் கொன்று விடுவார்கள். அத் தெருவின் தளம் செங் கல்லாலும், வெண் கல்லாலும் பாவப்பட்டு இருந்தது. அந் நகரம் அம் மன்னனது ஆட்சிக் காலத்தில் எவ்வளவு உயிர்த் துடிப்புடனும் ஆரவாரத்துடனும் இன்பத்துடனும் இருந்திருக்க வேண்டும்! தெருக்களில் தெய்வங்களின் சிலைகள் ஊர்வலமாக வரும் போது மக்கள் இன்னிசைகளை முழக்கி மகிழ்ச்சி மிகக் குதித்துக் கூத்தாடித் திருவிழாக் கொண்டாடி யிருப்பார்களே, அக் காட்சியை எல்லாம் இப்பொழுது எப்படிக் காண்பது ? இவற்றை யெல்லாம் அங்குள்ள கற்களில் எழுதப்பட்டுள்ள செய்திகளால் அறிந்துதான் நாம் அமைய வேண்டும்.

மாபெரும் சமாதி :

சுமேரியாவில் டி-ஸார்செக் என்பவர் தொடங்கிய ஆராய்ச்சி இன்னும் முடிவடைய வில்லை என்று சொல்லலாம். 1927-இல் பிரிட்டிஷ், அமெரிக்க ஆராய்ச்சிக் குழுவினர் ஊர் என்னும் இடத்தில் கண்டுபிடித்த ஓர் அற்புதமான சமாதி ஓர் அரிய செய்தியை நமக்குத் தெரிவிக்கின்றது. சுமேரியாவில் அதைப் போல இதுவரையில் கண்டு பிடிக்கப்பட்ட பொருள் ஒன்றுமே யில்லை. சுமார் கி. மு. 3200-இல் ஓர் அரசனும் அரசியும் இறந்த போது உடனுயிர் நீத்த 65 ஆண்கள், 25 பெண்கள் ஆகியோர்களுடைய உடல்கள் அதில் கண்டு பிடிக்கப்பட்டன. அவர்களெல்லாரும் மிக அலங்காரமான ஆடைகளுடனும் தலை அணிகளுடனும் வரிசையாகப் புதைக்கப் பட்டிருந்தனர். மற்றும்

தங்கக் கிரீடம் அணிந்த ஒரு யாழ் வல்லோனும், அரச னது ஆறு மெய் காப்பாளர்களும், குதிரை வீரர்களும் அங்கே கிடந்தனர். நவரத்தினங்கள் பதிக்கப் பெற்ற வண்டிகளும் கிடந்தன. அரசனுடைய கல்லறையிலி ருந்து பொருள்கள் களவாடப் பட்டிருந்தன. ஆனால் அரசியினுடைய கல்லறை தீண்டப் படாமல், 5000 ஆண்டுகளுக்கு முன்பு அவள் அதில் வைக்கப்பட்டிருந் தது போலவே கிடந்தாள். மிக அருமையான வேலைப் பாடமைந்த தங்க, வெள்ளிச் சாமான்களும், அதிசயிக்கத் தக்க யாழ் ஒன்றும் அக் கல்லறையில் கிடைத்தன. சுமேரியர்கள் இவ்வளவு நுட்பக் கலையறிவு வாய்ந்தவர் என்று இது வரையில் ஒருவரும் கனவு கண்டது கூட இல்லை. இவை யெல்லாம், "வியத்தொறும் வியத் தொறும் வியப்பிறந் தன்றே" என்ற கூற்றுக்கு இலக்காக அன்றோ இருக்கின்றன?

---

4. சிந்து சம வெளிச் சான்றுகள்

சுமேரிய நாகரிகத்தோடு தொடர்புடையதாகச் சிலரால் கருதப்படும் மாபெரும் நாகரிகம் மற்றொன்று இருப்பதாக மண்ணுள் தோண்டியவர்கள் கண்டிருக்கிறார்கள். அது ஆராய்ச்சியாளருக்கே புரியாத ஒரு புதிராகவும் மாயமாகவும் இருக்கிறது. அது சுமார் 4000 ஆண்டுகளுக்கு மேல் 6000 ஆண்டுகள் வரை பழைமையானது என்று கருதப்படுகிறது. அதுவே இந்தியாவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரிகம் என்பது. சிந்து சம வெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகள், கட்டிடங்கள், அணிகலன்கள் போன்ற பழம் பொருள்கள் பல சுமேரியாவிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டிடத்தும் கிடைத்த பொருள்கள் ஒரே மக்களால் செய்யப்பட்டவையா ? இவ்விரண்டிடத்து மக்களும் ஒரே இனத்தவரா? அல்லது தனித் தனி இனத்தவரா? சுமேரியாவில் வாழ்ந்த மக்களின் ஒரு கிளையினர் சிந்து சம வெளிக்கு வந்திருக்கக் கூடுமோ ? அல்லது இங்கிருந்தவர்கள் அங்குப் போயிருக்கக் கூடுமோ ? இவற்றைப் பற்றிக் கருத்து வேற்றுமைகள் உண்டு. எனினும் இவ்விரண்டு நாகரிகங்களும் ஏறக்குறைய ஒரே காலத்தில் தழைத்தோங்கியிருந்தன, இரண்டுக்கும் உறுதியாக ஏதோ தொடர்பு இருந்தது என்று நினைக்க இடமுண்டு.

சிந்து சமவெளி ஆராய்ச்சி :

சர் ஜான் மார்ஷல் என்னும் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சிந்து நதி பாயும் சம வெளியில் 1924 வரையில் பல்வேறு இடங்களில் நதிக் கரை ஓரமாக நெடுகத் தோண்டிக் கண்டு பிடித்த சின்


இந்தியாவில் தொல் பொருள்கள்
கண்டெடுக்கப்பட்ட இடங்கள்.
தட்சசீலம்
ப்கானிஸ்தானம்
ரூபார்
ஹாரப்பா
நால்
மொகஞ்சதாரோ
சன்குதாரோ
சாரநாத்
நாளந்தா
பெஹார்பூர்
சாஞ்சி
ராஜகிருகம்
சிசுபால்கர்
அஜந்தா
எல்லோரா
எலிபெண்டா
அரபிக் கடல்
நாகார்ஜுன கொண்டா
பிரம்மகிரி
அத்திரம்பாக்கம்
பல்லாவரம்
அரிக்கமேடு
புதுக்கோட்டை
ஆதிச்சநல்லூர்
வங்காளக் குடாக் கடல்

னங்களே இந்தச் சிந்து சமவெளி நாகரிகத்தை இன்று நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தியுள்ளன. கி. மு. நான்காம் நூற்றுண்டில் மௌரியப் பேரரசு வட இந்தியாவில் தோன்றுவதற்கு முன்பே சுமார் 1000 வருடங்களாக இந்தியாவில் நிலைத்திருந்த உயரிய நாகரிகத்தின் சின்னங்களுள் கி. மு. 6-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த இராஜகிருஹத்தின் மதில்களைத் தவிர, வேறென்றும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதற்கும் முன்பு, ஒன்று அல்லது இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நாகரிகத்தின் பழம் சின்னங்கள் சர் ஜான் மார்ஷல் குழுவினரால் கண்டெடுக்கப் பட்டுள்ளன. 1921-இல் மேற்குப் பஞ்சாபில் மாண்ட்காமெரி மாவட்டத்திலுள்ள ஹாரப்பா என்னுமிடத்தில் இக்குழுவில் ஒருவராகிய ராய் பகதூர் தயாராம் ஸானி என்பவர் அகழ்ந்து கண்டுபிடித்த முத்திரைகளில் விலங்குகளின் உருவங்களும் சித்திர எழுத்தும் காணப்படுகின்றன. இவை கற்காலத்திற்குப் பிந்திய செம்புக் கால மக்களின் நாகரிகச் சின்னங்களாகும். 1922-இல் ஹாரப்பாவிலிருந்து 400 மைல் அப்பாலுள்ள மொகன்ஜ தாரோ என்னுமிடத்தில் புதைந்திருந்த ஒரு புத்த ஸ்தூபியில் பானர்ஜி என்பவர் மேற்கூறியது போன்ற மற்றும் சில பழம் பொருள்களைக் கண்டார். அவை ஒரு நல்ல கட்டுக்கோப்பான பொருளாதாரச் சிறப்புடைய நகர நாகரிகத்தின் சின்னங்களாகவே தெரிகின்றன.

இதன் பரப்பு:

இந்த நாகரிகம் இமயமலை முதல் வடமேற்குக் கடற்கரை வரையில் பரவியிருந்தது. இப் பகுதியே சிந்து சமவெளி எனப்படுவது. இதில் வடக்கே சிம்லாவின் அருகிலுள்ள ரூபார் என்னுமிடத்தில் தொடங்கிக் கராச்சிக்கு

மேற்கே 300 மைல் தூரத்தில், அராபிக்கடலின் அருகிலுள்ள சுத்கஜென் என்னும் இடம் வரை 1000 மைல் நீளத்தில் இந்த நாகரிகம் பரவியிருந்தது. அங்குத்தான் பல இடங்களில் அகழ்ந்து ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்விடங்களுள் சில இப்பொழுது நதிக் கரையில் இல்லாவிடினும் முன்பு இருந்தன என்பதற்கு நில நூல் ஆராய்ச்சி சான்று பகர்கின்றது. இப்பொழுது சிந்து நதியும் அதன் கிளைகளும் தம் போக்கை மாற்றிக் கொண்டு விட்டதால் அவ் விடங்கள் அப்பால் ஒதுங்கிக் காணப்படுகின்றன.

தொடர்புகள் :

சிந்து சமவெளி நாகரிகம் போன்ற மற்றொன்று பலுசிஸ்தானத்திலும், வட மேற்கு மாகாணத்திலும் பெரும்பாலும் மலைகளின் மேல் வாழும் மக்களிடையே நிலவியுள்ளது. இது நகர நாகரிகம் அன்று; சிற்றூர் (கிராம) நாகரிகமே. இந்தியாவில் மக்கள் கிராமங்களில் நிலைபெற்ற காலம் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன் என்று கூறலாம். அதே சமயத்தில் அது சிந்து நதியின் கீழ்ப் பள்ளத் தாக்கில் ஓரளவு பரவியிருந்தது. மற்றப் பகுதிகளிலெல்லாம் பெரும்பாலும் நகர நாகரிகமே நிலைத்திருந்தது. மலைகளின் மேலிருந்த சிறு சிறு கூட்டத்தினர் தமக்குள் போக்கு வரவின்றித் தனித்தனியே இருந்தனர். ஆகையால் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத பண்பாடுகள் தோன்றின. தெற்குப் பலுசிஸ்தானத்திலுள்ள பண்பாடின் சின்னங்கள் மற்றப் பகுதிகளில் உள்ள மலை வாழ் மக்களின் பழஞ் சின்னங்கள் போலில்லை. ஆனால் அவை சிந்து சமவெளியில் கிடைத்த சின்னங்களைப் போலுள்ளன. அவையாவன, சாம்பல் நிறமான சட்டிகளின் மேல் கருப்பும் சிவப்புமாக வர்ணம் தீட்டப்பட்ட ஓவியங்

கள், செம்பின் மேல் அடிக்கப்பட்ட முத்திரைகள் அல்லது நாணயங்கள், பெட்டிகள், கோடரிகள், வீடு கட்டும் கருங் கற்கள், செங்கற்கள் முதலியன. வடக்குப் பலுசிஸ்தா னத்தில் வாழ்ந்த மக்களது பண்பாட்டின் சின்னங்களா வன, பன்னிறப் பாண்டங்கள், கல் முத்திரைகள், மணிகள், செம்பு உளிகள், கத்திகள் முதலியன. இன்னும் சிறிது வேறுபட்ட பண்பாட்டின் பழஞ் சின்னங்களும் இம் மலைப் பகுதிகளில் கிடைத்துள. அம்பு நுனிகளும் கத்தி முனைகளும் களிமண் பொம்மைகளும் அப் பகுதிகளில் கிடைத்துள்ளன. சிந்து சம வெளியிலோ, போக்கு வரத்து வசதிகளும் வியாபாரமும் நடந்து வந்ததற்கு அறிகுறியான சின்னங்கள் கிடைத்திருப்பதால் அங்கு மக்கட் கூட்டம் தனித் தனிக் கிராமங்களில் தொடர்பின்றி வாழாமல், பெரிய பெரிய நகரங்கள் அமைத்துக்கொண்டு ஒரே மாதிரி நாகரிகத்தை உண்டாக்கினர்கள்.

ஹாரப்பா பண்பாடு:

சிந்து சம வெளியின் பொதுவான நாகரிகம் **ஹாரப்பா பண்பாடு** என்ற பெயரால் அழைக்கப்படும். அது 5000 ஆண்டுகளுக்கு முன்பு மிக உயர்ந்த நிலையிலிருந் தது. அது சிந்து சம வெளிக்கு அப்பாலும், கிழக்கே பஞ்சாபிலுள்ள ரூபார் வரையிலும், தெற்கே கத்தியவாரி லுள்ள ரங்க்பூர் வரையிலும் பரவியிருந்தது என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. எகிப்து, மெசபத் தோமியா நாடுகளில் பண்டை நாகரிகம் பரவியிருந்த இடத்தை விட இந்த இடம் மிகப் பெரியது. இவ்வளவு பெரிய ஒரு நிலப் பரப்பு இரண்டு வெவ்வேறு தலைநகர் களில் இருந்து ஆளப்பட்டதாக இருக்க வேண்டும். அத் தலைநகர்கள் சுமார் 400 மைல் இடைவெளியிட்டுள்ள ஹாரப்பாவிலும் மொகஞ்ச தாரோவிலும் இருந்திருக்க

வேண்டும். இவ்வாறே குஷான் ராஜ்யமும் பெஷாவரிலி ருந்தும் மதுராவிலிருந்தும் ஆளப்பட்டு வந்தது என்று வரலாறு கூறுகிறது. இந்த ஹாரப்பா பண்பாடு கி. மு. 2300 ஆண்டு அளவில், மெசபத்தோமியாவில் அகேட்டு நகரத்து சார்கான் என்பவன் ஆண்ட காலத்தில் இங்குத் தலை சிறந்து விளங்கியது. இது நிலவியிருந்த மொத்தக் காலம் கி. மு. 2500 க்கும் 1500 க்கும் இடையே சுமார் 1000 ஆண்டுகள் வரையில் ஆகும்.

ஹரி-யூ-பூயா :

இன்று ஹாரப்பா என்பது மாண்ட்காமரி மாவட்டத் தின் தலைமை நகரிலிருந்து 15 கல் தொலைவில் உள்ள ஒரு பெரிய கிராமமாகக் காட்சியளிக்கின்றது. இருக்கு வேதத்தில் ஹரி-யூ-பூயா என்று கூறப்பட்ட இடம் இந்த ஹாரப்பாவாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் நினைக்கின்றனர். இவ்விடத்தில் தான் ஓர் ஆரியக் கூட் டத்திற்கும் ஆரியர் அல்லாத மற்றொரு கூட்டத்திற்கும் ஒரு போர் நடந்ததாகக் கூறப்படுகின்றது. ஆரியர்கள் அதில் வென்றார்களாம். ஆகவே ஆரியர்களுக்கு முன்பும் பின்பும் அங்கு ஒரு பண்பாடு இருந்தது என்று இதனால் தெரிகின்றது. அந்த இடத்தின் அருகில் சிந்து நதியின் துணையாறாகிய ராவி என்பது பாய்ந்து கொண்டிருந்தது. அது இப்பொழுது ஆறு மைல் அப்பால் வட பக்கமாகச் செல்கின்றது.

கண்டுபிடிப்புகள் :

தொல் பொருள் ஆராய்ச்சியாளர் ஹாரப்பாவுக்குச் சென்ற போது அங்கே முதன் முதலில் பெரிய மண் மேடு களைத்தான் கண்டார்கள். அவற்றிலிருந்து அறுபது, எழுபது ஆண்டுகளாகச் செங்கற்களைப் பெயர்த்தெடுத்து

இருப்புப்பாதை அமைப்பதற்கும், வீடுகட்டுவதற்கும் மக்கள் உபயோகித்து வந்தார்கள். ஆராய்ச்சியாளர் அவ்விடத்தில் அகழ்ந்தெடுப்பதற்கு மூன்று மைல் சுற்றளவுள்ள ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்தார்கள். பல ஆண்டுகள் பாடுபட்டு அகழ்ந்து பார்த்த போது நீண்ட சதுர வடிவமான ஒரு நகரத்தின் மதிற் சுவர்கள் வெளிப் பட்டன. அந் நகரின் நீளம் சுமார் 1400 அடி; அகலம் 600 அடி. மதிலின் உயரம் 40 அடி. அந் நகர அமைப்பு மெசபத்தோமிய நகர அமைப்பை விட மிக நன்ருக இருந்தது. இவ் அரணின் மதில் உறுதியாகச் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டது. அது வெளிப்புறத்திலும் சுட்ட செங்கற்களோடு பிணைத்து அசையாதவாறு பொருத்தப் பட்டிருந்தது. இந்த நகருக்கு வடக்கே வணிகர் கூடுமிடம் இருந்தது. தொழிலாளர் இருப்பிடங்கள் இரண்டு வரிசைகளாகக் கிழக்கு மேற்காக இருந்தன. ஒவ்வொரு தொழிலாளி வீட்டிற்கும் இரண்டு பெரிய அறைகளும் ஒரு முற்றமும் இருந்தன. போரடிக்கும் களமாக உதவ வட்டமான செங்கல் மேடையொன்றிருந்தது. தானியக் களஞ்சியங்கள் இரு வரிசையாக, வரிசைக்கு ஆறு வீதம் இருந்தன. ஒவ்வொரு களஞ்சியமும் சுமார் 52 க்கு 20 அடி இருந்தது. இரு வரிசைக் களஞ்சியங்களுக்கிடையே 23 அடி பாதை இருந்தது. இக் களஞ்சியங்கள் நின்ற இடத்தின் பரப்பு சுமார் 10000 அடி. உரல்களில் வைத்து நெல்லைக் குற்றுவதற்குப் பல வரிசையான மேடைகளும் இருந்தன. இந்தக் களஞ்சியங்களில் அரசனுக்கு வரியாக, மக்கள் அரிசியைக் கொட்டுவார்கள். ஒருகால் சிற்றரசர்களும் அரிசியைத் திறையாகக் கொடுத்திருக்கக் கூடும். ஆகவே இக் களஞ்சியங்கள் அரசாங்கக் கருவூலங்களாகக் காப்பாற்றப்பட்டன. நகரத்திற்குள் ஒரு சுற்றுச் சுவரின் உள்ளடங்கிய இடத்தில் போர்

வீரர்கள் தங்குவதற்குத் தக்க வீடுகள் கட்டப்பட்டிருந்தன. இதைக் காணும் போது அந்த நகரம் பகைவர்களிடமிருந்து காக்கப்படுவதற்காக அமைந்த நல்ல அரணாக இருந்தது என்பது தெளிவு.

தொழில்கள் :

வீடுகள் பல அடுக்குகளைக் கொண்டவையாய்ப் படி வரிசைகளுடன் இருந்தன. இது அவர்களது வீடு கட்டும் தொழிற் சிறப்பை நன்கு காட்டுகிறது. உலைகள் கட்டி அவற்றுள் உலர்ந்த சாணத்தையும் கரியையும் இட்டுத் துருத்திகளால் காற்றை ஊதி வெண்கலத்தை உருக்கிச் சிலைகளும் பாத்திரங்களும் செய்யப்பட்டன. ஹாரப்பா மக்கள் பஞ்சை நூற்று ஆடை நெய்து அணிந்து வந்தார்கள் என்றும் தெரிகின்றது. எப்படி எனின் ஒரு பானையின் மேல் எழுதப்பட்டிருந்த மனித உருவத்தில் அரையில் வேட்டியும், ஒரு சிலையில் மார்பில் சால்வை போன்ற மேலாடையும் அணிந்த உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அம் மக்கள் ஆடைகளைத் தைத்து அணிந்தார்கள் என்பதற்குச் சான்றாக அக் காலத்து ஊசிகளும் பித்தான்களும் கூடக் கிடைத்துள்ளன.

கலைகள் :

பெண்டிர் தம் கூந்தலை அழகாகச் சீவி முடித்து ஒப்பனைகள் செய்து கொண்டு நகைகளை அணிந்து இன்பமாகக் காட்சியளித்தார்கள் என்பதும் அங்குக் கிடைத்த முத்திரைகளாலும் சிலைகளாலும் அணிகலன்களாலும் தெரிகிறது. பொழுது போக்குக்காகச் சூதாடுவதும் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதும் வழக்கமாயிருந்தன. சிறுவர்கள் கோலிகளையும் கிலுகிலுப்பைகளையும் பொம்

லமைகளையும் விளையாடுவதற்கு உபயோகித்தார்கள். இவ் விளையாட்டுப் பொருள்கள் மிகவும் புதுமையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. முத்திரைகளின் மேலுள்ள எழுத்துக்கள் அம் மக்களுக்கு எழுதப்படிக்கத் தெரிந்திருந்தது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஆனால் அவ் வெழுத்துக்கள் எளிய சித்திர உருவில் அமைந்தவை. அவ் வெழுத்துக்களினுடைய பொருளை நாம் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமலிருப்பது வருந்தத் தக்க செய்தியாகும். அப் புதிரை விடுவிப்பதற்கு என்றேனும் ஒரு நாள் முடியும் என்று நம்புவோமாக.

கைத்திறன் :

சிற்பங்களைச் செதுக்குவதில் சிந்து சமவெளி மக்கள் பெற்றிருந்த கைத்திறமை மிகவும் போற்றுதற்குரியது. ஹாரப்பாவில் கிடைத்த இரு மாக் கல் சிலைகள் அக்கால மக்கள் உடல் அழகை மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றன. 2000 ஆண்டுகளுக்குப் பிறகு வாழ்ந்த கை தேர்ந்த கிரேக்கக் கலைஞர்கள் கூடக் கண்டு பொறாமைப் படும்படியாக அவை இருக்கின்றன. சுண்ணாம்புக் கல்லினால் செய்யப்பட்ட ஒரு பெருமகனின் உருவமும், நடனமாடும் ஒரு பெண்ணின் உருவமும் மேலும் சிறப்பாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. முத்திரைகளில் பொறிக்கப்பட்ட எருது, ஒற்றைக் கொம்புடைய விலங்கு, தெய்வம் இவற்றின் உருவங்களும் வியக்கத் தக்க கைத்திறமையைக் காட்டி நிற்கின்றன.

சமயம் :

அம் மக்கள் உலக மாதாவாகிய தெய்வத்தை முதன்மையாக வழிபட்டார்கள் என்பது தெளிவு. எல்லாச் செழிப்பையும் நலனையும் அளிக்கும் மேலான தெய்வ

மாக அது கருதப்பட்டது. அதே சமயத்தில் மரங்களும், விலங்குகளும் நீரோடைகளும் கூட வணக்கத்திற்கு உரிய பொருள்களாக மதிக்கப்பட்டன. சிவனைப் பசுபதியாக (உயிர்களின் தலைவன்) அவர்கள் வணங்கினார்கள் என்பதற்கு அங்குக் கிடைத்த ஒரு முத்திரை ஆதாரமாக இருக்கிறது. ஏனெனில் இம் முத்திரையில் திரிசூலம் அல்லது கொம்புகளுடன் கூடிய அத் தெய்வத்தைச் சுற்றிப் பல மிருகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவர்கள் இறந்தவர்களை நிலத்தில் குழி தோண்டிப் புதைத்தார்கள். சவத்தின் தலையை வடக்கே வைத்துப் புதைக்கும் வழக்கமிருந்தது. சவத்துடன் இறுதிச் சடங்கு செய்யும் சட்டிகளும் ஒப்பனைப் பொருள்களும் கூடப் புதைக்கப்பட்டன. சவங்கள் மரத்தால் செய்த சவப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு நார் மடியால் சுற்றப்பட்டுப் புதைக்கப்பட்டன என்பதற்கும் ஓர் ஆதாரம் கிடைத்திருக்கின்றது. ஹாரப்பாவில் மக்கள் ஆட்சி முறை நடைபெற்று வந்தது. அரசனையோ குருவையோ தலைமையாகக் கொண்ட நகர ஆட்சியும் நிலவி இருந்தது. இவர்கள் மிக்க பலம் பொருந்திய ஆட்சியை நடத்தியிருக்க வேண்டும்.

மொகஞ்ச தாரோ:

சிந்து சம வெளியில் மொகஞ்ச தாராவில் அகழ்ந்து கண்டு பிடிக்கப்பட்ட அறிகுறிகளால் அங்கேயும் ஹாரப்பாவைப் போலவே மிக உயர்ந்த நாகரிகம் நிலவி இருந்தது என்பது முடிவாகியிருக்கிறது. மொகஞ்ச தாரோ என்பதற்கு இறந்தவர்கள் நகரம் என்பது பொருள். பார்க்கானு மாவட்டத்தில் சிந்து நதிக் கரையோரமாக இது அமைந்திருக்கிறது. அங்கே தோண்டிப் பார்த்ததில் அங்கு அடுத்தடுத்துத் தோன்றிய நகரங்கள் யாவும்

முதலில் ஏற்படுத்தப்பட்ட நகர அமைப்பையே பெற்றிருந்தன என்று தெரிகிறது. நகரத்தில் ஒழுங்காகக் கட்டப்பட்ட மறைவான சுரங்கச் சாக்கடை அல்லது பாதாளச் சாக்கடை இருந்தது. இதைப் போன்ற நகர அமைப்பும் கழிவு நீர்க் கால்வாய்த் திட்டமும் மெசபத்தோமியா முதலிய பண்டை நாடுகளில் காணப்படவில்லை. இங்கே வீடுகள் எல்லாம் சூளைகளில் சுடப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்டவை. மத்தியக் கிழக்கிலுள்ள புராதனப் புதைந்த நகரங்களிலோ வெயிலில் காயவைத்த களிமண் கட்டிகளே வீடுகட்டுவதற்கு உபயோகப் படுத்தப்பட்டன. சிந்து சம வெளியில் ஒரு சாதாரண நடுத்தர வகுப்பினர் வீட்டில் கூட ஒரு முற்றமும், இரண்டு படுக்கையறைகளும், ஒரு சமையல் அறையும், குளிக்கும் அறையும், உக்கிராணமும் இருந்தன. உயர் தரக் குடும்பத்தாரின் வீடுகளில் இன்னும் அதிகமான அறைகளும் விருந்தினர் தங்குவதற்கு வெளிப்புறமாகத் தனியே ஓர் அறையும் உண்டு. இரண்டடுக்கு மாடி வீடுகளும், மாடிக்குச் செல்லும் படி வரிசைகளும் செல்வர் வீடுகளின் சிறப்பியல்புகளாகும்.

குளமும் கோயிலும் :

மொகெஞ்ச தாரோவில் ஊரின் நடுவிலுள்ள ஒரு பெரிய குளம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அது சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு 39 அடி நீளம், 23 அடி அகலம், 8 அடி ஆழம் உடையதாயிருந்தது. அதில் இறங்குவதற்குப் படிகளுமிருந்தன. அதைச் சுற்றிலும் குளிப்பவர்களுக்காக அறைகள் கட்டப்பட்டிருந்தன. அது பொது மக்கள் குளிப்பதற்காகப் பயன் பட்டிருக்க வேண்டும். அதன் அருகில் இருந்த குஷானர் காலத்து ஸ்தூபி ஒன்றைப் பார்க்கும் போது அஃது ஒரு கோயில் அல்லது மடத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்

என்று தெரிகிறது. அதனருகிலேயே நாற்றுக்கால் மண்டபம் ஒன்று இருந்தது. அதுவும் பொதுக் கூட்டங்களுக்காகவோ மதச் சார்பான கூட்டங்களுக்காகவோ பயன்பட்டு வந்தது.

இயற்கை வளம் :

கோதுமையும் வாற் கோதுமையும் (பார்லி) அம் மக்களுடைய முக்கிய உணவுப் பொருள்களாகும். ஆடுகளும் கோழிகளும் கூட உணவாக உதவின. வீடுகளில் எருதையும் நாயையும் யானையையும் அவர்கள் வைத்துப் பழக்கி வந்தார்கள். காண்டா மிருகங்கள், புலிகள் முதலியவற்றின் உருவங்கள் அங்குக் கண்டெடுக்கப்பட்டிருப்பதால் அவ்விடத்தில் அக்காலத்தில் வன விலங்குகள் வாழ்வதற்கேற்ற பெரிய அடர்ந்த காடுகளும் இருந்திருக்க வேண்டும் என்று தெளியலாம். மேலும் அந் நாகரிகத்தில் எங்கும் சுட்ட செங்கற்களே காணப்படுவதால் அவற்றைச் சுடுவதற்கு வேண்டிய விறகைத் தரும் பெரு மரக் காடுகள் அருகில் இருந்திருக்க வேண்டும். காடுகள் உண்டாவதற்கு அதிக மழையும் பெய்திருக்க வேண்டும். ஆனல் இவ்வளவு இயற்கை வளம் கொழித்த இடம் இப்பொழுதோ வறண்ட பாலையாய் இருக்கிறது என்பது இரங்கத் தக்கது.

சன்கு தாரோ :

சிந்து சம வெளியிலேயே **சன்கு தாரோ** என்னுமிடத்தில் அகழ்ந்து செய்த ஆராய்ச்சிகளால் அங்கு ஒன்றன் பின் ஒன்ருக இரண்டு நாகரிகங்கள் இருந்தன என்பது புலனகிறது. ஒன்றின் அறிகுறி, சாம்பல் நிறமான சட்டியின் மேல் கருப்பு வர்ணத்தாலும், சிவப்பு வர்ணத்தாலும் தீட்டப்பட்ட ஓவியம். மற்ருென்றின் அறிகுறி

பாண்டங்களின் மேல் செதுக்கிச் செய்யப்பட்ட ஓவியம். இந்த இரண்டு வகை நாகரிகங்களும் ஹாரப்பா நாகரிகத்தை அடுத்து உண்டானவை. இவை உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அச்சிறு பகுதியில் நிலவியிருந்த நாகரிகமேயன்றிப் பொதுவான சிந்து சம வெளி நாகரிகத்திற்கு எவ்வகையிலும் இணையானவை என்று கூற முடியாது. ஹரப்பாவிலேயே கூட ஒரு அந்நிய நாகரிகம் இருந்ததற்கு அறிகுறியாக அதன் அழிபாடுகளில் உள்ள இடுகாட்டிலிருந்து எடுக்கப்பட்ட சிவப்புப் பாண்டங்கள் கிடைத்துள்ளன. இவற்றால் சிந்து சம வெளியில் முதலில் இருந்த தனித்த நகர நாகரிகம் நீங்கிப் பிற்காலத்தில் வேற்று நாகரிகங்களும் புகுந்து விட்டன என்பது வெள்ளிடை மலே. இந்த நாகரிகங்கள் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து, குறிப்பாக ஈராக்கிலிருந்து, வந்திருக்க வேண்டும். சிந்து சம வெளி நாகரிகத்திற்கு முந்தி இருந்த நாகரிகங்களின் சின்னங்களும் குவெட்டா, அம்ரி, சோப் என்னுமிடங்களில் கிடைத்துள்ளன. அதே காலத்திருந்த வேற்று நாகரிகங்களின் அறிகுறிகளும் சிந்து சம வெளியில் உள்ளன.

நாகரிகத் தாய்:

சிந்து சம வெளி மக்கள் வாணிகத்திலும் தொழிலிலும் மிகவும் முன்னேறி அயல் நாடுகளோடு வர்த்தகத் தொடர்பு கொண்டு நிறையப் பொருளீட்டினர்கள். சுமேரியாவுடன் கூட அவர்கள் வியாபாரம் செய்ததற்குச் சுமேரியாவில் கிடைத்த இந்திய முத்திரைகள் சான்று பகர்கின்றன. இம் முத்திரைகளின் காலம் சுமார் கி. மு. 2500. மற்றும் சிந்து மக்களால் செய்யப்பட்ட கைத் தொழிற் பொருள்கள் சுமேரியாவில் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு சிந்து மக்களே அந்த நாகரிகத்தை

உண்டாக்கியவர்கள் என்று கூறுவது பொருந்தும். இங்ஙனம் நோக்குமிடத்து உலகிலேயே முதன் முதலில் நாகரிகம் அடைந்த மக்கள் சிந்து மக்களே என்பது தெளிவு.

முழுமையான வாழ்க்கை:

இஃது எப்படியாயினும் சிந்து நாகரிகம் இணையற்றது என்பதில் ஐயமில்லை சிந்து நதிப் பள்ளத் தாக்கில் மண்ணுள் மறைந்திருந்த நகரங்கள் ஐந்து முதல் ஏழு வரை ஒன்றின் மேல் ஒன்ருக அடுக்கி இருந்தன. இந் நகரங்கள் யாவும் ஒரே திட்டத்தின் படி அமைந்து அவற்றின் தெருக்கள் ஒன்றுக்கொன்று செங்கோணமாக இருந்தன. நகரம் முற்றிலும் நவீன சுகாதார வசதிகள் அமைந்திருந்ததுடன், வீடுகளிலும் கூட இவ்வசதிகள் நிறைந்திருந்தன. அவற்றில் வாழ்ந்த மக்கள் மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை நடத்திப் பல கலைகளிலும் தொழில்களிலும் வல்லவர்கள்ளா யிருந்தார்கள். சமயத் துறையில் அவர்கள் முன்னேறி யிருந்ததற்கு அவர்களுடைய வழிபாட்டுப் பொருள்களும் சமயச்சார்பான கட்டிடங்களுமே தக்க சான்ருகும். இந் நகர நாகரிகத்தைக் கண்டு மகிழவும், அதனேடு வர்த்தகத் துறையிலும் அரசியல் துறையிலும் தொடர்பு கொள்ளவும், அந்நிய நாட்டினர் பலர் அங்கு வந்தார்கள். அவர்களுட் சிலர் அங்கேயே நிலையாகவும் தங்கிவிட்டார்கள். இங்குப் பெரிய நகரங்களில் இத்தகைய ஒரு கலப்பு நாகரிகமும் இருந்தது என்பதற்குப் போதிய சான்றுகள் உள. இவ்வாறு சிந்து மக்கள் கலை, கல்வி, தொழில், வாணிகம் சமயம் முதலிய எல்லாத் துறைகளிலும் மிக முன்னேறி ஒரு முழுமையான வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்பது தெளிவு.

இவர்கள் யாவர் ?

இந்த மாபெரும் நாகரிகத்தைப் படைத்த மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இன்னும் உறுதியாகத் துணியக் கூட வில்லை. சர் ஜான் மார்ஷல், நீட்சித், ஹீராஸ் பாதிரியார் போன்ற சிந்து சம வெளி ஆராய்ச்சியாளர் இவர்களைப் பற்றி வெவ்வேறு கருத்துக் களையுடையவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் திராவிட இனத்தவராகவோ, அவர்களுடைய முன்னோடிகளா கவோ இருக்கலாம் என்றும், அல்லது ஆரியர்களாகக் கூட இருக்கலாம் என்றும், இறுதியாக இனமே தெரியாத வர்களென்றும் கூறப்படுகின்றது. ஆரியர்கள் இந்தியா விற்கு வருவதற்கு முன்பே சிந்து நாகரிகம் தோன்றி யிருந்ததால் அஃது ஆரிய நாகரிகமாக இருக்க முடியாது என்று துணிந்து கூறுவாரும் உளர். ஆனால் ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தவர்களன்றி இங்கேயே இருந்தவர் கள் என்று ஒரு சாரார் கூறுவர். ஆக, சிந்து மக்கள் எந்த இனத்தவர் என்பது இன்னும் ஒரு தீராத பிரச்சினையா கவே உள்ளது என்று கூறலாம். எந்த ஆதாரத்தைக் கொண்டு அவ்வளவு பழங்காலத்திலிருந்த மக்களது இனத்தை நாம் துணிந்து அறுதியிட முடியும்? ஒருகால் இனியும் கிடைக்கக் கூடிய சான்றுகளைக் கொண்டு நாம் அதைத் துணியக் கூடும்.

அடுக்குகள் ஏன் ?

அந்தோ! அவர் இனம் எதுவாயினும் இன்று அவர்கள் பூண்டோடு அழிந்துவிட்டார்கள். அவர்களது மாபெரும் நகரங்களும் மண்ணுக்கடியில் மறைந்து விட்டன. இங்ஙனம் அவை மறைந்தது ஒரு முறை, இரு முறை அன்று, பன்முறை என்பதைப் பார்க்கும்

போது அவர்கள் இயற்கையையும் பகைவர்களேயும் இடை விடாது எதிர்த்துப் போராடி இறுதியில் தோற்று விட்டார்கள் என்பது தெளிவு. அவர்களுக்கு ஏன் இந்த முடிவு வந்தது? எப்படி வந்தது? என்பவையும் தெளியக்கூடாத செய்திகளாக உள்ளன. எல்லாம் ஒரு மாய மந்திரம் அல்லது மூடு மந்திரம் போலிருக்கின்றது. ஓரிடத்தில் இருந்த நகரம் அழிந்த பிறகு அவர்கள் ஏன் அதே இடத்தில் மீண்டும் ஒரு நகரத்தைக் கட்ட வேண்டும்? அந்த இடம் இயற்கையினுலோ, பகைவராலோ எளிதில் அழிக்கப்படுவதற்கு இலக்கான இடமாயிருந்தால் அவ்விடத்தை விட்டு வேறோர் இடத்தில் தமது புதிய நகரத்தை அமைத்துக் கொண்டிருக்கலாகாதா? அதே இடத்தில் மீண்டும் மீண்டும் ஏன் நகரங்களேக் கட்ட வேண்டும்?

இப்படி அவர்கள் கட்டியதற்குத் தக்க காரணம் இல்லாமலா இருக்கும்? அவர்கள் முதலில் நகரைக் கட்டுவதற்குத் தேர்ந்தெடுத்த இடம் நதிக் கரையிலும், பெருவழிகள் அல்லது வியாபார மார்க்கங்கள் கூடுமிடத்திலும் அமைந்திருக்கவேண்டும். முற்காலத்தில்-ஏன்? இக்காலத்திலும் கூட-உலகில் பெரும்பாலும் பெரிய நகரங்கள் எல்லாம் இத்தகைய இடங்களில்தான் தோன்றியுள்ளன. அப்படி அவர்கள் தேர்ந்தெடுத்தஇடத்திலுள்ளதுபோன்ற வசதிகள் வேறு எங்கும் இன்மையால் அங்கு அவர்கள் கட்டிய நகரம் அழிந்தவுடன் அவ்விடத்திலேயே மீண்டும் புதிய நகரத்தைக் கட்டினுர்கள் போலும். சிந்து சம வெளியில் மொகஞ்ச தாரோ, ஹாரப்பா தவிர வேறிடங்களில் இவ்வாறு அடுக்கடுக்கான நகரங்கள் இல்லே. அதற்குக் காரணம் அங்கு இந்த இரண்டு இடங்களில் இருப்பது போன்ற எல்லா வசதிகளும் இல்லே. ஆகையால் அங்குக்

கட்டிய நகரம் அழிந்த போது அவர்கள் அதை விட்டு விட்டு வேறிடத்திற்குச் சென்று விட்டார்கள்.

எப்படி அழிந்தது?

இந்த நகரங்கள் பகைவர்களால் தாக்கி அழிக்கப்பட்டிருக்கக் கூடும். நகர அமைப்பில், கோட்டை மதிலும் வீரர்கள் தங்குமிடங்களும் போர்க் கருவிகளும் இருந்ததைக் கண்ணுறும் போது, பகைவர்களிடமிருந்து பாதுகாக்கவே அவை இவ்வாறு கட்டப்பட்டன என்று அறியலாம். ஒரு வேளை இந்த நகரங்கள் நில நடுக்கம் (பூகம்பம்), பெரிய வெள்ளம், மணற் காற்று முதலிய இயற்கைக் கொடுமைகளால் அழிந்திருக்கக் கூடும். அப்போது இவற்றின் மேல் மண் மூடிப் போயிருக்கும். சிந்து நதியும் அதன் துணை நதிகளும் அடிக்கடி தம் போக்கை மாற்றிக்கொண்டிருப்பதிலிருந்து இந் நகரங்கள் வெள்ளத்தால் அழிக்கப்பட்டன என்பதும் பொருந்தும். இவ்வாறு யாதோ ஒரு காரணத்தால் அழிக்கப்பட்ட நகரின் மீதே மீண்டும் ஒரு நகரம் கட்டப்பட்டது. அதுவும் அழிந்த பிறகு அதன்மேல் மற்றொரு நகரம் தோன்றியது. இவ்வாறு அழிக்கும் ஆற்றலுக்கும் ஆக்கும் ஆற்றலுக்கும் இடைவிடாத போட்டி நடந்தது. இதன் காரணமாகத்தான் அவ்விடங்களை அகழ்ந்தெடுத்த போது பல நகரங்கள் காணப்பட்டன. இறுதியில் ஆக்க சக்தியை அழிவு சக்தி மிஞ்சி விட்டது. கி. மு. 1500 க்குப் பிறகு இது காறும் மீண்டும் அங்கு மக்கள் நகர் அமைக்கத் துணியவே யில்லை. பாழடைந்த நகரங்கள் கண்ணுக்கும் தெரியாது மண்ணுக்கடியில் மறைந்து ஒழிந்தன. பாழும் பாழாய், அப்பாழும் பாழாய் விட்டது. என்னே இயற்கையின் சதி!

இன ஆராய்ச்சி :

மொகஞ்ச தாரோ மக்கள் முன்றொரு காலத்தில் வட இந்தியாவில் சிந்து சம வெளியில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும், இலங்கையிலும் கூடப் பரவியிருந்தார்கள் என்றும், அவ்விடங்களிலெல்லாம் நிலத்தை அகழ்ந்து தொல்பொருள் ஆராய்ச்சி நிகழ்த்தினால் இவ்வுண்மை நிலை நாட்டப்படக் கூடும் என்றும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள்; இவர்கள் திராவிட மக்களின் முன்னோடிகளாக அல்லது பழம் திராவிடர்களாகவே இருந்திருக்க வேண்டும் என்றும் கருதுகிறார்கள். இவர்கள், மனித இன ஆராய்ச்சியாளர் கருத்துப்படி, ஆஸ்டிரலாய்டு, நீக்ராய்டு என்னும் இனத்தவர்களின் பண்புகளைப் பெற்றிருப்பதால் ஆஸ்திரேலிய, ஆப்பிரிக்க (குறிப்பாக எகிப்து) மக்களும் இவர்கள் இனத்தவரே என்று கூறப்படுகிறது. சிந்து சம வெளி மக்களே மிகப் பழங்காலத்தில் எகிப்து, சுமேரியா, தெற்கு ஐரோப்பிய நாடுகள் முதலிய இடங்களுக்குக் குடியேறி இருக்க வேண்டும் என்பதற்குப் போதிய புதை பொருள் சான்றும் அவ்விடங்களின் செவி வழிச் செய்திச் சான்றும் உள்ளன. ஆகவே ஆப்பிரிக்க, ஐரோப்பிய, சுமேரிய நாகரிகங்களைப் படைத்தவர்களும் இவர்களே என்று சொல்லலாம். அந் நாடுகளில் கிடைத்த பழம் சிலைகள், ஓவியங்கள், முத்திரைகள், எழுத்து முறைகள் முதலியன சிந்து சம வெளியோடு அவைகளுக்கு இருக்கும் தொடர்பைத் தெற்றெனக் காட்டுகின்றன.

ஊழி வெள்ளக் கதைகள் :

சுமேரியப் பழங் கதை ஒன்று, ஒரு மீன் மனிதன் வேறொரு நாட்டிலிருந்து பாரசீகக் குடா வழியாக மெசபத்தோமியாவுக்குத் தன்னுடைய கலைகளுடன் வந்ததாகக்

கூறுகிறது. அக்காலத்தில் ஒரு பெரும் 'ஊழி வெள்ளம்' தோன்றியதாகவும் அது கூறுகிறது. இந்தியப் புராணங்களிலும் இவ் ஊழி வெள்ளத்தைப் பற்றியும், அதிலிருந்து தப்பிப் பிழைத்து வேறு நாடு சென்ற மநு என்னும் அரசனைப்பற்றியும் கூறப்படுகிறது. இந்த மனுவும், ஆரியர் வருகைக்கு முன்பு இருந்த ஒரு பழைய திராவிட அல்லது இந்திய மன்னனே யாவான் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இது போலவே எகிப்திலும் ஊழி வெள்ளத்தைப்பற்றிக் கதை வழங்குகின்றது. இவை எல்லாவற்றையும் நோக்கும் போது அந்தப் பழங் காலத்தில் இந்தியாவிலிருந்து மக்கள் வேறு நாடுகளுக்குக் குடி பெயர்ந்து சென்றார்கள் என்பது தெளிவு. சிறிய ஆசியாவில் டிரெம்லி* என்று ஒரு மக்கட் கூட்டம் இருக்கிறது. இவர்கள் அங்கு வந்து குடியேறிய தமிழர்களாக இருக்கவேண்டும். சுமேரியாவிலும் தொல் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய இடம் 'ஊர்' எனப்படுகிறது. இதுவும் தமிழ்ப் பெயரே என்பது தெளிவு. இச்சான்றுகளால் சிந்து சமவெளி நாகரிகத்தைப் படைத்த மக்கள் ஏதோ ஓர் ஊழி வெள்ளத்தின் பிறகு பிறநாடுகளுக்கும் சென்றார்கள் என்றும் அவர்களே உலகத்தில் முதல் முதலில் நாகரிகமடைந்து உலக முழுவதற்கும் தம் நாகரிகத்தைத் தந்து உதவினார்கள் என்பதும் தகும்.

ஆராய்ச்சியாளர் கூற்றுக்கள் :

சிந்து நாகரிகம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, மேல் நாடுகளில் ஆரியர்களே முதன் முதலில் நாகரிகமடைந்த மக்கள் என்று கருதப்பட்டது. ஆனால் ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே இந்தியா மிகப் பழமையான நாகரிகத்தைப் பெற்றிருந்தது என்பது

* 'தமிழர்' என்பது 'டிரெம்லி' என்று திரிந்திருக்க வேண்டும்.

இதனல் இப்பொழுது வெளியாகிறது. பாரிடேல் கீத் என்னும் ஆராய்ச்சியாளர் இன்றும் இந்தியாவானது சிறப்பாகவும் அதிகமாகவும் திராவிடப் பண்புகளை அல்லது ஆரியமல்லாத பண்புகளைப் பெற்றிருக்கிறது என்று கூறுகிருர்; மேலும் கிரீட் என்னும் தீவில் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் எகிப்து, சிறிய ஆசியா, பாபிலோன், துருக்கிஸ்தானம் முதலிய இடங்களில் வாழ்ந்த மக்களோடு தொடர்பு கொண்டிருந்தார்கள் என்றும், அதற்கு அறிகுறியாக அங்குக் கிடைத்த பழஞ் சிலைகள், முத்திரைகள், கருவிகள், பானைகள் முதலியன உள்ளன என்றும் கூறுகிருர். கார்டன் சைல்டு என்பவர் சிந்து சமவெளிப் பண்பாடு எகிப்தியப் பிரமிடுகளைப் போல அவ்வளவு பழைமையானதாகவும் போற்றத்தக்கதாகவும் உள்ளது என்றும், அதன் கதைகளும் சிறப்புக்களும் அவற்றை விடப் பழைமையானவை என்றும் குறிப்பிடுகிருர். புகழ்பெற்ற இந்திய மொழி நூல் ஆராய்ச்சியாளரும் பழம்பொருள் வல்லுநரும் ஆகிய சுனித் குமார் சட்டர்ஜி என்பவரும், இந்தியாவிலுள்ள ஆரிய, திராவிடக் கலப்பு நாகரிகத்தில் சுமேரிய, கிரேக்கப் பண்புகள் கலந்திருக்கின்றன என்ற கருத்துடையவராய் இருக்கிருர். சிந்து சமவெளி எழுத்துக்களையும் வரலாற்றையும் ஆராய்ந்த ஹீராஸ் பாதிரியார் பழம் திராவிடர்கள் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்குச் சென்றது மட்டுமன்றிக் கி. பி. 5-ஆம் நூற்ருண்டில் உரோமப் பேரரசு அழியும் வரையில் மேல் நாடுகளுடனும், மெசபத்தோமியா,எகிப்து முதலிய நாடுகளுடனும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று குறிப்பிடுகிருர். மற்றும் பிராங்க் போர்ட், ஹால்ஸ் என்னும் மேனுட்டு ஆராய்ச்சியாளரும் இதே கருத்தை வலியுறுத்துகிருர்கள். புத்தருடைய பழம் பிறப்புக்களைப் பற்றிக் கூறும் பாவேரு ஜாதகம் என்னும்

நூல் சிந்து சமவெளி மக்கள் மெசபத்தோமியாவில் ஒரு காக்கையை நூறு பொற் காசுகளுக்கும், மயிலை நூறு வெள்ளிக் காசுகளுக்கும் விற்ருர்கள் என்று கூறுகிறது. அரேபியாவின் தென்மேற்குக் கோடியிலுள்ள சபா அல்லது ஷீபா என்னும் ஊரில் திராவிடர்கள் ஒரு வர்த்தக நிலயம் வைத்திருந்தார்கள் என்றும், சாலமன் என்னும் புகழ்பெற்ற அரசன் அந்த வர்த்தகத்தை ஒழுங்கு செய்தான் என்றும் அவர்கள் நாட்டு நூல் ஒன்றில் கூறப் படுகிறது. இந்திய நாட்டுச் சின்னங்களும் வளையல் களும் அரேபியாவில் சூசா என்னுமிடத்திலும், இந்தியத் தேக்கு மரமும் மெல்லிய ஆடைகளும் ஊர் என்னும் இடத்திலும் இருந்தனவாம். இன்னோரன்ன சான்றுகளா லும் அறிஞர் கூற்றுக்களாலும் சிந்து சமவெளிக்கும் மற்றைய நாடுகளுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பும் அதன் தன்மையும் நன்கு தெரிகின்றனவன்ருே?

புதிர்கள் புரிந்தன :

மொகஞ்ச தாரோ கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அதன் உதவியால் உலகத்தில் இதுவரை தீர்க்கப்படாதிருந்த பலபுதிர்கள் தீர்ந்துவிட்டன என்று கருதலாம். பல நாடு களில் கண்டெடுக்கப்பட்ட பழம் பொருள்கள், தொல் பொருளியல் சிக்கல்கள், பண்டைக்கால எழுத்து ஆராய்ச்சி, பண்டைச் சமயங்கள், பைபிளில் உள்ள மக்கள் தோற்றம் பற்றிய கூற்றுக்கள், இவற்றிக்கு இடையே யிருந்த முரண்பாடுகள் அல்லது புரியாத புதிர்கள், ஒருவாறு இன்று தெளிவாக்கப் பட்டுள்ளன. மொகஞ்ச தாரோ மக்களுடைய சமயமும் பண்பாடும் உலகத்திலேயே மிகப் பழைமையானவை ஆகையால் உல கத்தின் மற்றப் பகுதிகளில் கிடைத்த பழம் பொருள்கள், வழங்கும் பழம் செய்திகள் முதலியவற்றை இவற்ருேடு

ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை எல்லாம் ஒரே அடிப் படையைக் கொண்டவை என்பதும் பிற்காலத்து இடவேறு பாடுகளால் தோன்றிய சிறுசிறு மாறுபாடுகளன்றி வேறு முரண்பாடுகள் இவற்றுக்கிடையில் இல்லை என்பதும் தெளி வாகும். சிந்துமக்களும், மத்தியதரைக் கடலைச் சூழ்ந்துள்ள நாட்டு மக்களும், இனத்தால் தொடர்புடையவர்களாகை யால் அவர்களுடைய எழுத்து முறை, சமய அடிப்படைகள், பழக்க வழக்கங்கள் முதலியவை எல்லாம் ஒன்றாகவே இருந்தன. சிந்து மக்களது மொழி திராவிட மொழியின் தாய் மொழியாகவோ அதன் முன்னோடியாகவோ இருந்தது. அவர்களுடைய எழுத்தும் சித்திர ஒலி யெழுத்து முறையில் அமைந்திருந்தது. இவ்வாறே தான் சிற்சில மாறுதல்களோடு மற்றப் பண்டை நாகரிக நாடுகள் பண்டைய இந்திய மொழியையும் எழுத்தையும் பண்பாட்டையும் பெற்றிருந்தன.

இந்தியா உலகத்தாய்:

ஹீராஸ் பாதிரியார் அப்பண்டை நாடுகளுடைய எழுத்துக்களை யெல்லாம் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது இக் கூற்றுக்குத் தக்க ஆதாரமாகும். சமயத் துறையில் சிந்து மக்களும், எகிப்து, சுமேரிய மக்களும் சூரியனையும் முதற் கடவுளாகவும், பாம்பு, கருடன் அல்லது பருந்து, இலிங்கம், அம்மன் அல்லது உலகத்தாய் முதலியவற்றைத் துணைத் தெய்வங்களாகவும் கொண்டிருந்தனர் என்பதும், இந்நாடு களின் பழைய முத்திரைகளாலும், சித்திரங்களாலும் தெரிகின்றன. முதற் கடவுளுக்குச் சிந்து மக்கள் ஆன் (அல்லது ஆள்) என்ற பெயரையும், எகிப்திய மக்கள் அறு என்ற பெயரையும் இட்டிருந்தார்கள்*. எகிப்தில்

* இதனுடன் பெரும் (பெரிய) என்ற அடை மொழியைச் சேர்த்துப் பெருமான், பெருமாள் என்ற பெயர்கள் பிற்காலத்தில் கடவுளர்க்கு இடப்பட்டன.

இதற்கு மற்ருெரு பெயர் ரா என்பது. இதன் அடிப் படையிலேயே எகிப்தில் ரமேசஸ் என்ற அரச பரம்பைப் பெயரும், உரோம் நகரத்தை நிறுவிய ரோமுலஸ், ரிமஸ் என்ற பெயர்களும் தோன்றின என்று கருத இடமுண்டு. இவ்விதமாகச் சமயம், கலை, மொழி, எழுத்து, பழக்க வழக் கங்கள் முதலிய எல்லாவற்றிலும் பண்டை நாகரிக நாடுகள் எல்லாம் சிந்து சமவெளியையே ஒத்திருந்தன என்பது நம் உள்ளத்தை மகிழ்விக்கும் செய்தியாகும். எனவே இந்தியாவை உலகத்தாய் என்று கூறுவது எவ்வளவு பொருந்தும்!

———

5. தட்ச சீலத்தின் தொன்மை.

சிந்து சமவெளி நாகரிகம் மறைந்த பிறகு சரித்திர காலம் வரை இந்தியாவில், இலக்கியச் சான்றுகளின்படி வேத காலம், இராமாயண காலம், மஹாபாரத காலம் ஆகியவை சுமார் 1200 ஆண்டுகள் நிலவின என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. ஆனால் இக்காலங்களுக்குரிய புதைபொருள் சான்றுகள் அதிகம் கிடைத்தில. ஹாரப்பாவில் மட்டும் சுமார் கி. மு. 1500 அளவில் இந்தியாவில் புகுந்த ஆரியர்களது நாகரிகச் சின்னங்கள் என்று கருதப்படும் சில பொருள்கள் கிடைத்துள. இவை தவிர இந்த இருண்ட காலத்திற்குரிய சில பழம் பொருள்கள் சிந்து இராஜ்யத்தில் ஜூகார், ஜங்கார் என்னும் இடங்களில் கிடைத்திருக்கின்றன. மற்றும் வட இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் காலம் வரையறுக்கப்படாத பலவகைச் செம்புக் கருவிகள் சில இடங்களில் அகப்பட்டுள்ளன. இவையெல்லாம் ஹாரப்பா பண்பாட்டிற்குப் பிறகு ஆரியர்கள் இந்தியாவில் பரவிய பழங் காலத்துப் பொருள்களாகக் கருதப்படுகின்றன. இதிகாசங்களில் புகழ்பெற்ற அஸ்தினபுரம் முதலிய இடங்களை முறைப்படி அகழ்ந்து பார்த்ததில் சில சான்றுகள் கிடைத்துள. ஆனால் இவை இவ்விருண்ட காலத்தின் சரித்திரப் புனரமைப்புக்குப் போதிய சான்றுகள் ஆகா.

தட்ச சீலம்:

கி. மு. 3-ஆம் நூற்றாண்டுக்குச் சில நூற்றாண்டுகள் முற்பட்ட பழஞ் சின்னங்கள் கிடைத்துள்ள இடங்களுள் தட்ச சீலம் முதன்மையானது. மற்றும் வடமேற்கு எல்லைப்புற மகாணத்தில் உள்ள சார்சடா, பீகாரிலுள்ள இராஜக்கிரகம், பாடலிபுத்திரம், லௌரியா, வாரணாசி



தட்சசீலத்தில் புதை பொருள் ஆராய்ச்சி.

மாவட்டத்தில் உள்ள சாரநாத் முதலியவை ஏறக்குறைய இதனோடு ஒத்த பழைமையுடையவை என்று கருதப்படு கின்றன. தட்சசீலம் என்பது வடமேற்கு எல்லைப்புற மகாணத்தில் முற்காலத்தில் அமைந்திருந்த கிழக்குக் காந்தார இராஜ்யத்தின் தலைநகராக இருந்தது. கிரேக்கர்கள் அதை நன்கு அறிந்திருந்தார்கள். கி.மு. 326-இல் அலெக்சாந்தர் இந்தியாமீது படையெடுத்து வந்தபோது அது அரசியல் துறையிலும் கல்வித் துறையிலும் மிகவும் புகழ் பெற்று விளங்கியது. ஆகையால் அதன் பழைமையும் பெருமையும் சரித்திர காலத்தில் மிக முக்கியமானவை என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இருப்பிடம் :

தட்சசீலம் என்னும் ஊர் இப்பொழுது பாகிஸ்தானில் ராவல்பிண்டி மாவட்டத்தில் ஸெராய் கேலா என்னும் சிற்றூரின் அருகில் உள்ளது. தட்சசீலம் என்னும் இரயில் நிலையத்திலிருந்து சிறிது தொலைவில் அது அமைந்திருக்கிறது. சிந்து நதிக்கும், ஜீலம் நதிக்கும் இடையிலுள்ள மூரி மலை என்பது அதனருகில் காணப் படுகிறது. மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்குள் நுழையும் பெரிய வியாபார மார்க்கத்தில் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வரும் பெரு வழிகள் சந்திக்குமிடத்தில் அவ்வூர் அமைந்திருந்ததால் அது மிகவும் சிறப்புடைய பெரிய நகரமாய் விளங்கியது.

பழங் குறிப்புக்கள் :

இந் நகரைப் பற்றிய செவிவழிச் செய்திகளிலிருந்தும், இராமாயணம், பாரதம், புத்த ஜாதகங்கள் முதலியவற்றின்படியும், இது சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே

மிகப் புகழ் வாய்ந்திருந்தது என்பது தெரிகிறது. வால்மீகி இராமாயணத்தினுல், அது சட்டக் கல்விக்கு மிகவும் புகழ் பெற்ற இடம் என்றும், இராமனது தம்பியாகிய பரதன் தனது இரண்டு மக்களாகிய தட்சன், புட்கலன் என்பவர்களைத் தட்சசீலம்,* புட்கலாவதி என்னும் இடங்களுக்கு அரசராக்கினுன் என்றும் அறிகிறேம். பரதன் மகன் தட்சன் ஆண்டதால் அந் நகரம் தட்ச சீலம் எனப் பெயர் பெற்றது என்று இதனுல் தெரிகிறது. இராமாயண காலத்திற்கு மிகப் பிற்பட்ட பாரத காலத்தில், ஜனமேஜயன் என்னும் அரசன் அந் நகரை வென்று, தன் தந்தை பரீட்சித்தைக் கொன்ற தட்சகன் என்னும் பாம்பையும் அதன் இனம் முழுவதையும் கொல்வதற்கு அங்கே ஒரு கொடிய வேள்வி நடத்தினுன் என்றும் பாரதம் கூறுகிறது. அன்றியும் அது கல்விக்குப் பெயர் பெற்றிருந்ததாகவும், தௌமியர் என்னும் முனிவர் அங்கு ஒரு கலாசாலை நடத்தி வந்ததாகவும், பெரிய அரசர்களும் கூட அங்குக் கல்வி பயின்று வந்ததாகவும், அவ்விடம் கல்வி கற்றவர்கள் மிகச் சிறந்தவர்களாய் விளங்கி வந்ததாகவும், அந்நூல் கூறுகிறது. புத்தருடைய பழம் பிறவிகளைப் பற்றிக் கூறும் ஜாதகங்களும் தட்ச சீலத்தின் கல்விச் சிறப்பையும் அங்கிருந்த பேராசிரியர்களுடைய பெருமையையும் பற்றிக் குறிப்பிடுகின்றன. மேலும் புத்தர் தமது முற்பிறவியில் போதி சத்துவராய் இருந்த போது அங்குக் கல்வி கற்றதாகவும் ஒரு பிராமணனுக்குத் தன் தலையைத் தானமாகக் கொடுத்ததாகவும் கதைகள் வழங்குகின்றன. ஜைனர்கள் கூடத் தங்களுடைய முதற் கடவுளாகிய இடபதேவர் (ரிஷபதேவர்) பல்லாயிரம் ஆண்டுகளுக்கு

---

* தட்ச சிலம் என்பதற்குச் செதுக்கப்பட்ட கற்களால் ஆகிய நகரம் என்றும், பாம்பரசனுகிய தட்சகனது பாறை என்றும் பொருள் கூறுவாருமுளர்.

முன்பு தட்சசீலத்திற்குச் சென்று தங்கி இருந்ததாகக் கூறுகிறார்கள். இவ்வாறு பல வாயில்களால் தட்சசீலத்தின் தொன்மைக்குத் தக்க சான்றுகள் கிடைத்திருக்கின்றன. எனவே அதனுடைய தோற்றக் காலத்தையும் ஆட்சிக் காலத்தையும் அறுதியிட்டுக் கூறுவது எளிதாமோ ?

அகழ்தல் வேலைகள் :

இந்தியாவின் தொல்பொருளியல் தலைவராக விளங்கிய சர் ஜான் மார்ஷல் என்னும் ஆராயச்சி வல்லுநர் 1913 முதல் 1934 வரை இந்திய அரசாங்கத்தின் கட்டளைப்படி தட்சசீலத்தில் நிலத்தை அகழ்ந்து விரிவான ஆராய்ச்சிகள் செய்து அவற்றைப் பற்றி மூன்று பெரிய நூல்களை எழுதியிருக்கிறார். இவ் வாராய்ச்சிகளால் இதுவரையில் நமக்குத் தெரியாமல் மண்ணுள் மறைந்து போயிருந்த 1000 வருட காலத்தின் சரித்திரம் வெளிப்பட்டிருக்கிறது. இந்த 1000 வருட காலத்தில் வடமேற்குப் பகுதியில் ஒருவர் பின் ஒருவராக வந்து ஆட்சி செலுத்திய பல வமிசத்தவர் வரலாறு அடங்கியிருக்கிறது. அவர்களுள் பாரசீகர் (கி. மு. 6–ஆம் நூற்றாண்டு), கிரேக்கர் (கி. மு. 4–ஆம் நூற்றாண்டு), மௌரியர் (கி. மு. 3–ஆம் நூற்றாண்டு), பாக்டிரியர் (கி. மு. இரண்டாம் நூற்றாண்டு), சித்தியர் (கி. மு. முதலாம் நூற்றாண்டு), குஷாணர் (கி. பி. முதல் நூற்றாண்டு), ஹூணர் (கி. பி. இரண்டு முதல் நான்கு நூற்றாண்டுகள்) ஆகியோர் ஆண்டதற்குரிய அறிகுறிகள் அகப்பட்டுள்ளன.

கண்டுபிடிப்புகள் :

சர் ஜான் மார்ஷல் சுமார் 12 சதுர மைல் பரப்பில் இருக்கும் பல மேடுகளை முறையாக அகழ்ந்து பார்த்ததில்

அங்குப் பல வமிசத்து அரசர்கள் கட்டிய கோட்டைகள், பல நாகரிகங்களின் அறிகுறிகள், கோயில்கள், அரண்மனைகள், மடங்கள், ஸ்தூபிகள், வீடுகள் முதலியவற்றைக் கண்டார். அன்றியும் பல சிற்பங்கள், கல்வெட்டுக்கள், படைக்கலங்கள், அணிகலன்கள், நாணயங்கள் முதலியவையும் கிடைத்தன. இதிலிருந்து தட்சசீலம் பன்முறை பகைவராலும், பூகம்பத்தாலும் பிற காரணங்களாலும் அழிக்கப்பட்டதென்றும், ஆயினும் மீண்டும் மீண்டும் அங்கே நகரம் அமைக்கப்பட்டதென்றும் அறிகிறோம். இறுதியாக அந் நகரம் ஹூணர்களால் அடியோடு அழிக்கப்பட்ட பிறகு மீண்டும் கட்டப்படவில்லை. கி. பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியாவில் பற்பல விடங்களுக்கும் சென்று பார்த்த சீன யாத்திரிகராகிய **பாஹியான்** என்பவர் அங்குச் சென்றபோது அந் நகரின் அழிபாடுகளைத்தான் கண்டார் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேடுகளின் கீழ் :

தட்சசீலம் இருந்த இடத்தில் மூன்று பெரிய மண் மேடுகளை மார்ஷல் கண்டார். அவற்றின் பெயர் **பீர்மேடு**, (Bhir mound) **சிர் காப், சிர் சுக்** என்பவை. இம் மேடுகள் தான் மண் மூடிப் போன பழைய நகரங்களின் இருப்பிடங்கள். இவற்றுள் பீர்மேடு என்பது மிகப் பழமையானது. இந்த மேட்டைத் தோண்டிப் பார்த்த போது மூன்று அல்லது நான்கு வமிசத்திற்குரிய நகரங்கள் அதனடியில் தென்பட்டன. இந் நகரங்களின் அமைப்புக்கள் ஒரே மாதிரியாக இல்லை. அவற்றிலுள்ள வீடுகள் உடைந்த கற்களையும் மண்ணையும் கொண்டு கட்டப்பட்டவை. வீடுகளின் கூரைகளைத் தாங்குவதற்குக் கற்களாலும் மண்ணாலும் ஆகிய தூண்கள் நிறுத்தப்பட்

டிருந்தன. வீட்டுக் கழிவு நீர் தேங்குவதற்கு ஆழமான குழிகள் செய்து அவற்றுள் ஒன்றின்மேல் ஒன்ருகப் பல ஜாடிகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த நகர அழிபாடு களிலிருந்து அளவற்ற நகைகளும், நன்கு செதுக்கப்பட்ட இரத்தினங்களும், ஆயிரத்திற்கு மேற்பட்ட வெள்ளிக் காசுகளும், மற்றும் பல பொருள்களும் கிடைத்தன. இந் நகரங்களின் காலம் ஏறக்குறைய கி. மு. 500 முதல் 200 வரை என்று கூறலாம். இவை மௌரியர்களுக்கு முற் பட்ட காலத்தையும் மௌரியர் காலத்தையும் சேர்ந்தவை.

சிர்காப்:

சிர்காப் என்னுமிடத்தில் கி. மு. 2ஆம் நூற்ருண்டில் கட்டப்பட்ட ஒரு கோட்டை இருந்தது. அதைக் கட்டிய வர்கள் சாகர்கள், பார்த்தியர்கள், குஷாணர்கள் முதலா ஞேர். கி. மு. முதலாம் நூற்ருண்டில் பார்த்தியர்கள் அந் நகரத்தின் வட பகுதியைக் கைவிட்டு வந்து அதைத் தெற்கே விரித்துக் கட்டினுர்கள். இந் நகரம் 4500 கெஜம் சுற்றளவுள்ளது. மதில்களின் நடுவே ஆங்கங்கே கொத்தளங்கள் கட்டப்பட்டிருந்தன. இப் பகுதியைத் தோண்டிப் பார்த்த போது நன்கு அமைக்கப்பட்ட நகரம் ஒன்றும், இருபுறமும் உயர்ந்த மதில்களை உடைய வீடு களைக் கொண்ட நீண்டதெருவொன்றும் தெரிந்தன. ஒரு அரண்மனையும் அருகே கண்டுபிடிக்கப்பட்டது. வீடுகள் எல்லாம் பல விதமாக, முற்றங்களுடனும் அறைகளு டனும் அமைந்திருந்தன. கட்டிடங்களில்அழகான வேலைப் பாடுகளும் காணப்பட்டன. இங்கிருந்த கட்டிடங்கள் ஆறு வகையானவை என்றும், அவற்றுள் மிக அடியிலி ருந்த இரண்டும் இந்தோ–கிரேக்கர் காலத்தவை என்றும் நம்பப்படுகின்றன. இங்கும் தங்கம், வெள்ளி முதலிய வைகளாலான நகைகளும் பாத்திரங்களும் பல காலத்

திற்குரிய நாணயங்களும் கிடைத்தன. நாணயங்கள் கிரேக்கர்கள், சித்தியர்கள், பார்த்தியர்கள், குஷாணர்கள் முதலியவர்களுடைய காலத்தைச் சேர்ந்தவை. இந்த நாணயங்களிலிருந்து இது வரையில் வரலாற்றில் தீராதிருந்த ஓர் ஐயம் தீர்க்கப்பட்டுவிட்டது. அஃது என்னவென்றால் குஷாணர்களுள் கனிஷ்கர்களை விடக் காட்பைசஸ் வழிவந்தவர்களே முந்தியவர்கள் என்பது. இங்குக் கிடைத்த மட்பாண்டங்கள் பீர்மேட்டில் கிடைத்தவற்றைவிட அதிக அழகுடையவையாய் மூக்கு, கைப்பிடி, பீடம் முதலியவற்றுடன் இருக்கின்றன.

பௌத்தச் சின்னங்கள் :

இங்கிருந்த கோட்டைக்குள் ஒரு பௌத்தத் தூபமும் மடமும் கண்டுபிடிக்கப் பட்டன. அவை அசோகனுடைய மகன் குணாளன் அங்கு ஆண்டபோது கட்டப்பட்ட நினைவுக் கட்டிடங்கள் என்று கருதப்படுகின்றன. அந்தத் தூபம் ஒரு முக்கோண வடிவான உயர்ந்த பீடத்தின்மேல் மூன்று அடுக்குகளாகக் கட்டப்பட்டிருந்தது. அதன் மேற்புறம் ஓர் உயர்ந்த வட்டமான விதானம் இருந்தது. அஃது ஆறு அல்லது ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டும் இருந்தது. அருகிலிருந்த மடம், நடுவில் ஒரு முற்றத்தையும், சுற்றிலும் வரிசை வரிசையான அறைகளையும் தாழ்வாரத்தையும் கொண்டிருந்தது. வேறு இரண்டு மடங்களும் பிறகு அங்கே கண்டுபிடிக்கப் பட்டன.

சிர்சுக் :

சிர்காப்பிலிருந்த நகரமும் கோட்டையும் கி. பி. முதலாம் நூற்றாண்டளவில் கைவிடப்பட்டு ஒரு மைல் வடக்கேயுள்ள சிர்சுக் என்னுமிடத்திற்கு மாற்றப்பட்டன.

இதுதான் இறுதியான தட்சசீலம் என்பது. இங்குக் குஷாண அரசர் கனிஷ்கர் ஒருபுது நகரத்தைக் கட்டினார். அஃது இன்னும் முற்றிலும் அகழ்ந்து ஆராயப்படவில்லை. இருப்பினும் அவ்விடத்தில் மண்ணாலும் கல்லாலும் கட்டப்பட்ட கோட்டையும், அரைவட்டமான கொத்தளங்களும், அவற்றிலிருந்து பகைவர்மீது அம்புகளை எய்வதற்கான ஏப்புழைகளும் (அம்புத் துவாரங்கள்) இருந்தன என்பது தெரிகிறது. இதுதான் இறுதியாக ஹூணர்கள் கையால் அழிந்தது.

தர்மராஜிக ஸ்தூபி :

இந்த மூன்று மேடுகளையும் தவிர்த்துத் தட்சசீலத்தின் அருகில் ஏராளமான பௌளத்தத் தூபிகளும், மடங்களும் காணப்பட்டன. அவற்றுள் பீர்மேட்டுக்குக் கிழக்கே அசோகரால் கட்டப்பட்ட தர்மராஜிகஸ்தூபி என்பது குறிப்பிடத்தக்கது. அதனுடைய விதானம் ஒரு பெரிய பீடத்தின்மேல் வட்ட வடிவமாக அமைந்திருந்தது. நடுவிலிருந்து நான்கு பக்கங்களிலும் கனமான சுவர்களும் வெளிப்புறமாகச் சுண்ணாம்புப் பாறைகளில் செதுக்கப்பட்ட சிலை உருவங்களும் காணப்பட்டன. அதைச் சுற்றிலும் சிறு சிறு தூபிகளும் கோயில்களும் இருந்தன. அவற்றிலிருந்து விலையுயர்ந்த கற்களும் தங்கம், வெள்ளி நகைகளும் நாணயங்களும் கிடைத்தன. சிர்சுக்கின் அருகிலுள்ள மலையடிவாரத்தில் கி. பி. 2-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட பலபௌளத்த மடங்கள் காணப்பட்டன. அப் பௌளத்த மடங்களில் மிக அழகான சுண்ணாம்பினால் ஆகிய சிலைகள் அழியாமல் அப்படியே இருந்தன. மற்றும் பல ஸ்தூபிகளும் கோயில்களும் அங்கே இருந்தன. சிர்காப்பின் அருகில் பாரசீகர்களுடைய கோயில் ஒன்று அமைந்திருந்தது. அது கிரேக்கர்

களுடைய கோயில் அமைப்புமுறையைப் பின்பற்றிக் கட்டப்பட்டது.

பல்கலைக் கழகம் :

அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது தட்ச சீலத்தை அம்பி என்னும் அரசன் ஆண்டுவந்தான். அலெக்சாந்தர் அவனை வென்று அந்நகரத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டான். அப்பொழுது அங்குத் தத்துவக் கலை மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டு வந்தது என்பதை அவன் நேரில் கண்டு மகிழ்ந்தான். அவன் இந்தியாவை விட்டு அகன்றவுடன் **செலூகஸ் நிகேட்டார்** என்பவனை அப்பகுதிக்குத் தனது பிரதிநிதியாக நியமித்தான். ஆனால் அவனை, மௌரியப் பேரரசைத் தோற்றுவித்த சந்திரகுப்த மௌரியன் தோற்கடித்து அப்பகுதியைக் கைப்பற்றினான். அவனுடைய மகன் பிந்துசாரன் ஆட்சியில், பிந்துசாரனுடைய மகன் அசோகர் தட்ச சீலத்தில் சிறிதுகாலம் அரசப் பிரதிநிதியாய் இருந்தார். அசோகருக்குப் பிறகு அவர் மகன் குணாளனும் அங்கு ஆட்சி செலுத்தினான். இவர்களுடைய காலத்திலெல்லாம் தட்ச சீலம் ஒருசிறந்த பல்கலைக் கழகத்தைக் கொண்டு விளங்கியது.

இறுதி :

இங்ஙனம் ஏறத்தாழ அக்கால உலக முழுதும் தனது அறிவாட்சியைச் செலுத்திவந்த தட்ச சீலப் பல்கலைக் கழகமும் அதன் கட்டிடங்களும் கி. பி. 3-ஆம் நூற்றுண்டளவில் அந்நியரால் தாக்கப்பட்டு அழிந்தன. முதலில் படையெடுத்த யூஹி என்னும் கூட்டத்தார் அங்கிருந்த கட்டிடங்களை அநேகமாக அழித்துவிட்டார்கள். எஞ்சியிருந்தவற்றைப் பின்னர் வந்த ஹூணர்கள்

மண்ணோடு மண்ணாக்கி மாய்த்துவிட்டார்கள். குஷாணர் ஆட்சிக் கால இறுதியில்தான் தட்ச சீலத்துக்கு இக்கதி நேர்ந்தது. பின்னர் 17 நூற்றாண்டுகள் வரை அதன் மாண்புகளெல்லாம் மண்ணுக்குள் மறைந்து போய் மக்கள் மனத்தை விட்டே நீங்கிவிட்டன. அண்மையில் தான் ஆராய்ச்சியாளர்கள் அதன் மறைந்த மாண்புகளை நமக்கு மீட்டுத் தந்தார்கள். அவர்களது தொண்டுக்கு நமது உளமார்ந்த நன்றி உரித்தாகுக!

---

6. மௌரிய நாகரிகம்

தட்ச சீலத்தில் மௌரிய காலத்திய ஸ்தூபம் ஒன்றும் அதைச் சேர்ந்த மடங்களும் கண்டுபிடிக்கப் பட்டன என்று முன்பே பார்த்தோம். அசோகருக்குப் பின் வந்த சில அரசர்களும் அசோகரைப் போலவே புத்த மதத்தைத் தழுவியவர்களாகையால், அவர்கள் அம் மதத்தைப் பரப்புவதற்கு நாடெங்கும் தூபங்களையும், மடங்களையும் நிறுவினார்கள் என்பது வரலாறு அறிந்த உண்மை. சந்திரகுப்த மௌரியரது பெயரன்தான் அசோகர் என்பதும், அவ்வழி வந்தவர்கள் மௌரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. இவர்கள் காலத்தில் சமயமும் கலைகளும் கல்வியும் போற்றப்பட்டு மிக உயர்ந்த நிலையிலிருந்தன. அவர்கள் உருவாக்கிய கலைகள், சிற்பங்கள், கட்டிடங்கள் முதலியவையே பொதுவாக மௌரிய நாகரிகம் எனப் படுகின்றன. இந்த நாகரிகத்தின் அறிகுறிகளான பழம் பொருள்கள் ஆராய்ச்சியாளர்களால் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

இராஜக்கிரகம் :

இராஜக்கிரகம் (இப்போது இ ரா ஜ் கி ர்) அல்லது கிரிவிரஜம் என்பது பண்டைக் காலத்தில் மகத நாட்டின் தலைநகராக இருந்தது. இராஜக்கிரஹம் என்பதற்குப் பொருள் அரசன் வாழும் இடம் என்பது. கிரிவிரஜம் என்றால் குன்றுகளால் சூழப்பட்ட நகரம் என்று பொருள். மகாபாரத காலத்தில் ஜராசந்தன் என்னும் வலிமை வாய்ந்த அரசன் அங்கு ஆண்டுவந்தான் என்றும், அவனைப் பாண்டவர்களுள் மிகவும் வலியவனாகிய வீமன் வென்றான் என்றும் பாரதம் கூறுகிறது. புத்தர் காலத்தில் பிந்துசாரன் (கி. மு. 543–491), அஜாத சத்ரு (கி.மு.491–459) என்னும் இரண்டு புதிய வமிசத்து அரசர்கள் அங்கு ஆட்சி செலுத்தி, அதிக வலிமையும் புகழும் பெற்று, அண்டை நாடுகளையெல்லாம் வென்றார்கள். அஜாத சத்ரு இறந்தபிறகு மகத ராஜ்யத்தின் தலைநகரம் பாடலி புரத்திற்கு (பாட்னா) மாற்றப்பட்டது. எனினும் இராஜக் கிரஹம் பௌத்த, ஜைன சமயங்களுக்குப் பெயர் பெற்ற இடமாய் விளங்கி வந்தது. ஜைனர்கள் இன்றும் அதைத் தங்கள் புண்ணியத் தலமாகக் கருதுகிறார்கள்.

இருக்குமிடம் :

பாடலிபுரத்திலிருந்து 60 கல் தென்கிழக்கே, குன்று களுக்கு இடையேயுள்ள ஒரு பெரிய பள்ளத்தாக்கிலும் அதற்கு வெளியிலும் இராஜக்கிருஹத்தின் அழிபாடுகள் காணப்படுகின்றன. அங்கு அமைக்கப்பட்டுள்ள பழைய அரண்கள் பிந்துசாரனாலும் அஜாத சத்ருவாலும் கட்டப் பட்டவை என்று கருதப்படுகின்றன. அவர்களுக்குப் பிறகு வலிமையுள்ள அரசர்கள் அங்கு இல்லாததால் அரண்கள் புதிதாகக் கட்டப்படவில்லை. அதனுடைய

வெளிப்புற அரண், மலைகளின் மேல் 25 மைல் சுற்றளவிற்கு, ஏறத்தாழ 16 அடி கனமாகவும் 12 அடி உயரமாகவும் கட்டப்பட்டிருக்கிறது. மலைகளுக்கிடையே உள்ள கணவாயில் கோட்டை வாயில்கள் உள்ளன. இந்த அரணுக்கு நடுவில் அழிந்துபோன நகரமும் அதனுடைய சுற்றுச் சுவரும் இருக்கின்றன. மற்றக் கட்டிடங்களும் அருகில் இடிந்து கிடக்கின்றன. இவற்றின் மேல் இப்பொழுது புதர் மூடியிருக்கிறது. பள்ளத்தாக்குக்கு வெளியே வடபுற வாயிலுக்கப்பால் புதிய கோட்டை என்று சொல்லப்படும் ஒரு கட்டிடம் அழிவுற்றுக் கிடக்கின்றது. அது அஜாத சத்துருவினால் கட்டப்பட்டதாகும். இங்கே இருந்த நகரரண் ஒன்பது ஏக்கர் பரப்பின் மேல் அமைந்தது.

அந்நியர் குறிப்பு :

இந்தியாவிற்கு நான்காம் நூற்றாண்டில் வந்த பாஹியான், ஏழாம் நூற்றாண்டில் வந்த யுவான் சுவாங் என்னும் சீன, பௌத்த யாத்திரிகர்கள் இராஜக்கிருஹத்தை நேரில் பார்த்து, அங்கிருந்த கட்டிடங்களைப் பற்றிக் குறிப்புக்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். புத்தர் அவ்விடத்தில் சிலகாலம் வாழ்ந்து தம் மதத்தைப் பரப்பியதாகக் கூறப்படுகிறது. அங்கிருந்த பல மடங்களில் அவர் வாழ்ந்து வந்தாராம். புத்தர் இறந்த உடனேயே அவ்விடத்தில் ஒரு புத்த சங்கம் கூடியது என்றும், அச்சங்கம் அங்கிருக்கும் சில குகைகளிலும் குடவரைக் கோயில்களிலும் (மலையில் குடைந்து செய்யப்பட்ட குகைக் கோயில்கள்) கூடியது என்றும் கருதப்படுகிறது. அஜாத சத்துருவும் அசோகரும் கட்டிய தூபிகள் இப்பள்ளத்தாக்கிற்கு வெளியே காணப்படுகின்றன.

மணியார் மடம் :

பள்ளத்தாக்கினுள் **மணியார் மடம்** என்று சொல்லப் படுகின்ற ஒரு வட்ட வடிவமான செங்கற் கட்டிடம் இருக்கிறது. அஃது அடிக்கடி விரித்துக் கட்டப்பட்டும் மாற்றியமைக்கப்பட்டும் வந்திருக்கிறது. அக்கட்டிடம் தோன்றுவதற்கு முன்பே அஃது இருந்த இடத்தில் கருங்கற் கட்டிடங்கள் இருந்ததற்கு அடையாளங்கள் தெரிகின்றன. அக்கட்டிடத்தின் வெளிப் புறம் சுற்றிலும் பிறைகளில் சுண்ணும்பினுல் செய்யப்பட்ட இந்து சமய தெய்வச் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன.

மணிநாகன் கோயில் :

அதனடியிலிருந்த ஒரு மேடையிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த ஒரு கருங்கற் சிலை கண்டெடுக்கப்பட்டது. அது **மணிநாகன்*** என்னும் பெய ருடைய ஒரு பாம்புத் தெய்வத்தின் சிலையாகும். மகா பாரதத்திலேயே மணிநாக தெய்வத்தின் கோயில் இராஜக் கிருஹத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்பட் டுள்ளது. அங்குக் கிடைத்த ஜாடிகள், படம் விரித்த பாம் பின் தலையைப் போன்ற பல மூக்குகளை உடையனவாய் இருந்தன. அங்குநாகராஜனை (பாம்பரசனை) வழிபடுப வர்கள் இன்றும் இத்தகைய ஜாடிகளையே உபயோகிக் கிறார்கள். புதிய இராஜக் கிரஹத்தில் மூன்று வெவ்வேறு காலங்களுக்குரிய செங்கற் கட்டிடங்கள் காணப்படு கின்றன. மேலும் அங்குக் கி. மு. இரண்டாம் நூற்றுண்

---

*மணியார் மடம் என்று அக்கோயிலுள்ள இடத்தில் பிறகு தோன்றிய மடத்திற்குப் பெயர் ஏற்பட்ட காரணம் இதனுல் விளங்கும். மணியரவம் என்பதே மணியார் என்று மருவி யிருக்கவேண்டும்.

டைச்சேர்ந்த களிமண்ணில் எழுதப்பட்ட பட்டயம் ஒன்று கிடைத்தது. அதற்குக் கீழே இன்னும் அகழ்ந்து ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை. இராஜக்கிரஹத்தில் ஆராய்ச்சியாளர் செய்ய வேண்டிய வேலை இன்னும் அதிகம் இருக்கிறது.

பாடலிபுத்திரம் :*

கி. மு. 5-ஆம் நூற்றுண்டில் இராஜகிரஹத்திற்குப் பிறகு மகத நாட்டின் தலை நகராக்கப்பட்ட பாடலிபுத்திரம் இன்றளவும் அரசியல் முக்கியத்துவம் உடையதாய் விளங்கி வந்திருக்கிறது. மௌரியர்கள் ஆட்சிக் காலத்தில் (கி. மு. 4 முதல் 2 நூற்றுண்டு வரை) அது இந்திய ஏகாதிபத்தியத்தின் தலை நகரமாய் விளங்கியது. சந்திரகுப்த மௌரியருடைய பேரரசில் (கி. மு. 322—298) கிரேக்கத் தூதுவராகப் பாடலிபுத்திரத்திற்கு வந்த மெகாஸ்தனீஸ் என்பவர் அந்நகரின் பெருமையைப் பற்றி விரிவாகக் கூறி இருக்கிருர். அது கங்கை நதியும் சோன் நதியும் கூடுமிடத்தில் ஒன்பது மைல் நீளமும் ஒன்றரை மைல் அகலமும் உடையதாய், மரப் பலகைகளால் செய்யப்பட்ட மதில்களையும், அவற்றினுள் ஆங்காங்கே ஏப் புழைகளையும் பெற்றிருந்தது. அதைச் சுற்றி ஓர் அகழியும் மதிலின் மேல் 570 கோபுரங்களும் (காவற் கூடங்கள்) மதிலில் 64 வாயில்களும் இருந்தன. இந் நகரின் அழிபாடுகள் இக்காலத்திய பாட்னுவின் தென் எல்லையில் இரண்டிடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

---

* *தமிழ் நாட்டில் உள்ள கடலூர் (தென் ஆர்க்காடு) தென்பாடலி என்னும் பெயருடன் விளங்கியதென்று தேவாரமும் வரலாறும் கூறுகின்றன. இது திருப்பாதிரிப்புலியூர் என்றும் பெயர் பெறும். இங்குள்ள தெய்வத்திற்குப் பாடலேசுரர் என்று பெயர்.*

கண்டுபிடிப்புகள் :

ஓரிடத்தில் 150 அடி சதுரமான பரப்பில் கி. பி. 7-ஆம் நூற்றுண்டிற்குரிய (ஹர்ஷர் காலம்) இடிந்த செங்கற் சுவர்கள் பூமிக்கு ஏழு அடி ஆழத்தில் இருந்தன. அதனடியில் ஓரடி கனமான கரியும் சாம்பலும் படிந்திருந்தன. அதில் இருந்த சில மேடுகளில் மௌரியக் கலைக்கு அறிகுறியான உடைந்த பளபளப்பான கற்கள் காணப்பட்டன. இத்தகைய மேடுகள் வரிசைக்குப் பத்தாக எட்டு வரிசையாய் இருந்தன. ஆகையால் இவ்விடத்தில் எண்பது தூண்களால் தாங்கப் பட்ட மௌரியர் காலத்து மண்டபம் ஒன்று இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அதனுடைய மேற்கட்டி ம்முழுவதும் மரத்தால் செய்யப்பட்டு இருந்ததால் பின்னர் அது தீயினுல் எரிந்து அழிந்து விட்டிருக்க வேண்டும். அதனுடைய கரியும் சாம்பலும் தான் கீழே இருந்தன. இந்த மண்டபத்திற்குத் தெற்கே மரத்தால் செய்யப்பட்ட ஏழு மேடைகள் இருந்தன. ஒவ்வொரு மேடையும் முப்பதடி நீளம், ஐந்தடி அகலம், நாலரை அடி உயரம் இருந்தது.

குப்தர் காலக் கட்டிடம் :

மற்ருேர் இடத்தில் அகழ்ந்த போது குப்தர் காலத்துச் செங்கல் தளத்தின் கீழ் மரத்தால் செய்யப்பட்ட ஒரு கட்டிடம் இருந்தது தெரிய வந்தது. அது பதினைந்தடி உயரம், பதினுன்கடி அகலம் உடைய ஒரு நீண்ட நடை பாதை போல் அமைந்திருந்தது. சுமார் 250 அடி நீளத்துக்கு மேல் தோண்டிப் பார்த்தும் அதன் முடிவே தெரியவில்லை. அதே போல மரத்தால் கட்டப்பட்ட நாற்பது அடி நீளமுடைய கழிவு நீர்க்கால்

ஒன்று அதன் நடுவில் குறுக்கே அமைக்கப்பட்டிருந்தது. இது மெகாஸ்தனீஸ் கூறிய பாடலிபுத்திரத்து அரணின் ஒரு பகுதியாக இருந்திருக்கக் கூடும் என்று கருதுகிறார்கள். இந்த இடத்திலிருந்து அரை மைல் கிழக்கில் இது போன்ற மற்றொரு மரக்கட்டிடமும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது.

பழஞ் சின்னங்கள் :

இக்காலத்தில் பாட்னா நகருக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்காக ஆழமாகப் பல இடங்களில் தோண்டிய போது சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட சிலைகளும் வேறு சில பழஞ் சின்னங்களும் கிடைத்துள்ளன. இவற்றின் காலம் இன்னும் சரியாகத் தெரியவில்லை. இவை சிற்பச் சிறப்பின் அடிப்படையில் பார்க்கும்போது மௌரியர், சுங்கர், குப்தர் காலத்திற்குரியவை என்று தெரிகிறது. பாடலிபுத்திரத்தில் பழம் பொருள் ஆராய்ச்சி இன்னும் அதிகமாக நடைபெற வேண்டியுளது. ஆற்றின் கரையில் நகரம் அமைந்திருப்பதால் அகழ்வது மிகக் கடினம். கிடைத்த பொருள்களை மட்டும் விரிவாக ஆராய்ந்தால் மேலும் பல உண்மைகள் புலப்படும் என்பதும் மறைந்த மாண்புகள் வெளிப்படும் என்பதும் உறுதி.

தூபங்களை அகழ்தல் :

லௌரியா என்னுமிடத்திலுள்ள அசோகத் தம்பத்துக்கு ஒரு மைல் தென்மேற்கே 82 அடி உயரமும் 1500 அடி சுற்றளவும் உள்ள மற்றொரு மேடு இருந்தது. அதைத் தோண்டிய போது பல தளங்களையுடைய ஒரு தூபம் காணப்பட்டது. அது பிற்காலத்தில் மாற்றி

யமைக்கப்பட்டதாகத் தோன்றியது. அதனுடைய நடுப் பகுதியில் இருந்த மண்ணை அப்புறப்படுத்திய போது கி. மு. முதல் நூற்றாண்டிற்குரிய சுட்ட களிமண் சிலைகள், முத்திரைகள், செப்புக் காசுகள் முதலியவை அகப்பட்டன. பதினான்கு அடி ஆழத்தில் அழியாமல் அப்படியே இருந்த 12 அடி உயரமுள்ள ஒரு சிறிய தூபி கிடைத்தது. அதனருகில் ஒரு சிறிய செப்புப் பாத்திரமும் அதனுள் ஒரு ஏடும் (பத்திரமும்) இருந்தன. அவ்வேட்டில் புத்த சமயச் சார்பான வாசகம் ஒன்று எழுதப்பட்டிருந்தது. அவ்வெழுத்து கி. மு. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **பிராமி** எழுத்தாகும்.

சாரநாத்:

காசி மாவட்டத்திலுள்ள சாரநாத் என்னுமிடத்தில் இருந்த அழிபாடுகள் பழம் பொருள் ஆராய்ச்சியாளர் கருத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை. ஏனெனில் அது புத்தர் தனது முதல் உபதேசத்தைச் செய்த இடம் அல்லவா? இந்த இடத்தில் முதலில் அகழ்ந்தவர்கள் சிறிது சேதம் உண்டாக்கி இருப்பினும் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்வதற்குரிய வாய்ப்பு அதிகமிருந்தது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு அகழ்தல் வேலை தொடங்கிற்று. இங்கிருந்த **தர்ம ராஜிகத் தூபம்** 1794-இல் அழிக்கப்பட்டு அதிலிருந்த கற்களெல்லாம் வேறு கட்டிடங்கள் கட்டுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டன. அப்போது பச்சைச் சலவைக் கல்லினால் செய்யப்பட்ட புத்தச் சின்னம் அடங்கிய பெட்டி ஒன்று, பெரிய வெண்மையான மாக்கல்லினால் செய்யப்பட்ட மற்றொரு பெட்டிக்குள்ளிருந்து எடுக்கப்பட்டது.

அசோகத் தூபம் :

இந்தத் தூபம் முதலில் அசோகரால் கட்டப்பட்டது. அதனுடைய பீடம் வட்டமாகவும் முக்கோண வடிவமான செங்கற்களாலும் கட்டப்பட்டது ஆகும். அது கி.பி. 12-ஆம் நூற்றுண்டுவரை பன்முறை பெரிதாக்கித் திருத்திக் கட்டப்பட்டது. அதனருகில் ஒரு செங்கல்லால் கட்டப்பட்ட 200 அடி உயரமுள்ள கோயில் இருந்தது. இதைப் பற்றி யுவான் சுவாங் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறுர். இது குப்தர் காலத்தில் தோன்றியது. இதன் சதுரமான பீடத்தில் மூன்று புறங்களில் முக்கோண வடிவமான கோயில்களும், நான்காம் பக்கத்தில் மேலே ஏறிச் செல்வதற்குரிய படிகளும் இருந்தன. அருகில் பல மடங்கள் அல்லது விகாரங்கள் காணப்பட்டன. அவற்றின் காலம் நான்காம் நூற்றுண்டு முதல் பனிரண்டாம் நூற்றுண்டு வரையாகும். சாரநாத்திலுள்ள கோயில்களும் மடங்களும் ஓர் ஒழுங்கான அமைப்பின்படியன்றி இங்குமங்குமாகச் சிதறிக் கிடந்தன.

தமேக் தூபம் :

சாரநாத்திலுள்ள மற்ருெரு குறிப்பிடத் தகுந்த கட்டிடம் தமேக் தூபம் என்பது. அது 93 அடி விட்டமும் 143 அடி உயரமும் உருளை வடிவமும் உடையது; கருங்கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டது. அதன் அடிப்பகுதியிலுள்ள கருங்கல்லில் நுட்பமான பூவேலைப்பாடுகள் இருக்கின்றன. இதிலிருந்து அரை மைல் தெற்கே செங்கல்லால் கட்டப்பட்ட 80 அடி உயரமுள்ள மற்ருெரு தூபம் இருக்கின்றது. அதன்மேல் அக்பர் சக்ரவர்த்தியால் கட்டப்பட்ட கோபுரம் இருக்கிறது. அவருடைய தந்தை ஹுமாயூன் அங்கு வந்ததன் நினைவாக அது கட்டப்பட்டதாகும்.

சிற்பச் சிறப்பு:

சாரநாத்தில் அளவற்ற கற்சிலைகள் அகப்பட்டுள்ளன. இப்பொழுது அங்கு உடைந்து காணப்படும் அசோகத் தம்பத்தின்மேல் இருந்த சிம்ம சிகரமே இப்பொழுது நம் இந்திய அரசாங்கத்தின் சின்னமாகவிளங்குகின்றது. குஷாணர் காலத்திய போதி சத்துவருடைய மாபெரும் சிலையும், மற்றும் குப்தர் காலத்தைச் சேர்ந்த புத்த உருவங்கள், போதிசத்வர் சிலைகள் முதலியவையும் ஏராளமாக அங்குக் கிடைத்துள்ளன. குப்தர் காலத்துச் சிற்பச் சிறப்புக்கு மிக உயர்ந்த சான்றாக விளங்கும் இடம் சாரநாத் தான் என்பது குறிப்பிடற்பாலது.

சாஞ்சி:

மத்திய இந்தியாவில் சாஞ்சி என்னுமிடத்தில் முதலில் கட்டப்பட்ட தூபமும், மௌரியப் பேரரசர் அசோகருடையதே. முதலில் அது இப்பொழுது அவ்விடத்திலுள்ள தூபத்தில் பாதி குறுக்களவு உடையதாய் இருந்தது. முதலில் கட்டப்பட்ட தூபம் இப்பொழுதுள்ள தூபத்தின் மத்தியில் மறைந்து கிடக்கிறது. செங்கற்களினால் கட்டப்பட்ட வெளிப்புறத் தூபத்தை அகழ்ந்த போது உள்ளே இருந்த அசோகத் தூபம் சேதமடைந்து விட்டது. அதனுடைய குடை போன்ற விதானத்தின் பகுதியிலிருந்து சில கற்கள் மட்டும் கிடைத்தன. இதற்கருகில் தென்புற வாயிலின் பக்கத்தில் அசோகத் தம்பம் ஒன்றும் நிற்கிறது. ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் அசோகர் கட்டிய செங்கல் தூபத்தைச் சுற்றிக் கருங்கற்களால் ஆகிய பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டு மேல் விதானமும் அமைக்கப்பட்டது. அதுவே இப்பொழுது 120 அடி குறுக்களவும் 54 அடி உயரமும் உள்ள

தூபமாய்க் காட்சியளிக்கிறது. இந்தத் தூபத்தின் மேல் தளத்தில் ஏறுவதற்கு இரண்டு படி வரிசைகள் கட்டப் பட்டன. விதானத்தின் மேற் புறத்திலும் மேல் தளத் திலும் சுண்ணும்பினல் செய்யப்பட்டு வர்ணம் தீட்டப் பெற்ற அலங்காரச் சிற்பங்கள் இருந்தன. தூபத்தின் ஒரு சதுரமான பீடத்தின் மேல் மூன்று குடைகள் சிகர மாக அமைந்திருந்தன. தூபத்தைச் சுற்றிவரும் பாதை பதினேரடி உயரமாய் உள்ள கல்லாலாகிய சுற்றுச் சுவருக்கிடையே அமைக்கப்பட்டிருந்தது.

தோரண வாயில் :

கி. மு. முதல் நூற்ருண்டில் இதைச் சுற்றிச் சுங்க அரசர்களால் நாற்புறமும் அற்புதமான சிற்பச் சிறப் புடைய கருங் கல்லாலாகிய தோரண வாயில் கள் நிறுவப் பட்டன. இந்த வாயில்கள் பார்ப்போர் மனதை மருட்டும் தன்மை யுடையவை. இவை ஒவ்வொன்றும் 34 அடி உயரம், 20 அடி அகலம் உள்ளவை. இரண்டு சதுரமான தம்பங்களின் மேல் மூன்று குறுக்குத் தூண் களும், அவற்றின்மேல் அறவாழி(தர்ம சக்கரம்)ச்சிகரமும், இடையே புத்தரது வாழ்க்கைக் காட்சிகளை விளக்கும் செதுக்கு வேலைகளும் அமைந்திருப்பதே இவ்வாயில் களின் சிறப்பியல்புகளாகும். (இந்நூலின் அட்டையை அணி செய்வது இக்காட்சியே).

கண்காட்சிச் சாலை :

இது முதலில் மௌரியர் காலத்தில் தோன்றிப் பிறகு கி. பி. 8-ஆம் நூற்ருண்டு வரை இடையிடையே திருத் தப்பட்டும் பெரிதாக்கப்பட்டும் வந்திருக்கிறது. முதன் முதலில் இருந்த அதன் அமைப்பு, பின்னர்த் தோன்

றிய அமைப்புகளால் மறைக்கப்பட்டுவிட்டது. சாஞ்சியில் மௌரியர் காலம் முதல் 12-ஆம் நூற்றுண்டுவரை கிடைத்த தொல்பொருள்களை யெல்லாம் அங்கு நிறுவப் பட்டிருக்கும் கண்காட்சிச் சாலையிலேயே பொதுமக்கள் பார்வைக்காக வைத்திருக்கிறுர்கள். அவற்றுள் குறிப்பிடத் தகுந்தவை அசோகத் தம்பத்தின் சிகரமும் அஸ்திப் பெட்டகங்களும் ஆகும்.

ஜெய்பூர் தூபம்:

மௌரியர் காலத்தைச் சேர்ந்த தனிச் சிறப்புடைய தூபம் ஒன்று பழைய ஜெயபுரி (ஜெய்பூர்) இராஜ்யத்தில் **பைராத்** என்னுமிடத்தில் இருக்கிறது. அதில் அசோகருடைய அறிவுரைகள் பொறிக்கப்பட்ட தம்பம் ஒன்றும், உடைந்துபோன இரண்டு தம்பங்களும், ஒரு வட்டமான கோயிலும், அதைச் சேர்ந்த ஒரு மடமும் உள்ளன. கோயிலைச் சுற்றி இரண்டு வட்டமான சுற்றுச் சுவர்களும், செங்கல்லாலும் மரத்தாலும் ஆகிய உட் சுவர் ஒன்றும் இருக்கின்றன. கிரேக்கர் காலத்தைச் சேர்ந்த துளை பொறிக்கப்பட்ட காசுகளும் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. அந்தத் தூபத்தின் அடித் தளமும், கருங் கல்லால் செய்யப்பட்ட மூன்றடி குறுக்களவுள்ள குடையும், ஒரு பிச்சைப் பாத்திரமும் அங்கே அகப்பட்டன. இந்தத் தூபத்தின் சிறப்பு என்னவென்றுல், அதன் நடுவில் 27 அடி விட்டமுள்ள வட்ட வடிவமான ஒரு கோயில், செங்கற்களால் கட்டப்பட்டுச் சுதையால் (சுண்ணும்பு) சித்திரிக்கப் பட்டிருப்பதே யாகும். இதைச் சுற்றி 7 அடி அகலமுள்ள ஒரு பாதையும் அதற்கு வெளியே நீண்ட சதுரமான ஒரு சுற்றுச் சுவரும் உள்ளன.

சிசுபால்கர் :

ஒரிஸ்ஸா இராஜ்யத்தில் அதன் தலை நகராகிய புவனேசுவரத்தின் அருகில் சிசுபால்கர்* என்னும் பெயருடைய அழிந்த கோட்டை ஒன்றுளது. அசோகருடைய கல் வெட்டு ஒன்றும் அங்கே காணப்படுகிறது. அவருடைய கல் வெட்டுக்களில் கூறப்படும் தோசலி என்னும் ஊர் அதுவே என்று சிலர் கருதுகிறார்கள். கி. மு. முதல் நூற்றாண்டில் ஆண்ட காரவேலன் என்னும் அரசன் ஒரு குகையில் எழுதிய கல்வெட்டில் கூறப்படும் கலிங்க நகரம் என்பதும் அவ்வூரே என்று மற்றும் சிலர் கூறுவர். இவ்விடத்தில் கிடைத்த களிமண் அணிகலன்களும் நாணயங்களும் தென்னிந்தியாவில் அரிக்கமேடு, பிரம்மகிரி முதலிய இடங்களில் காணப்பட்ட பழம் பொருள்களை நிகர்த்துள்ளன. இந்த இடத்திலுள்ள அரணை அகழ்ந்த போது, சுமார் ஆறடி படிமானத்தின் கீழ், 100 அடி அகலமும் 25 அடி உயரமும் உள்ள ஒரு களிமண் மேடு இருந்தது. அரணினுடைய மேற்பகுதி சரளைக் கற்களினால் பாவப்பட்டிருந்தது. அதன் கீழ் மூன்று அல்லது நான்கு வெவ்வேறு காலங்களுக்குரிய மதில்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய களிமண் பாண்டங்களும், கி. பி. முதல் நூற்றாண்டுக்குரிய சித்திர வேலைப்பாடமைந்த சட்டிகளும், இரண்டாம் நூற்றாண்டிற்குரிய செப்பு நாணயங்களும், மூன்றாம் நூற்றாண்டிற்குரிய தங்க நாணயங்களும், படிப்படியாக அழிபாடுகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன. ஆகையால் இந்த அரண்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிக் கி. பி. நான்காம் நூற்றாண்டு வரை நிலவியிருந்தன என்று தெரிகிறது.

* இது பாரதத்தில் கூறப்படும் சிசுபாலன் வாழ்ந்த இடமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கௌசாம்பி :

மகாபாரத நூலின்படி பாரதப் போர் முடிந்து ஐந்து தலைமுறைகள் ஆன பிறகு பாண்டவர்களுடைய தலை நகரம் அஸ்தினபுரத்திலிருந்து **கௌசாம்பிக்கு** மாற்றப் பட்டதாக அறிகிறோம். கிறித்து சகாத்தத்திற்குப் பின்னரும் கௌசாம்பி நகரம் மிகுந்த அரசியல் முக்கியத் துவம் வாய்ந்ததாக இருந்தது. இப்பொழுது **அலகாபாத்** ஜில்லாவில் யமுனை நதியின் வடகரையிலுள்ள **கோசம்** என்னும் இடமே **கௌசாம்பி** என்று அங்குள்ள அழி பாடுகளால் உறுதி செய்யப்பட்டுளது. அங்கிருக்கும் பெரிய மதில்கள் 80 அடி உயரமாய், ஒரு சதுர மைல் பரப்பை அடக்கியிருக்கின்றன. அங்குக் காணப்பட்ட சில கட்டிடங்களுள் மிகப் பழமையானவை மௌரியர் காலத்தைச் சேர்ந்தவை. மொத்தம் ஆறு காலங்களுக்குரிய கட்டிடங்கள் அங்குக் காணப்பட்டன. கௌசாம்பியில் மேல் தளங்களிலேயே ஏராளமான நாணயங்களும் களிமண் சிலைகளும் மற்றும் சில பழம் பொருள்களும் கிடைத்தன.

ராஜ்காட் :

வாரணாசிக்கு அருகில் **ரரஜ்காட்** அல்லது ராஜகட்டம் என்னுமிடத்தில் கங்கைச் சமவெளியின் நடுவில் நதிக் கரையோரமாக அகழ்ந்த போது செங்கற் கட்டிடங்களும் களிமண் சிலைகளும் பானைகளும் முத்திரைகளும் மற்றும் பல பொருள்களும் கிடைத்தன; 13 அடி ஆழத்தில் ஒரு பெரிய கோயிலும் மண்டபமும் மற்றும் பல கட்டிடங் களும் இருந்தன. இங்கே மேலும் ஆராய்ச்சிகள் செய் யப்பட்டால் மௌரியர் காலத்துக்கும் முற்பட்ட பல அரிய பொருள்கள் கிடைக்குமென்று கருதப்படுகின்றது. கி. பி. 12-ஆம் நூற்றாண்டுவரை கங்கைச் சமவெளியின் வர

லாற்றை அறிவதற்கான சான்றுகள் இங்கே கிடைக்குமென்று உறுதியாக நம்பலாம். அங்ஙனமாயின் நம் நாட்டு வரலாற்றில் விட்டுப் போன பகுதி ஒன்றை நாம் அறியக்கூடுமன்றோ? இதற்கான முயற்சிகளை அரசாங்கம் உடனே மேற்கொள்வது இன்றியமையாதது.

அசோகர் அடிச்சுவடு:

தட்ச சீலம், இராஜகிருகம், சாரநாத், சாஞ்சி, நாகார்ஜுனகொண்டா, நாளந்தா முதலான இடங்களில் உள்ள தூபங்கள், மடங்கள், சிலைகள், தூண்கள் முதலியவை பெரும்பாலும் பௌத்த சமயச் சார்பான பண்பாட்டையே காட்டுகின்றன. இவற்றின் அடிச் சுவட்டையொட்டியே இந்தியாவில் பிற்காலத்தில் தோன்றிய பண்பாட்டின் சின்னங்களும், இந்து மதம், ஜைனமதம், முகம்மதிய மதம் ஆகியவற்றைச் சார்ந்து உண்டாகியிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் அசோகர்தான் வழிகாட்டியாய் இருந்தாரென்று சொல்லவேண்டும்.* அவர் நாடு முழுவதும் 84000 தூபங்களை நிறுவினார் என்று கூறப்படுகிறது. நம் நாட்டில் முதன் முதலாகத் தூபங்களைக் கட்டியவர் அசோகர்தான். மேலும் அவர் நாடு முழுவதிலும் பல மலைகளிலும் பாறைகளிலும் குகைகளைக் குடைந்து புத்த பகவானுடைய போதனைகளை எழுதி வைத்திருக்கின்றார். பீகாரில் கயா ஜில்லாவில் பராபர் குன்றிலும் நாகார்ஜுனி குன்றிலும் மற்றும் பல இடங்களிலும் அவை இருக்கின்றன. இக்குகைகளில் பௌத்த மதத்தின் ஆசீவகப் பிரிவைச் சேர்ந்த முனிவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

---


*அசோகர் காலத்திற்கு முந்தியதாகக் கருதப்படும் ஒரே ஒரு தூபம் உத்தரப்பிரதேசத்தில் பிப்ராவா என்னுமிடத்தில் உள்ளது என்பதை அதில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு அறிய முடிகிறது.

7. நாளந்தா நவில்வது

கிறித்து சகாத்தத்திற்குப் பிறகு இந்தியாவில் புத்த மதத்திற்கு மிகவும் பெயர் பெற்ற இடமாக விளங்கியது நாளந்தா என்பது. இலக்கியச் சான்றுகளின்படி அஃது அசோகர் காலத்திலேயே இருந்ததாகவும், செவி வழிச் செய்திகளின்படி புத்தர் (கி. மு. 6-ஆம் நூற்றுண்டு) அங்குச் சென்றதாகவும் தெரிகிறது. ஆகவே அதன் தோற்றக் காலத்தைப் பற்றி உறுதியாக அறுதியிட்டுக் கூறுவது அரிது. எவ்வாறிருப்பினும் அது கி. பி. 6-ஆம் நூற்றுண்டில் குப்தர்கள் காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்த தென்றும், 7-ஆம் நூற்றுண்டில் ஹர்ஷர் காலத்தில் சீன யாத்திரிகர் யுவான்சுவாங் அங்கு வந்து பல ஆண்டுகள் தங்கியிருந்து புத்த சமயக் கல்வியைக் கற்றுக் கைதேர்ந்தார் என்றும் ஏட்டில் எழுதப்பட்ட வரலாறு கூறுகிறது. மேலும் புத்த மதத்தின் பிற்காலப் பிரிவாகிய மஹாயான மதத்திற்கு அவ்விடம் புகழ் பெற்றதாய் இருந்தது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

தொன்மை :

எவ்வகையிலும் நாளந்தாவின் தோற்றம், காலத்தால் தட்ச சீலத்திற்குப் பிற்பட்டதே என்பது தெளிவு. ஏனெனின் தட்ச சீலம் ஆதியில் வைதிக சமயத்தையும், சில நூற்றுண்டுகள் கழிந்த பின்னர் பௌத்த, ஜைன சமயங்களையும் போதித்து வந்தது. ஆனல் நாளந்தாவோ அதன் தொடக்கம் முதலே வைதிக மதத்திற்குப் பின்னர்த்தோன்றிய புத்த மதத்தையே கற்பித்து வந்தது. புத்தருடைய காலத்தில் வாழ்ந்த அவரது சீடர் **சாரிபுத்தர்** என்பவர் நாளந்தாவில் பிறந்தவர். நாளந்தாவின் அருகிலுள்ள இராஜக் கிரகத்தில் புத்தர் தங்கியிருந்த



நாளந்தாவில் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்டவை.

போது தான் அவரை அவர் வைதிக மதத்தினின்று வென்று தமது சீடராக்கிக் கொண்டார். நாளந்தாவிலேயே சாரி புத்தர் தமது ஆயிரக்கணக்கான சீடர்களுடன் நிர்வாணம் அடைந்தார் என்றும் கூறப்படுகிறது. புத்தர் தமது மற்றொரு சீடராகிய ஆனந்தருடன் நாளந்தாவுக்குச் சென்றிருந்தார் என்பதனாலும் அதன் தொன்மை விளங்கும். நாளந்தாவின் வரலாறு கி. பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரை ஏட்டுக் குறிப்புக்களில் அடங்கி இருக்கிறது. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அது அடியோடு மறைந்து விட்டது.

இருப்பிடம் :

நாளந்தாவின் அழிபாடுகள் இராஜக்கிரகத்திலிருந்து ஏழு மைல் வடக்கிலும் பாடலிபுரத்திலிருந்து 40 மைல் தென்மேற்கிலும் அமைந்திருக்கின்றன. இப்பொழுது அது பீகார் மகாணத்தில் கங்கை ஆற்றின் அருகிலுள்ள **பர்கான்** என்னும் சிற்றூராக இருக்கிறது. அங்குப் பல மேடுகள் மரங்களால் மூடப்பட்டுக் குன்றுகள் போலக் காட்சியளிக்கின்றன. அம்மேடுகள் 1600 அடி நீளமும் 800 அடி அகலமும் உள்ள இடத்தில் பரவியிருக்கின்றன.

ஆராய்ச்சி :

சில வருடங்கள் சங்காலியா என்பவர் அங்கு அகழ்ந்து ஆராய்ச்சிகளை நிகழ்த்தினர். அப்போது வரிசையான பல செங்கற் கோயில்களும் மடங்களும் காணப்பட்டன. அவ்விடத்தில் தென்மேற்கு மூலையிலமைந்த மிகப் பெரிய உயரமான கோயில் ஒன்று, ஏழு முறைகள் விரித்துக் கட்டப்பட்டிருந்ததாகத் தெரிந்தது. ஒவ்வொரு கோயிலிலேயும், கட்டிடத்தின்மேல் புத்த

பெருமானுடைய சிலை வைக்கப்பட்டிருந்தது. வரிசையான படிகளின் மீது ஏறிச் சென்றுதான் அப்புத்த தேவனை வணங்க வேண்டும். அங்குள்ள கட்டிடங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எட்டு நூற்றாண்டுகளில் கட்டப் பெற்றவை. அவை ஐந்து அடுக்குகளாக அமைந்திருக்கின்றன. ஐந்தாவது முறையாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் மிக விரிவான சிற்ப அணிகளுடன் தெய்வச் சிலைகள் வைக்கப்பட்ட பிறைகளோடும் சுற்றுச் சுவரில் மூலைகளில் கோபுரங்களோடும் விளங்கின. இவை கி. பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அதற்கு முன் கட்டப்பட்ட நான்கு அடுக்குக் கட்டிடங்களில் கோயில்களும் அவற்றைச் சுற்றி வழிபாட்டிற்குரிய தூபங்களும் இருந்தன.

அமைப்பு:

அங்குள்ள கோயில்களெல்லாம் ஒரே திட்டத்தின் படி அமைந்தவை. அவை ஓர் உயர்ந்த சதுரமான பீடத்தின் மீது சதுரமாகக் கட்டப்பட்டிருந்தன. கோயிலைச் சுற்றி வலம் வருவதற்குப் பீடத்தின் மேல் ஒரு பாதை இருந்தது. கோயில்களின் மேற்புற அமைப்பெல்லாம் அழிந்துவிட்டிருந்தபடியால் அவை எப்படி இருந்தன என்று சொல்ல முடியாது. ஒரு கோயிலில் மட்டும் அடிப் பாகத்தில் புத்த சமயச் சார்பற்ற சில சிற்பங்கள் இருந்தன. இக் கட்டிடங்கள் எல்லாம் பிற்காலத்தில் பழுதுபார்க்கப்பட்டன என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. எடுத்துக்காட்டாக கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் மகேந்திரபாலன் என்னும் அரசன் எழுதிய கல்வெட்டு ஒன்று ஒரு கோயிலைச் சார்ந்த தூபத்தில் இருந்தது. இஃது அக் கோயில் பழுது பார்க்கப்பட்டதென்பதற்கு அடையாளமாகும். நாளந்தாவிலிருந்த மடங்கள் ஒரே மாதிரியாக, ஒரு சதுரமான முற்றத்துடனும் அதைச்சுற்றி

அறைகளுடனும் தாழ்வாரங்களுடனும் அமைந்திருந்தன. அவைதீயினாலும் பிற காரணங்களாலும் பன்முறை அழிந்தவுடன் மீண்டும் கட்டப்பட்டன என்பது அவற்றைத் தோண்டிப் பார்க்கும்போது தெரிந்தது. ஒரு மடத்தில் கிடைத்த செப்பேட்டிலிருந்து 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிழக்கிந்திய அரசனாகிய தேவபாலன் என்பவன், சுமாத்ரா தீவின் மன்னனாகிய பாலபுத்திரன் வேண்டுகோளின்படி அம்மடத்திற்கு ஐந்து கிராமங்களைக் கொடையாக அளித்தான் என்பது புலப்படுகின்றது.

பழம் பொருள்கள் :

அங்குக் கண்டெடுக்கப்பட்ட பலபழம் பொருள்களுள் புத்தருடைய சிலைகளும், புத்த சமயத் தெய்வங்களின் சிலைகளும், சுட்ட களிமண்ணாலாகிய முத்திரைகளும், புத்த சமய மந்திரங்கள் எழுதப்பட்ட பல ஏடுகளும் அடங்கும். புத்த சமயச் சார்பான மற்ற இடங்களில் கிடைத்தது போல பெரிய உருவுள்ள சிலைகள் ஒன்றும் இங்கே கிடைக்கவில்லை. சிறிய உருவங்களிலேயே அங்கிருந்த கலைஞர்கள் தங்களது சிறபத் திறமையையெல்லாம் காட்டியிருக்கிறார்கள். நாளந்தாவில் வெண்கலச் சிலைகளை வார்க்கும் தொழில் மிகச் சிறப்பாக நடந்து வந்தது என்பதற்கு அங்குக் கிடைத்த 500 க்கு மேற்பட்ட சிலைகளே சான்றாகும். நாளந்தாவின் வெண்கலச் சிற்பக் கலை கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் பரவியிருந்தது. அத் தீவுகளில் கிடைத்த புத்த தேவனது சிலைகளெல்லாம் நாளந்தா கலைப் பாணியில் அமைந்திருப்பதால் இது தெரிய வருகிறது. அங்குக் கிடைத்த ஏராளமான அரச முத்திரைகள் ஒரு மடத்தில் ஒரே இடத்தில் கொட்டி வைக்கப்பட்டிருந்தவை. அவற்றால் குப்த வம்சாவளி நமக்கு இப்பொழுது நன்கு விளங்குகின்றது. மற்றும் நாளந்தாவிலிருந்த மதத் தலைவர்களது முத்திரைகளும்,

அரசியல் தலைவர்களது முத்திரைகளும், புத்தகங்களின் முத்திரைகளும், தனிப்பட்டோர் முத்திரைகளும் அங்குக் கிடைத்திருப்பதால் அக்காலச் சமய ஆட்சி எங்ஙனம் நடைபெற்றதென்பது ஒருவாறு தெரிகிறது.

பெயர்ப் பொருள் :

நாளந்தா என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? இக் கேள்விக்கு விடை பலரால் பலவாறு அளிக்கப்படுகிறது. நாகநந்தா என்பதே நாளடைவில் நாளந்தா என மருவியது என்று கூறுவர் ஒரு சாரார். நாகர்களுடைய அரசன் நந்தன் என்பவன் அவ்விடத்தில் ஆட்சி செலுத்தி வந்ததால் அதற்கு அப்பெயர் வந்ததாம். முதலாம் குமாரகுப்தன் அல்லது சக்ராதித்தன் என்பவன் ஒரு கலாசாலையைக் கட்டுவதற்காக நிலத்தை அகழ்ந்த போது அங்கு ஒரு நாகப் பாம்பு அடிபட்டு இருந்ததால் இப்பெயர் அவ்விடத்திற்கு உண்டாயிற்று என்றும் சிலர் கூறுகிறார்கள். இதன்படி நாகம் அழிந்த இடம் என்பது பொருளாய் அப்பெயர் அமைந்தது. மேலும், நா + அளம் + தா, என்ற பிராகிருத மொழிச் சொற்கள் மூன்று சேர்ந்து நாளந்தா என்றாயின என்றும், இதன் பொருள் 'இடைவிடாத கொடை' என்றும், புத்த சமயச் சார்பாளர் கூறுவர். ஏனெனின் போதி சத்துவர்களுள் ஒருவராகிய **தாத கட்டர்** என்பவர் அங்கு ஆண்டு வரும்போது இடைவிடாமல் தருமம் செய்தாராம். ஆனால் பிற்காலத்தில் அஃது ஒரு பெரிய பல்கலைக்கழகமாய்த் திகழ்ந்து தன்னிடம் வருபவர்களுக்கு இடைவிடாத அறிவுக் கொடையை அளித்து வந்த காரணத்தினால் இப் பெயர் பெற்றது என்று கொள்வது பொருத்தமாகவும் பொருள் நயமுடையதாகவும் இருக்கிறது. ஏனெனின் அறிவுக் கொடையை விட உயர்ந்த கொடை உண்டோ?

சரித்திரச் சான்று:

சரித்திரச் சான்றின்படி கி. மு. மூன்றும் நூற்றுண்டில் அசோகர் முதன் முதலில் நாளந்தாவில் ஒரு புத்த விகாரத்தைக் கட்டினுர் என்று தெரிகிறது. அக்கோயிலுக்கு நாளந்தா விகாரம் என்றே பெயர் உண்டாயிற்று. பிறகு ஒருவர் பின் ஒருவராக ஆறு அரசர்கள் நாளந்தா கட்டிடங்களைக் கட்டினுர்கள். முன்பு கூறப்பட்ட சக்ராதித்தன் அல்லது குமாரகுப்தன் என்பவன் பௌத்த மடம் ஒன்றைக் கட்டினுன். அம்மடத்தில் வாழ்ந்த பௌத்தத் துறவிகள் பௌத்த சமயத்தைப் போதிக்கும் பல்கலைக் கழகமாக அதை மாற்றிக் கொண்டார்கள். அதன் பின்னர் அவனது மகனுகிய புத்தகுப்தன் அங்கு மற்றொரு மடத்தைக் கட்டினுன். அவனது மகன் ததாகட்டன் மூன்றுவதாக ஒரு மடத்தை அமைத்தான். அவனுக்குப் பிறகு அரசாண்ட பாலாதித்தியன் என்னும் பெயருடைய அவனது மகன் 300 அடி உயரமான ஒரு கோயிலை எழுப்பினுன். அவனுடைய மகன் வச்சிரன் அக்கோயிலின் அருகில் மீண்டும் ஒரு மடத்தை அமைத்தான். இறுதியாக ஒரு புதிய வமிசத்து அரசன் வேறொரு மடத்தை அவ்விடத்தில் தோற்றுவித்தான். இவ்வாறு ஆறு அரசர்களுடைய முயற்சியாலும் ஊக்கத்தாலும் சில நூற்றுண்டுகளில் நாளாந்தா ஒரு பெரிய பல்கலைக் கழகமாக உருவாயிற்று. மேற்கூறிய அரசர்களுள் முதல் ஐவரும் குப்த வமிசத்தவர்கள். ஆகையால் குப்தர்கள் தான் நாளந்தாவிற்கு மிகவும் தொண்டு செய்தார்கள் என்பது தெற்றென விளங்கும்.

பிற்காலம்:

குப்தர்களுக்குப் பிறகு பீகாரிலிருந்த பால வமிசத்து அரசர்கள் அதற்குத் தக்க உதவியும் பாதுகாப்பும்

அளித்து வந்தார்கள். அந்த வமிசத்தைச் சேர்ந்த அரசர்களே பிற்காலத்தில் நாளந்தாவிற்குப் போட்டியாக தோன்றிய விக்கிரம சீலம் என்னும் பல்கலைக் கழகத்துக்குத் தம் ஆதரவை அளித்து நாளந்தாவைக் கைவிட்டு விட்டார்கள். நாளடைவில் நாளந்தா அப்போட்டிப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குள் வந்துவிட்டது. இறுதியாகப் பக்தியார் என்னும் முகம்மதியப் படையெடுப்பாளரால் தாக்கப்பட்டு அஃது அழிந்தது.

யுவான்சுவாங் குறிப்பு:

யுவான்சுவாங், இத்சிங் என்னும் இரண்டு சீனப் பெருமக்கள் நாளந்தாவில் சில ஆண்டுகள் தங்கியிருந்து கல்வி கற்றார்கள் என்பது அவர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புக்களாலேயே வெளிப்படுகிறது. அக்காலத்தில் நாளந்தாவில் சம்ஸ்கிருத மொழியும் பௌத்த சமயக் கல்வியும் கற்பிக்கப்பட்டு வந்தன. அங்கு யுவான் சுவாங் ஐந்து ஆண்டுகள் கற்றுத் தேர்ந்த பின்னர், புத்த தருமத்தில் வல்லவர் என்னும் சிறப்புப் பெற்றார். யுவான் சுவாங் கூறுவதிலிருந்து நாளந்தா உலகப் புகழ்பெற்ற ஒரு பல்கலைக் கழகமாய் விளங்கியதென்றும், உலகின் பல பாகங்களிலிருந்து அங்குப் பல மாணவர்கள் படித்தார்கள் என்றும், நாம் அறிகிறோம். அன்றியும், மூன்று பெரிய குளங்களும் அழகிய சோலைகளும் ஒரு நீர்க்கடிகாரமும் அங்கே இருந்தன என்று அவர் கூறுகிறார். அந்த நீர்க் கடிகாரம் போல உலகத்தில் எங்குமே இல்லையென்றும், அது சிறிதும் தவறின்றி நேரத்தைக் காட்டிற்று என்றும் அவர் தெரிவிக்கிறார்.

10000 மாணவர்களும் 1150 ஆசிரியர்களும் அங்கு இருந்தார்கள் என்று அவர் கூறுவதிலிருந்து அங்கு இருந்த கட்டிடங்களின் பெருமையும் கல்வியின் சிறப்பும்

மிகத் தெளிவாக விளங்கும். கல்வியில் மிகவும் முன்னேறி யிருக்கும் இக்காலத்திலகூட உலகில் எங்கும் அவ்வளவு மாணவர்களும் ஆசிரியர்களும் ஒரே இடத்தில் திரண் டிருக்கக் காணோம்.

பல்கலைக் கழகம் :

நாளந்தா உண்மையாகவே பலகலைகளும் கற்பிக்கப் படும் உயர்ந்த இடமாய்த்திகழ்ந்தது என்பதற்கு எட்டுணை யும் ஐயமில்லை. ஏனெனின் அங்கு மருத்துவம், சட்டம், மொழிநூல், வானநூல், தத்துவம் முதலிய கலைகளும், சம்ஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளும், இந்து சமய சாஸ்திரங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன. அங்குக் கல்வி கற்ற மாணவர்கள் உலகம் முழுவதிலும் பெருமையாக மதிக்கப்பட்டும் போற்றப்பட்டும் வந்தார்கள். அவர் களுக்கு ஒரு முழுமையான கல்வியறிவு இருந்ததோடு நல்ல விவாதத் திறமையும் அமைந்திருந்தது. யுவான் சுவாங்கே இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவார். எங்ஙனமெனின் அவர் ஒருமுறை நன்கு கற்றுத் தேர்ந்த ஒரு வைதிகப் பிராமணரைத் தன்னோடு வாதிடும் படி அறைகூவி அழைத்து அவ்வாதில் அவரை வென்று சிறப்புப் பெற்றார். இதனால் யுவான் சுவாங்கின் புகழ் பல இடங்களுக்கும் பரவிற்று. பிறகு ஹர்ஷ சக்ரவர்த்தி அவரைத் தம் அரண்மனைக்கு அழைத்து அவருடைய போதனையால் பௌத்தராக மாறினர். ஒருகால் ஹர்ஷர் புத்த மதத்தைப் பரப்புவதற்குக்கன்னோசியில் ஒரு பெரிய அவையைக் கூட்டி அதில் யுவான் சுவாங்கைச் சொற் பொழிவாற்றுமாறு செய்தார். அவரது சொற்பொழிவைக் கேட்கப் பல மன்னர்களும் பல்லாயிரக்கணக்கான பௌத் தத் துறவிகளும் வைதிகர்களும் பண்டிதர்களும் வந்தி ருந்தார்கள்.

கட்டிடங்கள் :

புத்தர் ஞானமடைந்த புத்த கயாவிலும், முதலில் பிரசாரம் செய்த சாரநாத்திலும் உள்ள கட்டிட அமைப்பைப் போலவே நாளாந்தாவின் கட்டிட அமைப்பும் இருந்தது. நாளந்தா பகுதியைச் சுற்றி ஒரு மாபெரும் செங்கல்லாலாகிய மதில் கட்டப்பட்டிருந்தது. அதற்கு ஒரு பெரிய தலைவாயிலும் நான்கு மதில்களிலும் அழகான கோபுர வாயில்களும் இருந்தன. விகாரங்களின் விதானங்கள் வானளாவி இருந்தன. கட்டிடங்கள் சிற்பச் சிறப்புடனும் கற்கள் பதிக்கப்பெற்றும் அழகாக இருந்தன. புத்த சமயத்தின் சிறப்பியல்புகளாகிய புத்தர், தருமம், சங்கம் என்னும் மூன்றையும் குறிப்பதற்கு மூன்று பெரிய கட்டிடங்கள் அங்கிருந்தன. அவற்றின் பெயர் முறையே இரத்தின சாகரம், இரத்தின ததி, இரத்தின ரஞ்சகம் எனப்படும். இம்மூன்றில் நடுவணதாகிய இரத்தினததி என்பது ஒன்பது அடுக்குகளையுடைய வானளாவிய முதன்மையான நூல் நிலையமாக அமைந்திருந்தது. அதில் புத்த தருமம் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் அடுக்கி வைக்கப்பட்டு மிகவும் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டுவந்தன. யாரேனும் பெரும்புலவரோ, துறவியோ வரும்போது மட்டும் அது அவர்களுக்காகத் திறக்கப்படும். மற்ற இரண்டு கட்டிடங்களும் அங்குக் கற்பிக்கப்பட்ட பலவகைக் கலை ஏடுகளைக் கொண்ட நூல் நிலையங்களாய் விளங்கின. இந்தியாவிலேயே நாளந்தா நூல் நிலையத்திற்கு இணையாக அக்காலத்தில் வேறொரு நூல் நிலையமும் இருந்ததில்லை. அன்றியும் நாளந்தாவில் மாணவர்கள் தங்குவதற்குரிய 300 அறைகளும், கூடி விவாதிப்பதற்கான எட்டுப் பெரியகூடங்களும், இவற்றின் நடுவே கல்வி போதிக்கப்படும் கல்லூரிக் கட்டிடமும் இருந்தன.

அழிவு :

இவ்வாறு தன் புகழொளியையும் அறிவொளியையும் வீசிப் பல நூற்றுண்டுகள் இந்தியாவில் தனியாட்சி செலுத்தி வந்த நாளந்தாவின் மாண்புகள் மண்ணுக்குள் மறைந்து விட்டது மிகவும் இரங்கத் தக்கது. அரசர்களுடைய ஆதரவையும் இழந்து, சுற்றிலும் போட்டிப் பல்கலைக்கழகங்களும் கிளைத்து, நாட்டில் புத்த மதத்துக்கு எதிராக வைதிக மறுமலர்ச்சியும் தோன்றி இருந்த நிலையில், இவற்றை யெல்லாம் எதிர்த்து நாளந்தா எங்ஙனம் தலை தூக்கி நிற்க முடியும்? 12-ஆம் நூற்றுண்டின் இறுதியில் குற்றுயிரும் குலையுயிருமாயிருந்த நாளந்தா முகம்மதியப் படையெடுப்பால் அறவே அழிந்தது. அதன் எழிலும் சிறப்பும் எல்லாம் மண்ணோடு மண்ணுகிவிட்டன. ஆயினும் அதன் தொண்டும் பெருமையும் என்றும் நம் மனதைவிட்டு நீங்கா என்பதில் ஐயமுண்டோ?

விக்கிரம சீலம் :

நாளந்தாவின் இறுதிக் காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கிய விக்கிரம சீலத்து மடமும் பல்கலைக் கழகமும் கூட 12-ஆம் நூற்றுண்டின் இறுதியில் பகைவர்களால் அழிக்கப்பட்டு மண்ணுக்கு இரையாகிவிட்டன. அது நாளந்தாவின் வழித்தோன்றல் என்பதும், அதை முன் மாதிரியாகக் கொண்டு, ஆனல் அதற்கு எதிர்ப்பாகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதும், கி. மு. 8-ஆம் நூற்றுண்டிலிருந்து பீகாரில் ஆண்டு வந்த பால வமிசத்து அரசர்களுடைய உதவியைப் பெற்று அது அரசாங்கப் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தது என்பதும், இறுதியில் அது நாளந்தாவின் மீதும் ஆதிக்கம் செலுத்தி அதன்

நிருவாகத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதற்கு ஆசிரியர்களையும், தலைவர்களையும் கூட நியமித்து வந்தது என்பதும் சில வரலாற்றுக் குறிப்புக்களால் தெரிகின்றன.

அமைந்த இடம்:

விக்கிரம சீலம் பிகார் (மகத) ராஜ்யத்தில் கங்கைக் கரையில் ஓர் உயரமான குன்றத்தின் மீது இருந்ததாகக் கருதப்படுகின்றது. இப்பொழுது அக்குன்றின் பெயர் பாதர்கட்டா பாறை என்பது. அது பாகல்பூரிலிருந்து 24 மைல் கிழக்கே இருக்கிறது. விக்கிரமன் என்னும் ஒருவன் பெயரால் அது விக்கிரமசீலம் (சீலம்–பாறை, மலை) என்று அழைக்கப்பட்டதாம். உயர்ந்த 'வெற்றி பொருந்திய அற ஒழுக்கம்' என்னும் பொருளையும் அச் சொல்லுக்குக் கூறலாம். பௌத்த சமய அடிப்படை ஒழுக்கங்கள் அங்குக் கற்பிக்கப்பட்டும் கடைப் பிடிக்கப்பட்டும் வந்ததால் அதற்கு இப்பெயர் மிகவும் பொருந்தும்.

தோற்றமும் அமைப்பும்:

தேவபாலர் என்னும் அரசர் முற்பிறவியில் நாளந்தா பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக இருந்தபோது ஒரு பல்கலைக் கழகத்தைக் கட்ட எண்ணிப் பின்னர் அரசராகப் பிறந்ததும் அவ்வாறே இதைக் கட்டி முடித்தார் என்று ஒரு கதை வழங்குகிறது. விக்கிரம சீலத்தில் மகாபோதி உருவங்கள் அமைக்கப்பட்ட ஒரு பெரிய கோயிலும், அதைச் சுற்றிலும் நூற்றேழு சிறிய கோயில்களும், புத்தபிட்சுக்கள் தங்குவதற்குரிய பல மடங்களும் கட்டப் பட்டிருந்தன. இவற்றைச் சுற்றி உறுதியான மதில் ஒன்றும் இருந்தது. அதற்கு நான்கு வாயில்களும் ஒவ்வொரு வாயிலிலும் ஒரு நுழைவுக் கல்லூரியும்

இருந்தன. அவ்வாயில்களில் அப்பல்கலைக் கழகத்தில் படிக்கவரும் மாணவரின் அறிவைச் சோதிப்பதற்காகப் பெரிய பண்டிதர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

வேறு சில மடங்கள் :

இதன் அழிவுக் காலத்தில் ஓரிரண்டு நூற்றாண்டுகள் முன்பே கிழக்கிந்தியாவில் ஜகத்தாலம், ஓதண்டபுரி முதலிய இடங்களிலும் பௌத்த மடங்களும் பல்கலைக் கழகங்களும் தோன்றிக் கல்வித் தொண்டையும் சமயத் தொண்டையும் புரிந்து வந்தன. அவையும் 12-ஆம் நூற்றாண்டுக்குப் பின் பகைவர்களாலும் வைதிக மறுமலர்ச்சியாலும் அழிந்து மறைந்தன. அவை இருந்த இடங்களில் இன்று குன்றுகளும் காடுகளும் மேடுகளுமே காணப் படுகின்றன. அவ்விடங்களையும் அகழ்ந்து பார்த்து ஆராய்ச்சிகள் செய்யின் பலன் கிடைக்கும்; அவற்றின் பெருமையும் வெளிப்படும். இங்ஙனம் எத்துணையோ மறைந்தொழிந்த மாபெரும் நகரங்கள் இன்று மண்ணுக்கு அடியிலிருந்து மீட்கப்பட வேண்டியிருக்கின்றது.

நாளந்தா கண்காட்சிச் சாலை :

நாளந்தா இருந்த இடத்திலேயே, இன்று ஒரு பெரிய கண்காட்சிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் கிடைத்த பழம் பொருள்களை யெல்லாம் நான்கு அறைகளிலும் ஒரு தாழ்வாரத்திலும் அங்கே வைத்திருக்கிறார்கள். இராஜக் கிரகத்தில் கிடைத்த பொருள்களும் அங்குக் காட்சிக்காக வைக்கப்பட்டிருக் கின்றன. நாளந்தா கண்காட்சிச் சாலையில் குறிப்பிடத் தகுந்தவை, அங்குக் கிடைத்த பௌத்த, வைதிக சமயச் சார்பான கற்சிலைகளும் வெண்கலச் சிலைகளும் சுண்ணும்புச் சிலைகளும் ஆகும். இவை பால வமிச அரசர்

காலத்துக்கலைச் சிறப்பையும், புத்தர் காலத்துக் கைவண்மையையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. சில அரசர்களது கல்வெட்டுக்கள் சரித்திர ஏடுகளாக அங்கே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. குப்தர்கள், மௌகாரிகள், நாளந்தா துறவிகள் முதலியவர்களது முத்திரைகளும், வெண்கலத் தூபம் ஒன்றும், தந்தப் பாதுகை ஒன்றும், மற்றும் பல சிறு சிறு கலைப் பொருள்களும் காட்சிச்சாலையில் உள்ளன. இவையெல்லாம் பழம் பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கும் கலை உணர்ச்சி உடையவர்களுக்கும் அருவிருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

8. நாகார்ஜுனகொண்டா

வட இந்தியாவில் போலவே தட்சிண பீடபூமியிலும் பழங் காலம் முதல், புகழும் பெயரும் பெற்ற பல பழம் பொருட் கருவூலங்கள் இருந்திருக்கின்றன. பல நூற்றாண்டுகளாகக் கேட்பாரற்றும் தேடுவாரற்றும் கிடந்த மறைந்த மாண்புகள் பல இங்கும் மண்ணிலிருந்து அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் மிக முக்கியமான ஓரிடம் நாகார்ஜுனகொண்டா என்பது*. அது ஆந்திராவில் குண்டூர் ஜில்லாவில் பலநாடு தாலுகாவில் கிருஷ்ணா நதியின் கரையிலுள்ள ஒரு குன்றின் மேல் இருக்கிறது. மாசேர்லா என்ற இரயில் இறுதி நிலையத்தில் இருந்து 16 மைல் மேற்கே சென்றால் அதை அடையலாம். ஆனால் முதலில் இரயில் நிலையத்திலிருந்து பத்துக் கல் தொலைவிலுள்ள நாகுலவாரம் என்னும் ஊருக்கு வண்டியிலும், பிறகு ஆறு மைல்

* நாகார்ஜுனர் என்ற ஒரு பெரிய பௌத்த முனிவர் பெயரால் இவ்வாறு இவ்விடம் அழைக்கப்பட்டது. ஏனெனின் அவர் இங்கே வாழ்ந்தாராம்.

தூரம் குன்றுகளின் மேலுள்ள அரிய வழிகளில் நடந்தும் செல்லவேண்டும். அவ்விடத்தில் மூன்று மைல் அகலமான செம்மண் நிறைந்த பள்ளத்தாக்கு ஒன்றுளது. இப் பள்ளத்தாக்கு மூன்று பக்கங்களில் குன்றுகளாலும் நான்காவது பக்கமாகிய மேற்குப் புறத்தில் கிருஷ்ணா நதியாலும் அடைக்கப்பட்டிருக்கிறது. இப் பள்ளத்தாக்கை அடைவதற்கு மேற்கூறிய மலைப்பிளவு வழியே அன்றிக் கிருஷ்ணா நதி வழியாகக் கலங்களிலும் வரலாம். இதன் வட மேற்குப் பகுதியில் ஒரு மைல் நீளமும் 200 ஏக்கர் பரப்பும் உள்ளதாய், உச்சியில் பாறைகள் பரப்பப்பட்டது போன்ற பீட பூமிப் பகுதியோடு இருப்பதே நாகர்ஜுன கொண்டா* என்பது. ஆகவே இஃது ஓர் இயற்கையான கோட்டை போல அமைந்திருக்கிறது.

கோட்டையில் உள்ளவை:

இந்த இயற்கையான கோட்டையை மேலும் வலுப்படுத்துவதற்கு உயரமான பாறைகள் இல்லாத இடங்களில் கருங்கல்லாலும் செங்கல்லாலும் ஆகிய மதில்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. முற்காலத்தில் இஃது ஒரு மலைக்கோட்டையாகப் பயன்பட்டிருக்கவேண்டும் என்பது நன்கு விளங்குகிறது. இதனுள் அழிந்துபோன இரண்டு இந்துக் கோயில்களும் அவற்றின் முன் ஒரு கருங்கல் வாயிலும் காணப்படுகின்றன.

இம்மதிலிலும் கோயிலிலும் உள்ள செங்கற்கள் 20 அங்குல நீளம், 10 அங்குல அகலம், 3 அங்குல கனம் உள்ளவை. அசோகரது தலைநகராகிய பாடலிபுரத்தின்

*தெலுங்கில் 'கொண்ட' (கொண்டா) என்றால் மலை என்று பொருள்.

அருகிலுள்ள பள்ளத்தாக்கில் கிடைத்த அழிபாடுகளிலும் இதேபோன்ற மிகப் பெரிய செங்கற்கள் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குன்றின் வடபுறச் சரிவில் விஜயநகர அரசர்காலத்துக(கி. பி. 16-ஆம் நூற்றாண்டு) குறுநில மன்னன் ஒருவனால் கட்டப்பட்ட கொத்தளம் ஒன்றும் இருக்கிறது. இவ்விடத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழ்ந்து பல பௌத்தத் தூபங்களையும் ஒரு பல்கலைக் கழகத்தையும் கண்டுபிடித்துள்ளனர். அவற்றில் அகப்பட்ட பல பொருள்களை அவ்விடத்திலேயே ஒரு கண்காட்சிச் சாலையை நிறுவிப் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர். நமது இந்திய அரசாங்கம் தனது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இங்கே கிருஷ்ணை நதிக்குக் குறுக்கே ஒரு மாபெரும் அணையைக் கட்டி இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்ய முற்பட்டுள்ளது.

ஆராய்ச்சி :

நாகர்ஜுனகொண்டாவில் சில மண் மேடுகளும், பிராகிருத மொழியிலும் பிராமி மொழியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கி. பி. 2, 3, நூற்றாண்டுகளுக்குரிய தூண்களும் கண்டு பிடிக்கப்பட்டன. அத் தொல்லெழுத்துக் கல்வெட்டுக்கள் ஆராயப்பட்டு, 1931-இல் வெளியிடப்பட்டன. அதற்கிடையில் நாகார்ஜுனகொண்டாவில் முறையாக அகழ்தல் ஆராய்ச்சி 1927-இல் தொடங்கி 1931-இல் முடிவடைந்தது. அப்போது அங்கே பௌத்த மடங்கள், கோயில்கள், தூபங்கள், கோபுரங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், பழஞ்சின்னங்கள், பானைகள் சிலைகள், 400 கல்லோவியங்கள் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு பெரிய மண்டபம் அல்லது மடத்திற்குரிய வரிசையான தூண்கள் பல இருந்தன. ஓர் அரண்மனையினுடைய சிதைந்த பகுதிகளும் காணப்பட்டன.

அதிலிருந்த வேறு மடங்கள் :

அழிபாடுகளெல்லாம் பரவியிருந்த இடம் கிருஷ்ண நதியின் அதே கரையில் 60 மைலுக்கு அப்பால் உள்ள அமராவதி என்னுமிடத்தில் காணப்பட்டதை விட மிகப் பெரியது. இங்கிருந்து நதியில் கலங்களின் வழியாக அமராவதிக்கும் அருகிலிருந்த வேறு புத்த மடங்களுக்கும் செல்லலாம். அத்தகைய மடங்கள் கிருஷ்ண நதியின் கீழ்ப் பள்ளத்தாக்கில் கோளி, செலேர்லா, ஜக்கைய பேட்டா, கண்டசாலா, கும்மடிதூரு, விஜயவாடா, பட்டிப் ரோலு முதலிய இடங்களிலிருந்தன.

தோற்றுவித்தவர்கள் :

இவ்விடத்தில் கிடைத்த கல் வெட்டுக்கள் இட்சுவாகு வமிசத்தின் தென் கிளையினரால் எழுதப்பட்டவை. இந்த வமிசத்தினர் பழங் காலத்தில் அயோத்தியை ஆண்ட சூரிய வமிசத்தில் வந்த அதே இட்சுவாகு பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்கிறார்கள். இவ்வரசர்கள் எல்லாரும் வைதிக (ஹிந்து) மதத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் இவர்களுடைய மனைவிமார் களோ புத்த மதத்தைத் தழுவியவர்கள். இவர்கள்தாம் நாகர்ஜுனகொண்டாவில் மேற்கூறிய கட்டிடங்களைக் கட்டியவர்கள். அங்குள்ள மகா சைத்தியம் என்னும் பெரிய தூபத்தை சாந்தஸ்ரீ என்னும் ஓர் அரசி கட்டியதாக அதிலுள்ள கல்வெட்டுக் கூறுகிறது. அம் மங்கை கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் அதைப் புதுப்பித்திருக்க வேண்டும் என்றும், அதற்கு நெடுங் காலம் முன்பே அது கட்டப்பட் டிருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகி றார்கள்.

நாகராள்ள போடு:

நாகர்ஜுன கொண்டாவைச் சேர்ந்த நாகராள்ள போடு என்னும் குன்றின் மேல் இரண்டு மடங்களும் மூன்று கோயில்களும் இரண்டு தூபங்களும், ஒரு தொகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு கோயிலும் அதைச் சார்ந்த மடமும் போதிஸ்ரீ என்னும் ஓர் உபாசிகை (பக்தை)யால் இலங்கையிலிருந்து வந்த துறவிகளுக்காகக் கட்டப்பட்டவை. ஒரு கல்வெட்டு மேற்கூறிய பள்ளத் தாக்கிலுள்ள ஊரை விஜயபுரி என்றும், நாகராள்ள போடுவை ஸ்ரீ பர்வதத்தின் மேலுள்ள சின்ன தம்மகிரி என்றும் குறிப்பிடுகிறது. இந்தக் குன்று கர்நூல் ஜில்லாவிலுள்ள நல்லமலை* என்பதன் ஒரு பகுதியாகும் ஸ்ரீ பர்வதம் என்பது நல்லமலையின் பழம் பெயர். திபெத்தில் வழங்கும் ஒரு செவிவழிச் செய்தியின்படி நாகர்ஜுனர் என்னும் பௌத்த முனிவர் தன்னுடைய வாழ்க்கையின் பிற்பகுதியை இந்த மலையின் மேல் கழித்ததாகத் தெரிகிறது. ஆகையால்தான் இதற்கு நாகார்ஜுன கொண்டா என்று பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த நாகராள்ளபோடுவிலிருந்த ஒரு மடத்தில்தான் அவர் வாழ்ந்து வந்தாராம்.

வருவாய்:

நாகார்ஜுனகொண்டாவிற்கு முற்கூறியவாறு அரச வமிசத்தினருடைய ஆதரவும் அரச மங்கையரின் அளவிறந்த நன்கொடைகளும், வணிக வகுப்பைச் சேர்ந்த பலரது வரம்பற்ற பொருளுதவியும் கிடைத்து வந்தன. வணிகச் செல்வர் பலர் தம் பொருளையெல்லாம்

---

* இது 'திருமலை' என்பது போலத் தமிழ்ப் பெயராகத் தெரிகிறது. ஆனால் தெலுங்கில் 'நல்ல' என்றால் கருப்பு. ஆகவே இது கருப்பு மலை என்ற பொருளில் நலகொண்டா என்றும் வழங்கப்படுகிறது.

அம்மடங்களுக்குக் கொடுத்துப் பௌத்தத் துறவிகளாக மாறி அங்கேயே தங்கியிருந்தனர். ஆகையால் அது சுமார் ஐந்து நூற்றூண்டுகள் மிகவும் தழைத்தோங்கி இருந்தது. கி. பி. 2, 3, நூற்றூண்டுகளில் அது தென்னிந்தியாவிலேயே தலை சிறந்த பௌத்தத் தலமாகவும் கல்வி நிலையமாகவும் விளங்கியது. பலர் அங்கு யாத்திரை சென்றும் கல்வி கற்றும் வந்தனர். அயல் நாடுகளிலிருந்தும் கூட அதைக் காண்பதற்குப் பலர் வருவதுண்டு எனின் அதன் சிறப்பு எத்தகையதோ!

பழம் பெருமை:

இந்த மாபெரும் புத்தத் தலத்தில் புத்தர் காலத்திற்கு முன்பிருந்த சில சின்னங்களும் கிடைத்துள்ளன. மேலும் அங்கே 20 அடி குறுக்களவுள்ள இடத்தில் பெரிய கற்கள் சுற்றிலும் வட்டமாக வைக்கப்பட்டிருந்த சவக்குழிகள் சில உள்ளன. ஒவ்வொன்றின் நடுவிலும் 8 அடி நீளம், 2 அடி அகலம், ஓர் அடி கனமுள்ள பெரிய பாறையால் மூடப்பட்ட குழியில், இறந்தவர்களைப் புதைப்பதற்குரிய தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இத்தகைய தாழிகள் தென்னிந்தியாவில் பல இடங்களில் மிகப் பண்டைக் காலம் முதலே சவ அடக்கத்திற்குப் பயன் படுத்தப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டிடங்கள்:

நாகார்ஜுன கொண்டாவில் தூபங்கள், விஹாரங்கள் கோயில்கள், மண்டபங்கள், அரண்மனை முதலியவற்றின் அழிபாடுகளே முக்கியமாக நம் கருத்தைக் கவர்வன ஆகும். ஆற்றங் கரையோரமாக ஒரு பெரிய கருங்கல் படிக் கட்டு (250′ × 50′ × 5′) இருப்பதால் அஃது அக்காலத்தில்

கலங்கள் வந்து தங்குவதற்குரிய இடமாக இருந்திருக்க வேண்டும். மேற்கூறிய கட்டிடங்கள் எல்லாம் செங்கல் லால் கட்டப்பட்டுச் சுதையினுல் (சுண்ணும்பு) சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பெற்றவை. தூண்களும் தரையும் சிற்பங்களும், வெள்ளைச் சலவைக்கல் போன்ற உயர்ந்த சுண்ணும்புக் கல்லினுல் செய்யப்பட்டவை.

கோயில் அமைப்பு:

நாகார்ஜுனகொண்டா கோயில்கள் நீண்ட சதுர வடிவமாய், ஒரு புறத்தில் வாயிலும் அதன் எதிர்புறத்தில் அரை வட்ட வடிவமான பகுதியும் உடையவையாய் இருந்தன. அவற்றின் சுவர்கள் மிக உயரமாகவும், கூரை செங்கல்லால் வேயப்பட்டும் இருந்தன. அவற்றில் சாளரங்கள் இல்லை. ஒளி வருவதற்கு வாயிலின் மேற் புறமாக ஒரு சிறிய புழை மட்டும் உண்டு. அவைகளின் உட்புறமும் வெளிப்புறமும் சுண்ணும்புச் சாந்தும் வெள்ளையும் பூசப்பட்டிருந்தன. படிகளும் தரையும் கற் களாலானவை. சுவர்களினுடைய அடிப்புறத்தையும் மேற் புறத்தையும் அச்சினுல் பதித்த உருவங்கள் அணி செய்தன. சில கோயில்களில் மட்டும் கல்வெட்டுக்கள் காணப்பட்டன. ஒரே ஒரு கோயிலில் சிதைந்திருந்த புத்தர் சிலை ஒன்று கிடைத்தது. நாகராள்ளபோடுவில் கிடைத்த ஒரு சிலை, தன் தலையின் மீது ஒரு நீண்ட வாலுடைய தலைப்பாகை போன்ற குல்லாயை அணிந் திருப்பது போலச் செய்யப் பட்டிருக்கிறது. அது புத்தருடைய சிலையா, நாகார்ஜுனருடைய சிலையா என்பது தெரியவில்லை. ஒவ்வொரு மடத்தைச் சார்ந்த கோயிலிலும் வழிபாட்டிற்குரிய சிலை ஒன்று இருந்தது.

மடங்கள் :

மடங்களின் கூரைகள் மரத்தால் வேயப்பட்டுக் கருங் கற்றூண்களால் தாங்கப்பட்டிருந்தன. துறவிகள் தங்கு வதற்கு அவற்றில் தாழ்வாரத்தோடு கூடிய வரிசையான அறைகள் இருந்தன. அத்தகைய அறை ஒன்றில் ஏராளமான ஈய நாணயங்களும், நாணயங்களைச் செய்யும் அச்சு ஒன்றும், ஈயத் தாதுவும் கிடைத்தன. இதிலிருந்து பௌத்தத் துறவிகள் தங்களுக்கு வேண்டிய நாணயங் களைத் தாங்களே செய்து கொண்டார்கள் என்பது தெரிகிறது. மற்றும் மடங்களில் மாவரைக்கும் கற்களும், பானைகளும், ஒரு பெண் உருவமான பொம்மையும் கிடைத்தன. இப்பொம்மை மட்டும் அக்காலத்திற்கும் முந்தியது என்று தெரிகிறது.

மண்டபங்கள் :

மண்டபங்கள் யாத்திரிகர்கள் தங்குவதற் கென்று கட்டப்பட்டிருந்தன. அவற்றின் தூண்களெல்லாம் மிக அழகாகச் செதுக்கப்பட்டவை. சில தூண்களில் புத்தர் வாழ்க்கையின் வரலாற்றுப் பகுதிகள் ஓவியங்களாகச் செதுக்கிச் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றில் ஒரு சித்திய மெய்காப்பாளன் உருவமும், மற்றொன்றில் யவனனாகிய டயனீஷியஸ் என்பவனது உருவமும் உள்ளன.

தூபத்தின் அமைப்பு :

தூபங்கள் பொதுவாகப் புத்தருடைய உடற்பகுதி களையோ பௌத்த முனிவர்களுடைய உடற்பகுதிகளை யோ அடக்கம் செய்து அவற்றின் மீது கட்டப்பட்டவை. சிலவற்றில் மட்டும் ஒன்றும் அடக்கம் செய்யப்படவில்லை.

உடற்பகுதிகள் அடக்கம் செய்யப்பட்ட தூபங்களுக்குத் தாதுகர்ப அல்லது தாகப தூபங்கள் என்பது பெயர். இவை ஒரு பெரிய சக்கரம் போல அமைக்கப்பட்டு நடுவில் குடமும் ஆரங்களும், சுற்றிலும் பட்டையும் கொண்டிருக்கும். ஒரு பெரிய குடை கவிழ்க்கப்பட்டது போல அதனுடைய விதானமும் உட்புறமும் காட்சியளிக்கும். மகா சைத்தியம் அல்லது பெரிய தூபம் 106 அடி குறுக்களவும், மிகச் சிறிய தூபம் 20 அடி குறுக்களவும் உடையனவாய் இருக்கின்றன. அவற்றில் அடியார்கள் ஆராதனைப் பொருள்களை இடுவதற்குப் பலி பீடங்கள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். அங்கே செல்வதற்குப் படி வரிசைகளும் கைப்பிடிகளும் இருக்கும். தூபத்தின் வாயில்களும் படிகளின் கைப்பிடிகளும் சித்திர வேலைப்பாடமைந்த மரத்தினால் செய்யப்பட்டவை. வாயிலினருகில் இருந்த இரண்டு பெரிய தூண்களிலும் கூட மிக நேர்த்தியான வேலைப்பாடுகள் உள்ளன. தூபத்தின் விதானத்தின் மேல் மக்களுடைய காணிக்கைகளைப் பெறுவதற்கு ஒரு கலசம் போன்ற பாத்திர முண்டு. அதன் மேல் ஒரு குடை கவிழ்க்கப்பட்டிருக்கும். அங்கே தேவலோகத்துக் குழந்தைகள் போலவும் அடியார்கள் போலவும் உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. புத்தருடைய வாழ்க்கையில் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகள் அல்லது அற்புதங்களாகக் கருதப்பட்ட. பிறப்பு, துறவு, ஞானமடைதல், முதல் உபதேசம், நிருவாணம் என்பவை மேடைகளில் செதுக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சிகளைக் குறிக்கும் கற் சித்திரங்கள் நாகார்ஜுனகொண்டாவிலும் அமராவதியிலும் மீண்டும் மீண்டும் பல இடங்களில காணப்படுகின்றன. இவ்வுருவங்கள் கற்களினாலோ சுதையினாலோ செய்யப்பட்டவை.

தூபங்களின் வகைகள் :

மகா சைத்தியம் எனப்படும் பெரிய தூபத்தில் மாபெரும் ஞானசிரியராகிய புத்த பெருமானின் உடற் பகுதி ஒன்று அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் தான் அதற்கு அப்பெயர் உண்டாயிற்று. இது போலவே சாஞ்சி, சாரநாத், அமராவதி என்னும் இடங்களிலும் புத்தருடைய உடலின் பகுதியொன்று அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் மூன்று வகையான தூபங்கள் எழுப்பப்பட்டதாகத் தெரிகிறது. ஒன்று புத்தருக்காகவும், மற்றொன்று துறவிகளுக்காகவும், மூன்ருவது அரச குடும்பத்தினருக்காகவும் எழுப்பப்பட்டன. இவை ஒவ்வொன்றிலும் அவரவர்களுடைய உடற் பகுதிகள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும். மூன்ருவது வகைத் தூபங்கள் மற்றவற்றைவிட மிக அலங்கார மாகக் கட்டப்பட்டிருக்கும்.

அமராவதி :

குண்டூர் ஜில்லாவில் கிருஷ்ணு நதியின் கரையில், அமராவதி என்னுமிடத்தில் இருந்த தூபம் ஒன்று பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியில் அங்கிருந்த நிலக்கிழார் ஒருவரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு விட்டது. அப்போது அங்குக் கிடைத்த சலவைக் கல் சிற்பங்கள் வெவ்வேறு இடங்களில் கொண்டுபோய் வைக்கப்பட்டன. நாகார்ஜுனகொண்டாவில் கிடைத்த கல்லில் செதுக்கப்பட்ட ஓவியங்கள், அமராவதியில் கிடைத்த கல்லோவியங்களை முன் மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டவை என்று கருதப்படுகின்றன. சிற்பக் கலைஞர்கள் அவற்றை அமராவதிப் பாணியில் அமைந்தவை என்றே கூறுவார்கள். ஆயின் அமராவதியின்

சிறப்பை என்னென்பது! அமராவதியில் கிடைத்த கல்லோவியங்கள் சென்னைக் கண்காட்சிச் சாலையிலும், கல்கத்தாவிலுள்ள இந்தியத் தொல்பொருள் கண்காட்சிச் சாலையிலும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. அங்குள்ள கல்லோவியங்கள் எல்லாவற்றிலுமே அவை தாம் தனிச் சிறப்புடையவை என்பது காண்போருக்கு எளிதில் விளங்கும்.

ஸ்ரீதான்ய கடகம் :

அமராவதியின் அருகில் ஸ்ரீதான்ய கடகம் என்னும் பெயருடைய ஒரு பல்கலைக் கழகம் இருந்தது என்று கூறப்படுகிறது. அங்கு வைதிகக் கல்வியும் பௌத்த சமயக் கல்வியும் சிறப்பாகக் கற்பிக்கப் பட்டதாகவும், முதலில் நாகார்ஜுன முனிவரே அங்குத் தங்கியிருந்து அப்பல்கலைக் கழகத்தை நடத்தி வந்ததாகவும் தெரிகிறது. அங்குக் கற்றுத் தேர்ந்த பண்டிதர்களுள் சிலர் திபேத்திற்கும் சென்றார்களாம். இத்தகைய பெருமையும் அழகும் மிக்க அமராவதி அழிந்து விட்டது குறித்து யாரே இரங்காதார்?

---

9. தென்னாட்டின் தனிப்பெருமை

மனிதன் இவ்வுலகில் தோன்றி ஐந்து இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன என்று மனித இன ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். முதன்முதலில் அவன் மற்றப் பிராணிகளைப் போலத் தன் உழைப்பின்றித் தானாக இயற்கையில் கிடைக்கும் பொருள்களையே உண்டு உயிர் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அறிவும் ஆற்றலும் முன்னேற்றத் திறமையும் இருந்தும் கூட அவன் அவற்

றைப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் நிலத்தில் புதைந்திருக்கும் கிழங்குகளையும் காட்டில் திரியும் விலங்குகளையும் தனக்கு உணவாக்கிக் கொள்ளச் சில எளிய கருவிகளை அவன் செய்து கொண்டான். தனது சூழ்நிலையோடு போராடி அதை வெல்ல அவனுக்குப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. இறுதியாகக் கி.மு. 7000 ஆண்டளவில் தான் அவன் தனக்கு வேண்டிய உணவைத் தானே தயாரித்துக்கொள்ள அறிந்தான்; கி. மு. 4000 அளவில்தான் உலோகத்தின் உபயோகத்தைக் கண்டான். உலோக காலத்துக்கு முற்பட்ட காலத்தைப் பழைய கற்காலம் என்றும், இடைக் கற்காலம் என்றும், புதுக் கற்காலம் என்றும், மூன்று பிரிவுகளாகப் பிரிப்பது வழக்கம். இப்பிரிவிற்கு அடிப்படை அவ் வக்கால மக்கள் கையாண்ட கருவிகளே யாகும்.

பழைய கற்காலம் :

மேற்கூறிய பழைய கற்காலக் கருவிகள் இந்தியாவில், குறிப்பாகத் தென்னிந்தியாவில், மிகுதியாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றால் தென்னிந்தியாவில் மிகப் பழைய காலத்திலேயே ஓரளவு நாகரிகமடைந்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பது நன்கு விளங்குகின்றது. இப்பழைய கற்காலக் கருவிகள் பலவற்றைச் சென்னை அருகிலுள்ள பல்லாவரத்தில் (பல்லவபுரம்) 1863-இல் இந்திய நில ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த இராபர்ட் புரூஸ் புட் (Robert Bruce Foote) என்பவர் முதன் முதலில் கண்டுபிடித்தார். அவரே நமது நாட்டின், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப்பற்றி முதல் முதலில் ஆராய்ந்தவர் என்று கூறுவது பொருந்தும். வரலாறு கூறுவதை விட நிலநூல் மேலும் அதிகப் பழைமையான செய்திகளைக் கூறுகின்றது என்ற உண்மையை அவர்

நமக்கு எடுத்துக்காட்டினர். இந்த நிலநூல் ஆராய்ச்சி யின்படி தென்னிந்தியா கருத்துக்கெட்டாத பழைமை உடையது என்பது மிகத் தெளிவு.

தொடர்ச்சியான நாகரிகம் :

தென்னிந்தியாவில் மற்ற இடங்களைப் போலன்றித் தொடர்பு அருத பண்பாட்டின் அறிகுறிகள் படிப்படியாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. முதலில் பழங் கற்காலம், பிறகு புதிய கற்காலம், அதை யடுத்து உலோக காலம் என்னும் இந்தப் படிகள் இங்கே காணப்படுகின்றன. இவற்றுக்கு இடையே புதிதாகப் புகுந்த அந்நியர்களது நாகரிகம் நுழைந்து இத் தொடர்பை அறுத்துவிட வில்லை. பிற்காலத்தில் இங்குப் புகுந்தவர்களாகச் சிலரால் கூறப்படும் திராவிடர்கள் அல்லது ஆரியர்களது நாகரி கத்தின் அறிகுறிகள், இந்தப் பழைய தொடர்ச்சியான நாகரிகத்திற்கு இடையே காணப்படவில்லை.

சான்றுகள் :

இதுகாறும் தென்னிந்தியா தொல் பொருளியல் துறையினரால் பெரிதும் புறக்கணிக்கப்பட்டு வந்திருப் பினும், தற்செயலாகவோ திட்டமிட்டோ ஆங்காங்குக் கண்டுபிடிக்கப்பட்ட சில பழம் பொருள்கள் இங்கு மிகுதி யாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புரூஸ் புட்என் பாரால் பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழங் கற்காலக் கருவிகளும், வில்லியம் கிங் என்பவரால் அத்திரம் பாக்கம் (சென்னைக்கு வடமேற்கே 40 கல்) என்னு மிடத்தில் கண் டெடுக்கப்பட்ட அத்தகைய கருவிகளும், பிரீக்ஸ் என்பவ ரால் நீலகிரியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பழந்தாழிகளும், பின்னர் மற்றத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால்

ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த மிகவும் தனிப்பட்ட முதலாளித்துவத்தை நீக்கி அதற்கு ஊழியர்களாய் இருக்கும் ராணுவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் அழித்து ஒரு சமமான (முடியாத சமத்துவமல்ல, ஒரே மாதிரியுமல்ல) சமூகமாக மாற்றியமைக்க வேண்டும். உலகத்திலுள்ள வேலைகளையும் அதிலுள்ள பொருட்களையும், தேவையான வஸ்துக்களையும் சுகங்களையும், அமோகமான வாழ்க்கைகளையும், இன்பங்களையும் எல்லோரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்." என்று ஸ்ரீ தாஸ் கூறுகிறார்.

இதற்கு வழி

இதை எல்லாம் செய்யக்கூடிய திட்டம என்ன? டாக்டர், "மனு தன்னுடைய சாஸ்வதத் திட்டத்தில் (ஐந்து வருட, பத்து வருட, இருபத்தைந்து வருடத்திட்டங்கள் அல்ல) தனிப்பட்ட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் சேர்த்து நடாத்த மானிடவர்க்கம் முழுவதிற்கும் ஒரு வழிகாட்டி இருக்கிறார்." ஒருங்குபடுத்தப்பட்ட கல்வி, குடும்ப வாழ்க்கை, பொருளாதாரம், தேச பாதுகாப்பு, சுகாதாரம், நியாயம், மதம்–பொழுதுபோக்கு–கலை முதலியவைகளெல்லாம் அடங்கி இருக்கின்றன. பழைய இந்திய சமூக அமைப்பு எல்லையற்ற போட்டிக்கும் பகைக்கும் நிறைந்த ஒத்துழைப்புக்கு மிடையிலும், சுயநலத்துக்கும் பரோபகாரத்துக்கு மிடையிலும், தனிப்பட்ட முறைக்கும் அபேதவாதமுறைக்கு மிடையிலும், பூர்ண சுதந்திரத்துக்கும் சுதந்திர மின்மைக்கு மிடையிலும், தனிப்பட்டவர்களே சகல காரியங்களையும் செய்யவேண்டுமென்ற வாதத்திற்கும் சர்க்காரே சகல விஷயங்களையும் நடத்த வேண்டுமென்ற சொல்லுக்கு மிடையிலும், சர்க்காரே வேண்டாமென்று சொல்லுவதை

கும், அதிகமாக சர்க்கார் சக்தி வேண்டுமென்று சொல்லுவ தற்குமிடையிலும் ஒரு நியாயமான மத்தியபாதையைக் காண்பிக்கிறது. ஒவ்வொரு நபரும் தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைமையிலும் இன்ன உரிமைகளைப் பெற்று இன்ன கடமைகளைச் செய்ய வேண்டுமென்று விதித்திருப்பதன் மூலமே மேற்சொன்ன மத்திய பாதையைக் காண்பிக்கிறது. ஆரம்பத்தில் ஆச்ரம தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். பின் ஒரு முதிர்ந்த சமூக அங்கத்தினர் என்ற முறையில் சமூக தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். அப்பால் சமூக வாழ்க்கை நடாத்தும் நிலைமையில் குடும்ப தர்மத்தைக் (வர்ணதர்மம்) கைக்கொள்ள வேண்டும். உரிமைகளும் கடமைகளும், வேலையும், தகுந்த பிரதிப் பிரயோஜனமும் உண்மையான நியாயத்தை யுண்டாக்கும்வாறு விதிக்கப் பட்டிருக்கின்றன. (சமத்துவம்கூட உண்டாகலாம். பொது உடைமைக்காரர் விரும்பும் பொருளாதார சமத்துவமல்ல; ஆத்மீக சமத்துவமாகும். (PP. 31–32) எந்த பொது உடைமைக்காரரும் தான் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்திவிடுவேனென்று சொல்லவில்லை. தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் பொதுஉடைமைக்காரரின் லக்ஷியம். அதாவது "ஒவ்வொருவரிடத்திலிருந்தும் அவரவருடைய திறமைக்குத் தக்கபடி வேலை வாங்கி, தேவைக்குத் தக்கபடி அளிப்பது."

மேலும் டாக்டர் தன்னுடைய திட்டத்தை அடியில் கண்டபடி விளக்குகிறார். "பூர்வீக இந்திய முறைப்பிரகாரம் ஒவ்வொரு சர்க்காரிலும் நான்கு முக்கிய 'கூட்டங்கள்' 'சங்கங்கள்' 'சபைகள்' 'கார்பொரேஷன்கள்' 'அமைப்புகள்' 'தொழிலாளர் சங்கங்கள்' இருக்கும்—(1) கல்வியாளர்களின்

தொல்பொருள்கள் கிடைத்த இடங்கள் நிலநூல் ஆராய்ச்சிப்படி, இக்குகை வாழ் மனிதனின் காலத்தை விட மிகப் பழைமையானவை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

ஆதிச்ச நல்லூர் :

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகளில் இரும்புக் கருவிகளும், ஆயுதங்களும்,இறுதிச் சடங்குகளுக்குரிய பாத்திரங்களும், பல்வேறு உயிர்களின் உருவங்கள் எழுதப்பெற்ற வெண்கல மூடிகளும்,விலங்குகளின் சிலைகளும், தானியங்களும்,அபிரகமும், துணியும், தங்கத்தினாலும் வெண்கலத்தினாலும் செய்யப்பட்ட அணிகலன்களும், ஒரு கிரீடமும், மனித எலும்புகளும் கிடைத்திருக்கின்றன.

இவற்றிலிருந்து அக்காலத்தில் இறந்தவர்களைத் தாழிகளில் வைத்துப் புதைப்பது வழக்கம் என்றும், பிணத்துடன் கருவிகளையும் அணிகலன்களையும் வைத்து அடக்கம் செய்வது உண்டென்றும் அறிகிறோம். இக் கருவிகளும் அணிகலன்களும் அக்காலத்திருந்த உயரிய நாகரிகத்தைக் காட்டுகின்றன. இவை பழங் கற்காலத்திற்குரியவை என்று கருதப்படுகின்றன. இக்காலத்திலேயே மனிதனுக்கு இரும்பின் உபயோகமும் தெரிந்திருந்தது என்பதற்கு இங்குக் கிடைத்த இரும்புக் கருவிகளே தக்க சான்றாகும். மேற்கூறியவாறு பிணத்தை அடக்கம் செய்யும் முறை பழந் தமிழ்நாட்டில் இருந்ததென்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட புறநானூற்றுச் செய்யுள் ஒன்று சான்று பகர்கின்றது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைக் குறித்து ஐயூர் முடவனார் பாடிய பாட்டில் அதனைக் காண்க :

"கலஞ் செய்கோவே கலஞ் செய்கோவே

....

கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்
தேவர் உலகம் எய்தினன் ஆதலின்
அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி
வனைதல் வேட்டனை யாயின் எனையதூஉம்
இருநிலம் திகிரியாப் பெருமலை
மண்ணா வனைதல் ஒல்லுமோ நினக்கே"—(புறம்-228)

அரிக்கமேடு:

பாண்டிச் சேரிக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் கீழ்க் கடற்கரையோரமாக உள்ள அரிக்கமேடு என்னும் இடம் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் உரோமா புரியோடு தொடர்பு கொண்டிருந்தது என்ப தற்கு எண்ணற்ற சான்றுகள் கிடைத்துள்ளன. அங்கு உரோம நகரத்துச் சித்திர வேலைப்பாடமைந்த தட்டுகளும் பானைகளும் நாணயங்களும் கிடைத்துள்ளன. பாண்டிச் சேரியை ஆண்டு வந்த பிரெஞ்சு அதிகாரிகளே இவற்றை முதலில் கண்டனர். பிறகு 1945-இல் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் அரிக்கமேட்டின் அருகில் சில இடங்களைத் தேர்ந்தெடுத்து அகழ்ந்து பார்த்தார்கள். அப்போது ஓர் இடத்தில் பண்டக சாலை அல்லது கிடங்கும், மற்றோரிடத்தில் நான்கு வெவ்வேறு காலங்களில் கட்டப்பட்ட கட்டிடங்களும், இரு குளங்களும் தென்பட்டன. இவற்றை விட முக்கியமான கண்டு பிடிப்புகள் மத்தியதரைக் கடல் நாடுகளிலிருந்து வந்த அரிய பொருள்கள் தாம். அவை தூண்மீது பொருந்திய கண்ணாடிப் பாத்திரங்கள், இரண்டு கைப்பிடிகள் உடைய கூருருளை வடிவான ஜாடிகள், சுட்ட களிமண்ணால் செய்யப் பட்ட விளக்குகள், சிவப்பு நிறம் பூசப்பட்ட பளபளப்பான

பானை ஓடுகள், கோடுகள் கீறப்பெற்ற கருப்பு நிறமான களிமண் தட்டுகள் முதலியவை ஆகும். அரிக்கமேட்டில் கி. பி. முதல் நூற்றாண்டில் உரோம் நகர மக்கள் வந்து தங்கினர் என்பது இவற்றால் தெரிகின்றது.* உரோம ஆசிரியர்கள் தங்கள் நாட்டினர் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் வியாபாரத்தின் பொருட்டு ஏற்படுத்தி யிருந்த இடங்களில் அதுவும் ஒன்று என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். இங்குக் கிடைத்த புதைபொருள்களைக் கொண்டு இந்தியாவில் வேறு சில இடங்களில் (பிரம்மகிரி, சிசுபால்கர்) கிடைத்த பழம் பொருள்களின் காலத்தை அறுதியிட முடிந்தது. இது இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சிக்கும் வரலாற்றுப் புனரமைப்புக்கும் எதிர் பாராத விதமாகக் கிடைத்த ஒரு நல்ல உதவி யாகும்.

பிரம்ம கிரி:

மைசூர் இராஜ்யத்தில் பிரம்ம கிரி என்னுமிடத்தில் கிடைத்த சிறு கற்கருவிகள் புதிய கற்காலத்தைச் சேர்ந் தவை யென்பது ஆராய்ச்சியால் புலனாயிற்று. அக்காலம் கி. மு. 300-இல் அவ்விடத்தில் தோன்றியது. அக் காலத்திலேயே இரும்புக் கருவிகளும் கையாளப்பட்டு வந்தன. பிரம்ம கிரியின் கற்கால நாகரிகம் கி. மு. 1000 ஆண்டு அளவில் நிலவி யிருந்தது. இக் கற்காலக் கருவிகளாவன, கத்தி முனைகள், அம்பு முனைகள், கரண்டிகள் முதலிய பலவாகும். இவை மிகச் சிறிய உருவ முடையவை. மேலும் பிரம்மகிரியில் கி. மு. 1000-க்கும் 300-க்கும் இடையே, பளபளப்பாகச் செய்யப் பட்ட கற்கோடரிக் காலம் ஒன்று இருந்தது. இக்காலத்தில்

*உரோமர்கள் இந்தியர்களுடைய பானைகள் மீது, சுழலும் பற்சக்கரங்களால் கோடுகளை வரைந்து அழகுபடுத்தினார்கள். இத்தகைய பானைகளே அரிக்கமேட்டில் கிடைத்தவை.

வாழ்ந்த மக்கள் பழைய கற்காலக் கருவிகளேயும், புதிய கற்காலக் கருவிகளேயும், செம்பு, வெண்கலம் முதலிய வற்றையும் உபயோகப்படுத்தி வந்தனர் என்பது புதிய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலேயே வெண்கலக் கட்டை யொன்றும் செம்பு உளி ஒன்றும் கிடைத்ததனுல் தெரிகிறது. இம்மக்கள் இறந்த குழந்தைகளேத் தாழிகளிலும், முதியவர்களேக் குழிகளிலும் புதைத்தனர். இந்த நாகரிகத்துக்குப் பிறகே இரும்புக் கருவிகளேயும் பெரிய கற்கருவிகளேயும் உபயோகிக்கும் நாகரிகம் பிரம்ம கிரியிலும், மற்றும் சில இடங்களிலும் கி. மு. 3-ஆம் நூற்ருண்டளவில் வந்தது. வரலாற்றுக் காலத்தின் தொடக்கம் வரை புதிய கற்காலமே தொடர்ந்து இருந்தது. ஆனுல் அதே சமயத்தில் பிற இடங்களில் இவ்விரண்டிற்கும் இடையில் செம்பு அல்லது வெண்கலக் காலமும் இரும்புக் காலமும் புகுந்தன. பொதுவாக இந்தியாவில் பெரும்பாலும், கிரீஸிலும் எகிப்திலும் போல, இரும்புக் காலத்துக்கு முன்பு செம்புக் காலம், வெண்கலக் காலம் ஆகியவை தோன்றவில்லே. கற்காலத்தை அடுத்து இரும்புக் காலமும், அதையடுத்து வரலாற்றுக் காலமும் தோன்றின.

கற்காலம் :

கற்காலத்திற்குரிய பலவகையான கற்களால் செய்யப்பட்ட சிறு சிறு கருவிகள் இந்தியாவில் வடகோடியிலிருந்து தென்கோடிவரையிலும், கிழக்குக்கோடியிலிருந்து மேற்குக்கோடி வரையிலும் மிகப் பரவலாகக் கிடைத்திருக்கின்றன. இவற்றைப்போலவே மேனுடுகளிலும் அகப்பட்டுள்ளன. இவை மிகச் சிறியவையாய் இருப்பதால் மக்கள் இவற்றைக் கைப்பிடியோடு கட்டியே உபயோகித்திருக்க வேண்டும் என்பது தெளிவு. இந்தியாவில் இவை எக்காலம் முதல்

எக்காலம் வரை கையாளப்பட்டன என்பது சரியாகத் தெரியவில்லை. குஜராத்திலுள்ள சபர்மதி பள்ளத்தாக்கில் கற்கால மனிதருடைய முழு எலும்புக் கூடுகளும், தனித் தனி எலும்புகளும், கற்கருவிகள் இருந்த இடத்திலேயே கிடைத்தன. இவ்விடங்களில் பானைகள் ஒன்றும் அகப்படாமையால் இம்மக்களது காலம் பழங் கற்காலமே என்று கருதப்படுகின்றது. ஆனால் கோதாவரி நதிப் படுகையிலும் மற்றும் சில இடங்களிலும் இக்கருவி களுடன் பானைகளும் கிடைத்திருக்கின்றன. ஆகவே இவை கி மு. 500-க்கு அண்மையில் தோன்றிய நாகரிகத் தைக் காட்டுகின்றன.

தென்னிந்தியாவில் கோதாவரி நதிக்குத் தெற்கே யுள்ள தக்காணப் பகுதியில் கற்கால நாகரிகச்சின்னங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வட இந்தியாவில் மத்திய மாகாணத்திலும், உத்தரப் பிரதேசத்திலும் கூட இத்தகைய சின்னங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட் டுள்ளது. புரூஸ் புட் என்பவர் தாமிரவருணியினுடைய தென்கரையில் உள்ள ஆதிச்சநல்லூரில், (114 ஏக்கர் பரப்பளவிலிருந்து 127 இடங்களில்) வரலாற்றுக்கு முற் காலத்திய தாழிகளையும் பானைகளையும் தோண்டியெடுத் தார் என்பதை முன்பே கண்டோம். அவற்றுள் 50 இடங் களிலிருந்து புதிய கற்காலத்திற்குரிய பொருள்களும், 60 இடங்களிலிருந்து இரும்புக் காலத்திற்குரிய பொருள் களும் கிடைத்தன. இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமை யாதெனில் முற்கூறப்பட்டவை மங்கலான நிறத்துடன் சித்திர வேலைப்பாடு ஒன்றுமின்றி இருக்கும்; பிற் கூறப் பட்டவை நன்கு மெருகிடப்பட்டுப் பளபளப்பாக நிறங்கள் பூசப்பட்டிருக்கும்.

ஒப்பு நோக்கல் :

பழங் கற்கால மக்கள் பானைகளை உபயோகிக்க வில்லை. நெருப்பின் உபயோகம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் மிக்க அறிவுள்ளவர்கள். புதிய கற்கால மனிதர்களுக்குத் தீயின் உபயோகமும், பானைகளைச் செய்து பண்டங்களைச் சேமிக்கும் அவசியமும் தெரிந்திருந்தது. அவர்கள் தமது கற்கருவிகளைக் கூர்மையாகவும் பளபளப்பாகவும் செய்யக் கற்றுக்கொண்டார்கள். கோடரி செய்து உபயோகிக்கவும் அறிந்து கொண்டார்கள். தென்னிந்தியாவில் கிடைத்த புதிய கற்காலக் கருவிகள் சிறிய ஆசியாவில் டிராய் நகரத்தில் கிடைத்த புதிய கற்காலக் கருவிகள் போலவே இருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. அது போலவே பல்லாவரத்தில் கிடைத்த புதிய கற்காலத்திற்குரிய சுட்ட களிமண் தாழிகளும் மெசபத்தோமியாவில் பாக்தாத்தில் கிடைத்த தாழிகளைப் போல இருக்கின்றன. இவற்றால் இம்மக்களுக்கும் அம்மக்களுக்கும் தொடர்பிருந்தமை புலப்படும்.

சவ அடக்கம் :

தென் இந்தியாவில் பழைய காலத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை ஐந்து வகைப்படும். ஆதிச்சநல்லூரிலும் வைனட் என்னுமிடத்திலும் காணப்பட்டது போன்று,பெரிய தாழிகளில் வைத்துப் புதைத்தல் என்பது ஒன்று. மேலே புறநானூற்றில் குறிப்பிடப்பட்டது இது போன்றதுதான். கால்கள் வைக்கப்பட்ட தாழிகளில் வைத்துப் புதைக்கும் வழக்கம் மற்றொன்று. சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் இத்தகைய தாழி ஒன்று ஒரு வீட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு அகழ்ந்து எடுக்கப்

பட்டது. இத்தாழிகளில் பலவகை யுண்டு. ஆறு ஜதைக் கால்களுடன் கூடிய நீளமான தாழிகள் ஒருவகை. இவற்றில் பிணத்தைப் படுக்க வைத்து அடக்கம் செய்வார்கள். நான்கு ஜதைக் கால்களுடைய சதுரமான தாழிகள் மற்றொரு வகை. மூன்று கால்களுடைய தாழிகளும் வடஆர்க்காடு மாவட்டத்தில் கிடைத்துள்ளன. இவற்றில் பிணத்தை உட்கார வைத்து அடக்கம் செய்வார்கள். குகைச் சமாதிகள் அல்லது குடைகல் சமாதிகளில் அடக்கம் செய்வது மூன்றாவது வகை. இவை நான்கடி ஆழமும் எட்டடி குறுக்களவும் உள்ள வையாய்ப் பாறைகளில் குடைபோலக் குழிவாகக் குடைந்து செய்யப்பட்டிருக்கும். மலையாளத்தில் தோளி அல்லது தொளே என்று சொல்லப்படும் குடைகல் குகைகள் நான்காவது வகை. இவை பாறைகளில் செங்குத்தாக வெட்டப்பட்டிருக்கும். கிரீஸ் தேசத்துக்குத் தெற்கேயுள்ள கிரீட் தீவிலும் பழங்கால மக்கள் இத்தகைய குழிகளைத் தோளி என்ற சொல்லாலேயே குறிப்பிட்டு வந்தது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இறுதியாக வட்டமாகக் கட்டப்பட்ட கல்லறை (கற்களால் கட்டப்பட்ட அறைகளில்) அடக்கம் செய்வது மற்றொரு வகை. சில சமயங்களில் ஒரே கல்லறையில் பலரை அடக்கம் செய்வதுமுண்டு. தக்காணத்தில் இருபது பேர்கள் புதைக்கப்பட்ட ஒரு கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பழங் காலத்தில் எகிப்திலும் இவ்வாறு செய்யப்பட்டது என்பதை முன்பு கண்டோம்.

பிற்கால வழக்கம் :

இந்த ஐவகைச் சவ அடக்க முறைகளும் மிகப் பழங் கால வழக்கங்களே என்பதும், பிணங்களை எரிக்கும் ஆரியரது வழக்கம் அப்பொழுது தமிழ்நாட்டில் புகவில்லை

என்பதும் இவற்ருல் தெரிகிறது. ஆனல் பிற்காலத்தில் தோன்றிய மணிமேகலே என்னும் நூலில் இப்பண்டை முறைகளோடு பிணங்களேச் சுடும் முறையும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. "சுடுவோர், இடுவோர், தொடுகுழிப் படுப்போர், தாழ்வயின் அடைப்போர், தாழியில் கவிப் போர்" என்று இவ்விருவகை மக்களது கலப்பு நாகரிகம் அதில் சுட்டப்படுகிறது. 'இடுவோர்' என்பதில் பிணங் களேச் சுடாமலும் புதைக்காமலும், அப்படியே எறிந்து விடுதல் என்னும் வழக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஆரியர் வழக்கமாகும். காடுகளிலோ கங்கை போன்ற ஆறுகளிலோ பிணத்தை எறிந்துவிடும் வழக்கம் அவர்களால் கைக்கொள்ளப்பட்டது. இன்றும் கங்கையில் பிணத்தை எறிவது புனிதமான செயலாகக் கருதப்படுகிறது.

இடைக் காலம்:

முற்கூறப்பட்ட அடக்கம் செய்யும் முறைகளில் பல விதமான பொருள்களும் வைத்து அடக்கம் செய்வ துண்டு என்று கண்டோம். தற்கால நாகரிகத்தில் இவ் வாறு செய்யும் வழக்கம் இல்லே. பயிர்த்தொழில் நாகரிகம் தோன்றும் காலத்திற்குச் சற்று முன்னர், இடைக் காலத்தில், இந்த வழக்கம் ஏற்பட்டது. ஆகவே இதை இடைக்கால நாகரிகம் என்னலாம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் சூலூர் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப் பட்ட ஒரு பெருங் கற்காலக் கல்லறையில் கி. மு. மூன்ரும் நூற்ருண்டிற்குரிய ஒரு நாணயம் இருந்தது. செங்கல் பட்டில் இருந்த ஒரு கல்லறையில் ஓர் இரும்பினலான மீன் தூண்டிலும், நகைகளும், கண்ணுடி வளேயல்களும், பல்லவர்காலத்து (கி. பி. 8-ஆம் நூற்ருண்டு) நாணயங் களும், இருந்தன.

மண்டை அமைப்பு:

வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்த மக்களது மண்டையோட்டைப் பற்றி ஆராய்வதில் வல்லவர்கள் ஆதிச்சநல்லூரிலும், பலுசிஸ்தானத்திலுள்ள நால் என்னுமிடத்திலும், மொகஞ் சதாரோவிலும், வாழ்ந்த சரித்திர காலத்திற்கு முற்பட்ட மக்களின் மண்டைகளெல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன என்றும், ஆகையால் அவர்கள் ஒரே இனத்தவராக இருந்திருக்கக் கூடுமென்றும் கருதுகிறார்கள். மேலும் இலங்கையிலுள்ள வெட்டர்கள் (வேடர்கள்), எகிப்தில் வாழும் மக்கள் முதலியவர்களுடைய மண்டையோடுகளும் இதே இனத்தைச் சேர்ந்த மக்களது மண்டையோட்டைப் போல இருக்கின்றன. முதன் முதலில் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்கள் இப்பொழுது ஆப்ரிக்காவில் வாழும் நீக்ரோக்களுடைய இனக்கூறுகளைப் பெற்றிருந்தனர்.

இனக் கலப்பு:

இவ்விரு நாடுகளும் மிகப் பழங்காலத்தில் ஒரு பெரிய நிலப் பகுதியினால் இணைக்கப்பட்டிருந்தன. ஆகையால் இவர்கள் அனைவரும் ஒரே இனத்தவர் என்பதில் ஐயமில்லை என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். எனினும் இந்தியாவிற்குள் பிற்காலத்தில் மத்திய தரைக்கடல் நாடுகளிலிருந்தோ மத்திய ஆசியாவிலிருந்தோ மக்கள் குடி புகுந்த போது அவர்களால் தென்னிந்தியப் பண்பாடு மாறுதல் அடைந்தது. அப்போது இந்தியா முழுவதிலும் தென்னிந்திய மக்களே (திராவிட இனமே) பரவியிருந்ததால் இவ்விரு இனத்தவர்களும் நீண்ட காலம் உறவாடி இரண்டறக் கலந்துவிட்டார்கள் என்றும் அறிகிறோம். இதனாலேயே ஆரியர்கள் திராவிடர்களைத் தம்மினத்தவரே

என்றும், திராவிடர் என்போர் ஒரு மொழிவழிக் கூட்டமே யன்றித் தனி இனத்தவர் அல்லர் என்றும், அவர்கள் விசுவாமித்திரருடைய வழிவந்தவர்* என்றும் கூறலாயினர். சங்க நூலாகிய பதிற்றுப்பத்திலும் ஆரியாவர்த்தம் என்று குறிக்கப்படும் நிலப்பகுதியில் தண்டகாரணியமும் (தக்காணத்தின் பெரும்பகுதி) அடங்குமென்று கூறப்படுகிறது. பொதுவாக இந்திய இலக்கியங்களில் ஆரியர்களுக்குக்கும் திராவிடர்களுக்கும் வேறுபாடு காணப்படவில்லை. ஹீராஸ் பாதிரியாரும் அக்காலத்தில் திராவிட இனம் என்று ஒன்று தனியாக இருந்தது என்று கூறினும், அவர்கள் ஆரியர்களோடு கலந்து விட்டதால் இன்று அவர்கள் தம் தனித் தன்மையை இழந்து காணப்படுகிறார்கள் என்று கூறுகிறார்.

திராவிடர் எங்கே?

தென்னிந்தியாவில் வாழும் தமிழர்களையும் மலையாளிகளையும் விட வட இந்தியாவில் வாழும் பஞ்சாபிகளையும் காஷ்மீரிகளையுமே உண்மையான திராவிடர் என்று அவர் கூறுகிறார். ஏனெனில் தமிழர்களுடைய இரத்தத்தில் நீக்ரோக்கள் கூறுகளும் மலையாளிகள் இரத்தத்தில் சீன மக்கள் கூறுகளும் கலந்து விட்டனவாம். தென்னிந்தியாவில் வாழும் குடகு மக்களைத் தவிர மற்ற அனைவரும் தனித்திராவிடப் பண்புகள் அற்றவர் என்பது அவர் கருத்து. கீத் என்பவர், திராவிடர்களை வென்ற பின்னர் ஆரியர்கள் தம் கலைகளையும் பண்பாட்டையும் திராவிட இனத்தவரிடம் ஒப்படைத்து விட்டதால் இன்று இந்தியாவானது பெரும்பாலும் திராவிடப் பண்புடையதாக இருக்கின்றதே யன்றி ஆரியப் பண்புடையதாக

* ஆத்திரேய பிராமணம் என்னும் நூலில் இவ்வாறு கூறப்படுகிறது.

இல்லை என்கிறார். ஆரிய வேதங்களிலும் கதைகளிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் கூடத் திராவிடப் பண்புகளும் கூறுகளுமே அதிகமாக இருக்கின்றன என்பது சிலரது கருத்து.

---

10. இறுவாய்

பழம்பொருள் பாதுகாப்பு :

தொல் பொருள் ஆராய்ச்சியினால் மறைந்து போன வரலாற்றுண்மைகள் எங்ஙனம் வெளிப்பட்டுள்ளன என்பதை இதுகாறும் கண்டோம். இவ்வாராய்ச்சியை இன்னமும் பல இடங்களில் தொடர்ந்து இடைவிடாது செய்யவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தோம். ஆனால் அதே சமயத்தில், கிடைத்த தொல்பொருள்களை யெல்லாம் அழியாமல் பாதுகாத்து வைக்க வேண்டிய பணியும் இன்றியமையாதது. ஏனெனின் அவை இன்னும் நமக்கு உணர்த்தக் கூடிய உண்மைகள் பல இருக்கும். இப்பொழுதே அவற்றை முற்றிலும் ஆராய்ந்து எல்லா வற்றையும் அறிந்துவிட முடியாது. பழம்பொருள்கள் கிடைக்கக் கிடைக்க, அவற்றை ஒன்றோடொன்று ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது, அவை சொல்லக்கூடிய கதை இன்னும் அதிகம் இருக்கும் என்பது தெளிவு. ஆகவே அவற்றை யெல்லாம் ஆராய்ச்சிக்காகப் பாதுகாத்து வைக்க வேண்டும். அன்றியும் நம் நாட்டுப் பழம் பெருமையையும் கலைச் சிறப்பையும் யாவரும் கண்டுணர்வதற்கும் அவை காட்சிக்காக வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகையால் நம் தொல்பொருள் துறையே பழம் பொருள்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இயற்கைச் சூழ்நிலை :

தொல் பொருள் பாதுகாப்பு இரு வகைப்படும். ஒன்று ஏற்கனவே நிலத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப் பட்ட பொருள்களைச் சிதையாமலும் அழியாமலும் பாது காப்பது. இதற்காக அப்பொருள்கள் அகழ்ந்தெடுக்கப் பட்ட இடங்களிலேயே இயற்கைச் சூழ்நிலையில் வைத்துப் பாதுகாப்பது, அல்லது வேறிடங்களில் தனியாகக் கண் காட்சிச் சாலைகளில் வைத்துப் பாதுகாப்பது என்ற முறையை நம் தொல் பொருளியல் துறை பின்பற்றி வருகின்றது. நாளந்தா, தட்சசீலம், ஹாரப்பா, சாரநாத், சாஞ்சி, நாகார்ஜுனகொண்டா, மொகஞ்சதாரோ முதலான இடங்களில் அப்பழைய கட்டிடங்களின் பின்ன ணியிலேயே, அங்குக் கிடைத்த பொருள்களைப் பொருத்த மாகக் கண்காட்சிச் சாலையில் வைத்துப் பாதுகாத்து வரு கிறார்கள். இந்த முறை மிகவும் போற்றத் தக்கது. பழைமையான கட்டிடங்கள், அகழப்பட்ட இடங்கள், ஆகியவற்றின் அருகிலேயே அவற்றின் தொடர்பான பொருள்களை வைத்துப் பார்க்கும் போதுதான் அப் பொருள்களின் இயற்கையான அருமையும் பெருமையும் விளங்கும். இவ்வாறன்றி அவற்றை வேறிடங்களில் தனித்த கண் காட்சிச் சாலைகளில் வைத்துப் பார்க்கும் போது அவற்றின் பெருமை முழுவதும் நன்கு தெரியாது.

காட்சிச் சாலைகள் :

நம் நாட்டில் கல்கத்தா, டில்லி,* சென்னை, பம்பாய், லக்னோ, பாட்னா, நாகபுரி, ஹைதராபாத், பெங்களூர்

*டில்லி தேசியக் கண்காட்சிச்சாலையில் இந்தியா, பாகிஸ் தான் ஆகிய இரண்டு நாடுகளிலும் இதுகாறும் கண்டெடுக்கப் பட்ட பழம்பொருள்கள் எல்லாம் இடம் பெற்றுள்ளன. இக் காட்சிச் சாலை நம் நாட்டிற்குப் பெருமை தருவதாகும்.

முதலான பெரிய நகரங்களில் நமது அரசாங்கத்தினர் பல பழம் பொருள்களேயும் கலேச் சின்னங்களேயும் மற்றும் மக்களின் பொது அறிவை வளர்ப்பதற்கான பல பொருள் களேயும் காட்சிக்காகத் திரட்டி வைத்திருக்கின்றனர்கள். அக் கண்காட்சிச் சாலேகள் ஒவ்வொன்றும் அருமையும், பெருமையும் உடையவை என்பதில் ஐயமில்லே. எனினும் அங்குள்ள பழம் பொருள்களேப் பொறுத்தமட்டில், அவை தம் இயற்கையான சூழ்நிலேயிலிருந்து பிரிக்கப்பட்டு இருப்பதால் அவற்றைக் கண்டவுடன் நமது உணர்ச்சி களும் கற்பனேயும் நன்முறையில் உருவாகா என்பது உறுதி.

பழைய நினேவுச் சின்னங்கள் :

பழம்பொருள் பாதுகாப்பில் இரண்டாவது வகை யாவது, பழைய கட்டிடங்கள், கோயில்கள், கலேக் கூடங்கள், குகைக் கோயில்கள் முதலான பழம் நினேவுச் சின்னங்களே அழியாமல் பாதுகாப்பது. நம் நாட்டில் பெரிய நகரங்களிலும் சிற்றூர்களிலும் மலேகளிலும் இத்தகைய எத்துணேயோ கலேச் சிறப்புடைய கட்டிடங்கள் எங்கும் இருக்கின்றன. இவை பழைமையும் பெருமையும் காட்சி இன்பமும் பொருந்தியவை. இத்தகையவற்றை வெளி நாடுகளில் எங்கும் காண்பது அரிது. ஆகவே யாவரும் இவற்றை என்றும் கண்டு களிக்குமாறு பாது காத்து வைக்க வேண்டியது இன்றியமையாதது. நாட்டில் குழப்பம் ஏற்பட்டிருக்கும் பொழுது பகைவர்களாலும், அமைதியான காலத்தில் கூடக் கலேயுணர்ச்சியற்ற முரடர் களாலும், இத்தகைய பழங் கட்டிடங்களும், சிற்பங்களும் தாக்கி அழிக்கப் படுவது இயல்பு. இங்ஙனம் நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் பன்முறை நிகழ்ந்திருப் பதை வரலாறு தெரிவிக்கிறது. ஆகவே இத்தகையவர்

களிடமிருந்து இவற்றை மீட்டு இனி வரும் சந்ததியின ருக்குப் பயன்படுமாறு பாதுகாத்துக் கொடுப்பது நம் கடமை. ஆகவேதான் தொல்பொருளியல் துறையினர் இப்பொருள்களை யெல்லாம் நன்கு பாதுகாத்து வருகின் றனர். இங்ஙனம் இந்தியாவின் தலைநகராகிய டில்லியில் உள்ள செங்கோட்டையும், ஆக்ராவிலுள்ள உலகப் புகழ் பெற்ற தாஜ்மஹாலும், இன்னும் நாடு முழுவதிலுமுள்ள கோயில்களும் கட்டிடங்களும், அஜந்தா, எல்லோரா போன்ற குகைக் கோயில்களும், இப்பொழுது நமது இந்திய அரசாங்கத்தின் தொல்பொருளியல் பிரிவின் பாதுகாப்பில் இருக்கின்றன. டில்லியிலும் ஆக்ராவிலும் உள்ள மொகலாயக் கட்டிடங்களில், மொகலாயர் ஆட்சியில் கிடைத்த கலைப் பொருள்களெல்லாம் பாது காத்து வைக்கப்பட்டுள்ளன. இது போலவே ஒவ்வோர் இராஜ்யத்தின் தலைநகரத்திலும் முக்கிய நகரங்களிலும், பழங் கட்டிடங்களும் நினைவுச் சின்னங்களும் பாதுகாக்கப் பட்டு அவற்றில் பழம் பொருள்களும் காட்சிக்காக வைக் கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் பணி:

பண்டைக் கட்டிடங்களைப் பாதுகாக்கும் சட்டம் நம் நாட்டில் 1904-ஆண்டில் அரசப் பிரதிநிதி கர்ஸான் பிரபு காலத்தில் இயற்றப்பட்டது. நிலத்தை அகழ்ந்து கண்டு பிடிப்பது மட்டு மன்றிக் கண்டு பிடித்த பொருள்களை வகைப்படுத்தி ஆராய்ந்து, போற்றிப் பாதுகாக்க வேண் டியதும் நம் கடமையென்று உணர்ந்து, இதற்காகத் தொல் பொருளியல் துறைக்கு ஒரு தலைவரை அவர் நியமித்தார். மேற் கூறிய சட்டத்தின்படி அரசாங்கத்தின் வசமில்லாத பழங் கட்டிடங்களையும் சின்னங்களையும் கூட

அவற்றிற்கு உரியவர்களிடமிருந்து அது பெற்றுப் பாது காத்து வருகிறது.

காலப் போக்கில் அவை தாமாகவே அழிந்துவிடாமல் அரசாங்கம் அவற்றை அடிக்கடிபழுதுபார்த்துக்கொண்டும் வருகிறது. இவ்வாறெல்லாம் பாதுகாக்கப்பட்டு வருவ தால்தான் இன்று நம் நாட்டில் உள்ள பழங் கட்டிடங்கள், கோயில்கள், நினைவுச் சின்னங்கள் முதலியவை மக்கள் கண்ணுக்கும் மனத்திற்கும் அரு விருந்தாக இருந்து வருகின்றன. தட்சசீலம், மொகஞ்ச தாரோ, ஹாரப்பா முதலிய பகுதிகள் இப்பொழுது நம் நாட்டை விட்டுப் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டன என்றாலும் அவ்விடங் களில் கிடைத்த பல தொல்பொருள்கள் டில்லி, கல்கத்தா முதலிய நகரங்களில் உள்ள அரசாங்கக் கண்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. இக்காலச் சின்னங் களுக்குப் பிறகு மௌரியர் காலத்துச் சின்னங்கள் சிறப்பு வாய்ந்தவை. இவையும் வடநாட்டில் பாட்னா, மதுரா, குவாலியர் முதலிய இடங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

மாண்ட உலகை மீட்டல்:

இதுகாறும் கூறியவற்றால், உலகில் மறைந்திருக்கும் தொல் பொருள் செல்வத்தைப் பற்றியும், அத் தொல் பொருள் செல்வத்தின் மிகுதியைப் பற்றியும், அவற்றின் சிறப்பைப் பற்றியும், அவை சரித்திரப் புனரமைப்பிற்கு எங்ஙனம் உதவுகின்றன என்பது பற்றியும் விரிவாகக் கண்டோம். அன்று உலக மக்கள் நாகரிக மடைந்து உலகை வென்று ஆண்டு வந்தார்கள். அவர்கள் மறைந்த பிறகு அவர்களுடைய மாண்புறு பண்பாட்டின் அறிகுறிகளெல்லாம் மண்ணுக்குள் மறைந்து விட்டன. தொல் பொருள் ஆராய்ச்சியாளர் அவற்றுள் சிலவற்

றையே மீட்டுத் தந்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் கையில் அகப்படாமல் மறைந்திருப்பவை எத்துணையோ உண்டு. அவற்றை யெல்லாம் கண்டு பிடித்த பின்னர் தான் அப் பண்டை மக்கள் வாழ்ந்த உலகங்களை நாம் கண்டவர்களாவோம். இன்னும் மங்கோலியா, துருக்கி, பாரசீகம், சைபீரியா, ஆப்ரிக்கா, கொச்சின் சைனா, சீனா, பசிபிக் தீவுகள் முதலிய பண்டைப் பெருமை பெற்ற பல இடங்கள் ஆராயப்பட்டால் மாண்ட உலகங்கள் மீண்டும் நம் கண் முன்னர் வந்து நிற்கும். உலகத்தின் மீது நாம் கொள்ளும் இவ்விரண்டாவது வெற்றிக்கு அதிக காலம் பிடிக்கலாம். அதற்குப் பொறுமையோடு மனவுறுதியும் மிகுதியாக வேண்டும். தோல்விகளால் தளர்ந்து போகாமல் இருந்தால் தான் தக்க பரிசு கிடைக்கும். தொல் பொருள் இயல் ஆராய்ச்சி ஒரு துப்பறியும் கதை போல நம் மனதைத் தன் வசப்படுத்த வல்லது. அதனால் வெளிப்படும் மனித வரலாறு மிகச் சுவையாக இருக்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை. தொல் பொருளியல் வல்லுநர்களால் சரித்திர ஏடுகள் மிகுதியாகி வரலாறு வளம் பெற்றால் அதைவிட இன்று மனிதனுக்குப் பெரிய வெற்றி இல்லை என்று சொல்லலாம்.

இந்தியாவின் பொறுப்பு :

நம் இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் தொல் பொருளியல் செய்து வரும் வேலை மிகப் பயனுடையதும் பெருமை யளிப்பதும் ஆகும். நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியத் தொல் பொருளியல் பிரிவு நமது பழங் காலச் சரித்திரத்தைப் புலப்படுத்துவதற்கு இயன்ற விடங்களிலெல்லாம் முயன்று அரும் பாடு பட்டு வருவதைக் கண்டு நாம் பெருமிதம் அடைய வேண்டும்.

எனினும் இத் துறையில் நாம் மேலும் சிறப்பாக முன்னேறுவதற்கு நன் முறையில் பயிற்சி பெற்ற பல நிபுணர்கள் வேண்டும். இப் பயிற்சி அளிப்பதற்கான தனிப் பள்ளிகளும் பல வேண்டும். அரசாங்கம் இத் துறையில் மேலும் அதிகப் பொருள் செலவிட வேண்டும். அங்ஙனம் செய்தால்தான் நாம் நமது உண்மைப் பெருமையையும் பழைமையையும் உணர்ந்து தலை நிமிர்ந்து நின்று, உலக மக்கள் அனைவரிலும் நாம் பழைமையானவர் என்பதை எடுத்துக் காட்ட முடியும். இதுவே இன்று நம் தொல் பொருள் இயல் வல்லுநர் முன்பு நிற்கும் பணியும் அவர்களுக்கு உலகின் அறைகூவலும் ஆகும்.

"வாழ்க தொல்பொருள் இயலின் தொண்டு!"

BOOKS CONSULTED

1. Archaeology in India : — Govt. of India.
2. Lost Worlds : — A. T. White.
3. Proto-Indo Mediterranean Culture : — Rev. Fr. Heras.
4. Indus Valley Civilization : — Sir Mortimer Wheeler.
5. Origin and Spread of the Tamils : — V. R. R. Dikshitar.
6. Taxila (3 Vols) : — Sir John Mashall.
7. Nalanda : — H. D. Sankalia.
8. History of India (3 Vols) : — K. A. Nilakanta Sastri.
9. Early History of India : — V. A. Smith.
10. Makers of Civilization : — Waddell.
11. Origin of the Indo-European Peoples : — V. Chokkalingam Pillai.
12. Nagarjunakonda : — Longhurst.
13. Mohenjadaro(3 vols) :— Sir John Marshall.

Cmdg
11 12 20

Cmdg
4 11 90